க ண் ணகி

டாக்டர் மு. வரதராசன்

கண்ணகி

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை – 1

ரூ. 1—8—0

ஜனவரி, 1956

உரிமை ஆசிரியர்க்கு

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை சென்னை-14

முகவுரை

தமிழகத்தின் முழுமணிகளாய் விளங்கி உலகிற்கு ஒளி பரப்பிவருவன சில. அவற்றுள் இங்குக் குறிக்கத் தக்கன இரண்டு : ஒன்று, திருவள்ளுவரின் திருக்குறள்; மற்றொன்று கண்ணகியின் கற்பு.

கண்ணகியின் கற்பு, பழங்காலத்திலேயே தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் பிறநாடுகளிலும் போற்றப்பட்டு விளங்கியது. சேரன் செங்குட்டுவன் பத்தினித்தெய்வத்திற்கு எடுத்த கோயில் போன்றவை அக்காலத்தில் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் அமைந்தன; கயவாகு மன்னன் முதலானவர்களின் முயற்சியால் இலங்கை முதலிய பிற நாடுகளிலும் அமைந்தன. பிற்காலத்தில் கண்ணகிகோயில்கள் கன்னி கோயில்களாகவும் காளி கோயில்களாகவும் துரோபதை கோயில்களாகவும் மாறிவிட்டன. எனினும் சிலப்பதிகாரம் கற்றவரின் உள்ளமெல்லாம் கண்ணகிக்குக் கோயிலாக விளங்கக் காண்கிறோம்.

இத்தகைய சிறப்புடைய கண்ணகியின் பெருமையைப் பலரும் அறிய வேண்டும் என்ற ஆர்வமே இந்நூல் எழுதத் தூண்டியது.

மு. வ.

வரலாறு ... 5

பண்புநலன் ... 41

வரலாறு

ஒரு குரல்

ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூற்று ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலையில் மதுரைநகரத்தின் ஒரு பகுதியில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டது. "இந்த ஊரில் கற்புடைய பெண்கள் இல்லையா? அருளுடைய சான்றோர் இல்லையா? அறம் காக்கும் தெய்வமும் இல்லையா?" என்று அழுது அரற்றுவது கேட்டது. வெளியூரிலிருந்து கணவனோடு மதுரைநகருக்கு வந்தவள் அவள். அன்று மாலையில் கணவனுடைய உடல் வெட்டுண்டு புழுதியில் கிடப்பதைக் கண்டு அலறினாள், அழுதாள், அரற்றினாள். சிறிது நேரத்தில் அந்தப் பழம் பெருமை வாய்ந்த நகரம் தீப்பற்றி எரிந்தது. துயரமே உருவாக அவள் அந்த நகரத்தைவிட்டு நாட்டையும் கடந்து சென்றாள். நெடுந் தொலைவு நடந்து ஒரு குன்றின்மேல் ஏறி வேங்கைமரத்தடியில் நின்று கணவனை நினைந்து ஏங்கினாள். அங்கே அவளுடைய வாழ்க்கை முடிந்தது. இதைக் கண்டவர்கள் மருண்டார்கள், வியந்தார்கள். கேட்டறிந்த வேந்தன் கற்புத் தெய்வம் எனப் போற்றினான்; கோயில் எழுப்பி வழிபட்டான். இதுதான் கண்ணகி என்னும் வீர மங்கையின் உலகறிந்த வாழ்வு; வாழ்மனையை விட்டு வெளிவந்த பின் சிலநாள் வாழ்ந்த வாழ்வு இதுதான்.

திருமணம்

கண்ணகி பிறந்த ஊர் சோழநாட்டுத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம். பிறந்த குடும்பம் அந்த

நகரத்தில் வண்மையாலும் வாணிகத்தாலும் புகழ்பெற்று விளங்கிய மாநாய்கன் குடும்பம். புகுந்த குடும்பமும் அதே நகரத்தில் அரசு மதிக்கும் செல்வச் சிறப்போடு வாழ்ந்த மாசாத்துவான் குடும்பம். அழகிலும் பண்பிலும் சிறந்தவள் என்று மகளிர் எல்லாரும் தொழுது ஏத்துமாறு விளங்கிய அவள், அழகும் புகழும் மிக்க கோவலனுக்கு வாழ்க்கைத்துணைவி ஆனாள்.

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ

(சிலப். மங்கல. 26-29)

மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்என்று இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன்என் பான்மன்னோ

(சிலப். மங்கல. 36-39)

என்று இளங்கோவடிகள் தம் காவியத்தில் அவர்களை அறிமுகப்படுத்தியுள்ளார்.

கண்ணகியின் தந்தை மாநாய்கனும் கோவலன் தந்தை மாசாத்துவானும் அக்காலத்துப் பெருஞ்செல்வர்களாக வாழ்ந்தவர்கள். ஆகையால், மக்களின் திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்தினர். வழக்கம் போல் மகளிர் கூடி வாழ்த்தினர். காதலனைப் பிரியாமல், தழுவும் கை நெகிழாமல் தீது அற்ற வாழ்க்கை வாழவேண்டும் என்று மலர் தூவிக் கண்ணகியை வாழ்த்தினர்.

காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக எனஏத்திச் சின்மலர் கொடுதூவி

அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி ஏற்றினர்

(சிலப். மங்கல. 61-64)

இல்வாழ்க்கை

அந்த வாழ்த்திற்கு ஏற்ப, கண்ணகியும் கோவலனும் காதலராய் உள்ளம் கலந்து வாழ்ந்தனர். உலகமெல்லாம் ஒளி பரப்பி உதவும் ஞாயிறும் திங்களும் ஒருங்கே விளங்கியதுபோல் காதலனும் காதலியும் விளங்கினர். கோவலன் கண்ணகியிடம் அளவற்ற அன்பு – 'தீராக் காதல்' – கொண்டான்.

மாயிரும் பீலி மணிநிற மஞ்சைநின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்,
அன்னம் நன்னுதல் மென்னடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்,
அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின ஆகியும்,
மடநடை மாதுநின் மலர்க்கையின் நீங்காது
உடனுறைவு மரீஇ ஒருவா ஆயின

(சிலப். மனையறம். 53-61)

என்றும்,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ

அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ.

(சிலப். மனையறம். 73-79)

என்றும் கண்ணகியைப் பலவாறு பாராட்டி மகிழ்ந்தான்.

விருந்தோம்புதல், சுற்றம் தழுவுதல், அறவோர்க்கு அளித்தல் ஆகிய இல்லறக் கடமைகளைத் தாமே செய்து சிறப்புறுமாறு கண்ணகியையும் கோவலனையும் முறைப்படி தனிக்குடும்பமாக்கி வைத்தனர் பெற்றோர்.

மறப்பருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்
விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன.

(சிலப். மனையறம். 85-9)

மாறுதல் நேர்ந்தது

"காதலனைப் பிரியாமல் தழுவும் கை நெகிழாமல் தீதின்றி வாழ்க" என்று திருமணத்தில் வாழ்த்தியதன்படி அவர்கள் இனிது வாழ்ந்தது சில ஆண்டுகளின் அளவில் தான். கோவலனுடைய 'தீராக் காதல்' ஒரு நாள் மாறியது.

காவிரிப்பூம்பட்டினத்தில் கணிகையர் குடும்பத்தில் பிறந்து ஆடல் பாடலோடு அழகும் ஒரு கலையாகப் பயின்று கலைச்செல்வியாக வளர்ந்து விளங்கிய மாதவியின் உறவு கோவலனுக்கு ஏற்பட்டநாள், கண்ணகியின் வாழ்க்கையில் கவலை புகுந்த நாளாகும். கண்ணகியிடம் கோவலன் கொண்டிருந்த 'தீராக் காதல்' அன்றுமுதல் மாதவியிடம் மாறியது; 'விடுதல் அறியா விருப்பு' ஆயிற்று. அன்புருவான அவனுடைய நெஞ்சம் குற்றம் அற்ற மனைவியை மறந்தது; வீட்டையும் மறந்தது.

விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்தென்.

(சிலப். அரங். 174-5)

வாடிய நிலை

கண்ணகியின் இல்லறம் வாடியது. அறவோர்க்கு அளித்தல், அந்தணரை ஓம்பல், துறவோரைப் போற்றல், விருந்து எதிர்கொள்ளல் ஆகிய நல்லறப் பேறுகளைக் கண்ணகி இழந்தாள். அவளுடைய அழகிய அடிகள் சிலம்பைத் துறந்தன: இடை மேகலையைத் துறந்தது; காதுகள் குழையைத் துறந்தன; கண்கள் மையைத் துறந்தன; நெற்றி திலகத்தைத் துறந்தது; கூந்தல் எண்ணெயைத் துறந்தது; மங்கல அணி தவிர வேறு அணிகலன் அற்றவள் ஆனாள்; முத்துப் போன்ற பற்களின் முறுவலுக்கோ இடம் இல்லாமற் போயிற்று. சில ஆண்டுகள் காதற்கணவனோடு மகிழ்ந்து இல்லறக் கடமைகளை இனிது ஆற்றி வாழ்ந்தவள், துயருற்றுச் சோர்ந்து கிடக்கலானாள்.

கோவலனுடைய தாய்க்கும் தந்தைக்கும் இது பெருங் கவலை விளைத்தது. அவர்கள் இருவரும் கண்ணகியின் நிலையை அறிந்து வருந்தினர். ஆயினும் கண்ணகி அவர்கள் எதிரே துன்புறுதவள் போல் நடித்தாள். கணவனுடைய பிரிவால் கலங்காதவள் போல் நடித்தாள். மாமியும் மாமனும் அன்பு நிறைந்த உள்ளத்தோடு அருள் கனிந்த மொழிகளால் அவளைத் தேற்றியபோது, அவள் புன்முறுவலோடு, மகிழ்ச்சியோடு தோன்ற முயன்றாள்; ஆயினும், அவள் உள்ளத்தே மிக்கிருந்த துயரம் அந்த முறுவலில் எவ்வாறோ புலப்பட்டது. வேண்டும் என்றே மேற்கொண்ட பொய்யான புன்சிரிப்பாகவே அது தோன்றியது. அதைக் கண்ட மாமனும் மாமியும் உள்ளம் வருந்தினர்.

மாமன் மாமிக்கு எதிரே இவ்வாறு பொய்முறுவல் காட்டிக் கணவனுடைய குற்றத்தையும் மறைத்து அவர்களுடைய கவலையையும் குறைக்க முயன்ற கண்ணகி, தனிமையில் கண்ணீர் விட்டுக் கலங்கியே ஒவ்வொருநாளும் கழித்துவந்தாள். இவ்வாறு பல திங்கள் அல்ல, பல ஆண்டுகளே கழிந்தன.

துயரத்திலும் துணிவு

கண்ணகிக்குத் தேவந்தி என்ற தோழி ஒருத்தி இருந்தாள். அவள் நாள்தோறும் சாத்தன்கோயிலில் வழிபாடு செய்துகொண்டிருந்தாள். கண்ணகியின் துயரை அறிந்து வருந்திய அவள் ஒருநாள் கண்ணகிக்காக அறுகும் சிறுபூளையும் நெல்லோடு தூவி அக்கால வழக்கப்படி வழிபட்டுவிட்டுக் கண்ணகியின் வீட்டுக்குச் சென்றாள். "கண்ணகி! உனக்காக இன்று நான் வழிபாடு செய்து வந்தேன். உன் துயர் தீருமாறு நீ உன் கணவனைப் பெறுவாயாக" என்றாள்.

அதைக் கேட்ட கண்ணகி, "உன் வாழ்த்தினால் பெறக் கூடும். ஆயினும், என் நெஞ்சம் ஐயுறுகிறது தோழி! நான் கண்ட கனவு அப்படிப்பட்டது. என் கணவர் என் கையைப் பற்றிச் செல்ல, நாங்கள் இருவரும் எங்கோ ஒரு பெரிய நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். அந்த ஊரில் அடாத பழி ஒன்றை எங்கள்மேல் சுமத்தினார்கள். அதனால் கணவருக்குத் தீங்கு உற்றது என்று கேட்டு அரசனிடம் சென்று முறையிட்டேன். அதன்பிறகு, அரசனுக்கும் அந்த ஊர்க்கும் கேடு நேர்ந்தது. அதை நான் உன்னிடம் சொல்லமாட்டேன். சொல்வதும் குற்றம் என்று எண்ணுகிறேன். பிறகு யானும் என் கணவரும் அடைந்த நல்வாழ்வை நீ கேட்டால் நகைப்பாகும்" என்றாள். உடனே தேவந்தி அவளை நோக்கி, "தோழி! நீ கணவரால் வெறுக்கப்பட்ட மனைவி அல்லை. ஏதோ

காரணத்தால் சில ஆண்டுகளாக உன்னை மறந்துவாழ்கிறார் உன்கணவர். அவர் உன்னை வெறுத்துப் பிரியவில்லை. முன்பிறப்பில் கணவருக்காக நோற்க வேண்டிய நோன்பு ஒன்று தவறிவிட் டிருப்பாய். அதனால்தான் இந்தப் பிறப்பில் கணவனைப் பிரிந்து வாழவேண்டி நேர்ந்தது. அந்தக் குற்றம் இனித் தீரட்டும். காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில், நெய்தலங்கானலில் சோம குண்டம் சூரிய குண்டம் என்னும் துறைகள் உள்ளன. அவற்றில் நீ முழுகி, காமன் கோயிலைத் தொழ வேண்டும். அவ்வாறு தொழும் பெண்கள் இம்மையில் கணவரைப் பிரியாமல் இனிது வாழ்வார்கள். மறுமையிலும் போக பூமியில் போய்ப் பிறந்து பிரியா வாழ்க்கை பெறுவார்கள். நாம் ஒரு நாள் அங்கே போய் அந்தத் துறைகளில் முழுகி வருவோம்" என்றாள்,

தோழியின் சொல்லைக் கேட்ட கண்ணகி, "அது தக்கது அன்று" என்று சொல்லி வாளா இருந்தாள். கற்புடைய மகளிர்க்குக் கணவரைத் தவிர வேறு தெய்வத்தைத் தொழுதல் ஆகாது என்ற பழந் தமிழ்மரபை உணர்ந்த நெஞ்சத்தினளாய் அவ்வாறு கூறி உடன் படாமல் இருந்தாள்.

புன்முறுவல்

அதன்பிறகு வேலைக்காரி ஒருத்தி கண்ணகியை நோக்கி வந்து, "நம் தலைவர் வருகிறார், வாயிலில் இருக்கிறார்" என்றாள். கோவலன் வந்து பள்ளியறையுள் சென்று தன் துணைவியின் வாடிய மேனியைக் கண்டு அவளுடைய வருத்தத்தை உணர்ந்து வருந்தினான். "வஞ்சனையும் பொய்யும் வாழ்வாகக் கொண்டவளோடு இவ்வளவு காலம் கழித்தமையால், முன்னோர் தேடிக்கொடுத்த பெருஞ்செல்வத்தை அழித்துவிட்டேன். வறுமையுற்றேன். என் வறுமையை எண்ணி நாணுகிறேன்" என்றான்:

சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்எனக்கு

(சிலப். கனாத்திறம். 69-71)

கோவலன் இவ்வாறு தன் குற்றம் உணர்ந்து நொந்து கூறியதைக் கேட்ட கண்ணகி சிறிதும் வருத்தக் குறிப்பு இல்லாமலே புன்முறுவல் காட்டி மலர்ந்த முகத்தோடு, "சிலம்புகள் உள்ளன. அவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்" என்றாள். அதற்குக் கோவலன், "இந்தச் சிலம்பையே இனி முதலாக வைத்து வாணிகம் செய்வேன்; இழந்த அணிகலன்களையும் அழிந்த செல்வத்தையும் இதைக்கொண்டு சேர்க்கப் போகிறேன். என் வறுமை எனக்கு வெட்கம் தருவதால், இந்த நகரத்தை விட்டு மதுரை நகர்க்குச் சென்று வாணிகம் செய்வேன். நீயும் என்னோடு புறப்படு" என்றான்.

நாடு கடத்தல்

அன்று இரவு இவ்வாறு தன் நிலை குறித்து வருந்தி வெளியூர்க்குச் செல்லத் துணிந்த கோவலன், வைகறையிலேயே துணைவியோடு வீட்டைவிட்டுப் புறப்பட்டான். கதிரவன் ஒளியும் கிழக்கு வானத்தில் தோன்றவில்லை, மேற்கு வானத்தில் நிலவும் மறைந்துவிட்டது. எங்கும் ஒரே இருள் பரந்திருந்தது. அந்த இருண்ட வைகறையில் செல்வச் சிறப்பு விளங்கிய அழகிய வீட்டின் வாயிலைக் கடந்து இருவரும் வெளியேறினர். திருமால்கோயிலை வலம் செய்து, பௌத்த நிலையங்களைக் கடந்துபோய் சமணக் கோயிலைத் தொழுது வலங்கொண்டு சோலைகளின் வழியாகச் சென்று காவிரியாறு கடலில் கலக்குமிடத்தையும் கடந்து, மேற்குத் திசை நோக்கி, காவிரியின் வடகரையில் கடந்து சென்றனர். காவிரிக் கரையில் விளங்கிய மலர்ப் பொழில்களில் நுழைந்து ஒரு காதம் நடந்த பிறகு கவுந்தி

யடிகளின் தவப்பள்ளி அமைந்த சோலையை அடைந்தனர். அங்கே கண்ணகி கால் நொந்து வருந்தி இளைத்துப் பெருமூச்சு விட்டவாறே, "மதுரை நகர் எங்கே?" என்று கூரிய பற்கள் தோன்றப் புன்முறுவலோடு கேட்டாள். இவ்வாறு நடந்தறியாமல் மெல்லியளாய் வாழ்ந்த மனைவியின் நிலையை அறிந்த கோவலன், "இன்னும் முப்பது காதம்தான்; அண்மையில்தான் உள்ளது" என்று நகைத்தான். உடனே அவளை அழைத்துக்கொண்டு தவப்பள்ளியில் நுழைந்து அங்கே கவுந்தியடிகள் என்னும் துறவியாரைக் கண்டு வணங்கினான்.

துறவியார் உறவு

அந்தத் துறவியார், அவர்கள் இருவரையும் கண்டு, "நீங்கள் நல்ல தோற்றத்தோடு இருக்கிறீர்கள். நற்குடியில் பிறந்தவர்களாக, உயர்ந்த ஒழுக்கம் உடையவர்களாக, சமய நெறி பிறழாத நோன்பு உடையவர்களாக இருக்கிறீர்கள். ஏதோ துன்புற்றவர்களைப் போல் வாயிலைக் கடந்து இவ்வாறு வரக் காரணம் என்ன?" என்றார்.

"மதுரை நகர்க்குச் செல்ல வேண்டும். அங்குச்சென்று வாணிகம் செய்து பொருள் தேடுவதே என் நோக்கம்" என்றான் கோவலன்.

அதைக் கேட்ட கவுந்தியடிகள் கண்ணகியின் நிலையை உணர்ந்து இரக்கத்தோடு, "இவளுடைய மெல்லிய பாதங்கள் பரல்கற்கள் நிரம்பிய வழியில் எவ்வாறு நடக்க முடியும்? இடையே காடுகளைக் கடந்து செல்ல வேண்டுமே! இவள் எவ்வாறு நடப்பாள்? இந்தப் பயணம் தக்கது அன்று. வேண்டா எனத் தடுத்தாலும் நிற்கமாட்டீர்கள். துறவிகளின் அறவுரைகளைக் கேட்பதற்காகவும் அருகக் கடவுளை வழிபடுவதற்காகவும் மதுரைக்குச் செல்ல வேண்டும் என்ற முயற்சி எனக்கும் உண்டு. ஆகையால் யானும் உங்களுடன் வருவேன்" என்றார். அம்மொழியை

கேட்ட கோவலன் கவுந்தியடிகளைக் கைகூப்பித் தொழுது, "அடிகளே! நீங்களே உடன் வருவீர்களாயின், இவளுடைய துயரம் தீர்ந்துவிட்டது என்பேன்" என்று கூறி மகிழ்ந்தான்.

நற்பண்பு

காவிரியின் தென்கரையில் ஒரு பூம்பொழிலில் தங்கியிருந்தபோது, காமுகன் ஒருவன் புதிய பரத்தை ஒருத்தியோடு அவ்வழியாக வந்தான். வந்தவர்கள் கோவலனையும் கண்ணகியையும் கண்டு, "காமனும் தேவியும்போல் அழகுருவாக விளங்கும் இவர்கள் யாரோ? கேட்டு அறிவோம்" என்று கவுந்தியடிகளை அணுகினர். "தவத்தீர்! உம்முடன் வந்த இவர்கள் யார்?" என்று கேட்டனர். கவுந்தியடிகள் மறுமொழியாக, "இவர்கள் என் மக்கள்; வழிப்பயணத்தால் வருந்தி வந்துள்ளனர்; நீங்கள் அப்பால் செல்லுங்கள்" என்றார். அன்பும் அறமும் உணராத அவர்கள் சிறிதும் எண்ணிப்பாராமல், "இவர்கள் உம் மக்களாயின், உடன்பிறந்தவர்களாக வேண்டும். உடன் பிறந்த ஆணும் பெண்ணும் இவ்வாறு காதலர்போல் கூடியிருப்பதும் உண்டோ? கற்றறிந்த நீர் இவ்வாறு கூறுகிறீரே" என்றனர்.

இக் கடுஞ் சொல் கேட்டதும் கண்ணகி தன்செவிகளை மூடிக்கொண்டு கணவன்முன் நடுக்கமுற்றாள். கவுந்தியடிகள் காமுகரின் கடுஞ்சொல்லை வெறுத்தவராய், "என் பூங்கோதை கண்ணகியை இவர்கள் எள்ளுகிறார்கள் போலும்" என்று எண்ணி, "முள் நிறைந்த காட்டில் கிழ நரிகளாக இவர்கள் மாறுக" எனச் சாபம் இட்டார். அந்தச் சாபத்தால் அவர்கள் நரிகளானதைக் கண்ணகியும் கோவலனும் அறியவில்லை. குள்ள நரிகளாய் ஊளையிடும் ஒலியைக் கேட்ட பிறகே உணர்ந்தனர். உணர்ந்து நடுங்கினர். "நெறியற்ற அவர்கள் தகாதன கூறினர்; அறி

யாமையால் அவ்வாறு செய்தனர் என்று உணர்ந்து அவர்களுக்காக இரக்கம் காட்டல் வேண்டும் ; அவர்கள் செய்த பிழைக்காக இட்ட சாபம் முடியும் காலம் அருளல் வேண்டும் " என்று கவுந்தியடிகளை வேண்டினர். " இன்று அறியாமையால் தவறு செய்து இழி பிறப்பு உற்றவர்கள், உறையூரின் எல்லையில் உள்ள காட்டில் ஒதுங்கிப் பன்னிரண்டு திங்கள் துன்புற்ற பிறகு முன்னைய உருவம் பெறுவார்களாக " என்று சாபவிடை செய்தார்.

வெயில் கடுமை

அங்கங்கே பொழில்களில் தங்கி இளைப்பாறி மதுரைக்கு வழிகேட்டுக்கொண்டு சென்றனர். அது கொடிய வேனில்காலமாதலின், கதிரவன்வெம்மை தாங்க முடியாததாக இருந்தது. பாண்டியன் செங்கோலாட்சியின் எல்லையில் அவனுடைய குடைநிழலில் சென்ற காரணத்தால், வழியில் தீங்கு நேரக் கூடுமே என்ற அச்சமே இல்லாமல் சென்றனர். வழி பறிக்கும் கொள்ளைக் கூட்டத்தாரும் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை.

ஒருநாள் அவர்கள் கொற்றவை கோயில் ஒன்றில் தங்கினர். வெயிலின் கடுமையால் துன்புற்று வழிநடந்து மெல்லிய பாதம் நொந்து சிவக்க வருந்திப் பலமுறை பெருமூச்சு விட்டு வந்த கண்ணகி இளைப்பாற வேண்டும் என்றே அங்குத் தங்கியிருந்தனர். அப்போது ஒருத்தி தெய்வம் ஏறப்பெற்று, கொற்றவைக்குப் பலியிடுமாறு அங்கிருந்த வேடர்களுக்குப் பணித்தாள்.

பிறகு சிறிது நேரம் கழித்து, கண்ணகியைச் சுட்டிக் காட்டி,

இவளோ,
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து

ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி

என்றாள். தெய்வம் ஏறிய நிலையிலே அவள் இவ்வாறு சொன்ன சொற்களைக் கேட்ட கண்ணகி, "இவள் ஏதோ மயங்கிச் சொல்கிறாள்" என்று கணவனுடைய முதுகுப் பக்கமாக ஒதுங்கிப் புன்முறுவல் கொண்டு நின்றாள்.

தெய்வம் வந்து சொன்னவளும் அவளைச் சூழ்ந்து வழி பட்ட வேடர்களும் கொற்றவையின் கோயிலை விட்டு நீங் கிய பிறகு கவுந்தியடிகளும் கோவலனும் மீண்டும் பயணத் தைப் பற்றி எண்ணினர். "இந்தக் கடுமையான வேனில் வெப்பத்தைக் கண்ணகி பொறுக்கமாட்டாள்; பரல்கற்கள் நிறைந்த காட்டுவழியில் இவளுடைய கால்கள் பொருந்த வில்லை. இது செங்கோல்கொண்டு பாண்டியர் காக்கும் நாடு. இங்கே கரடி புலி பாம்பு முதலை இடி முதலியனவும் கொடுமை செய்யா என்று எங்கும் புகழ் பரவியிருக்கிறது. ஆகையால் பகலில் வெயிலில் நடந்து செல்வதைவிட இரவில் நிலவொளியில் நடந்து செல்வதில் தீங்கு ஒன்றும் இருக்காது" என்று எண்ணிக் கதிரவன்மறைவை எதிர் பார்த்துக் காத்திருந்தனர். பாண்டியர்குலத்தின் முதல் வணங்கிய சந்திரன் மெல்லத் தோன்றிப் பால்போன்ற நில வொளியைப் பரப்பினான். தென்றலும் மெல்ல அசைந்து வந்தது. "முத்துமாலையும் சந்தனக் குழம்பும் கழுநீர்மாலை யும் சிறு பசுந்தளிரும் கண்ணகியைச் சேராமல் விட்டுநீங்கி யிருக்கின்றன. திங்களே! நீ மட்டும் உன் நிலவொளியைத் தென்றல் காற்றோடு அவள்மேல் சொரிய விரும்புகிறாயே" என்று நிலமகள் வருந்திப் பெருமூச்சு விட்டு அடங்கியது போல் அமைதி நிலவியது. கோவலன் கண்ணகியின் கை யைத் தன் தோள்மேல் வைத்துக்கொண்டு, "இந்தக் காட்டு வழியில் புலி திரியும்; கோட்டான் கூவும்; கரடி இடிமுழக் கம் செய்யும். இவற்றைக் கேட்கும்போதெல்லாம் நீ அஞ்சி நடுங்காமல் வா" என்று சொல்லிக்கொண்டு நடந்தான்.

வழியெல்லாம் கவுந்தியடிகளின் மாசற்ற அறவுரையைக் கேட்டுக்கொண்டே வழித்தொலைவை மறந்துசென்றனர். மூங்கில் கரிந்து போகும்படியான அந்தப் பாலைக்காடுகளை இரவில் கடந்து சென்றபோது, காட்டுக் கோழி கூவிய குரலைக் கேட்டுப் பொழுது விடிதலை அறிந்தனர்.

மதுரையை நெருங்கல்

இவ்வாறு நடந்து மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது சிலரை வழிகேட்டபோது அவர்கள், "இதோ இப்போது வரும் தென்றல் காற்று, பொதிய மலையிலிருந்து வருவது அன்று; இது மதுரையி லிருந்து வரும் தென்றல்தான். மதுரையில் வாழ்வோரின் பலவகை வாசனைக் குழம்புகளின் மணமும் மலர்மாலை களின் மணமும் கலந்து, சமையலறைப் புகையும் அப்ப வாணிகரின் புகையும் மாடங்களில் எழும் அகில் புகையும் ஓமப் புகையும் ஆகிய பல்வேறு புகைகளும் கலந்து, பாண்டியனுடைய அரண்மனையின் கலவை மணமும் கலந்து வரும் தென்றல் இது. மதுரைமூதூர் இன்னும் நெடுந் தொலைவில் இல்லை; இனிமேல் நீங்கள் தனியே சென்றாலும் தடுப்பவர் இல்லை; அச்சம் இல்லாமல் செல்லலாம்" என்றனர். இதைக் கேட்டதும் மீண்டும் இரவில் நடந்து சென்றனர்; மதுரையை அணுகினர். நகரத்தின் பல் வேறு ஒலியும் செவியில் விழத் தொடங்கியது; நகரத்தை அணுகிவிட்டோம் என்ற மகிழ்ச்சியோடு மேலும் நடந்தனர். பலவகை மரங்களும் செடிகளும் கொடிகளும் பூத்து விளங்கும் வையை ஆற்றின் கரையை அடைந்தனர். மலர்கள் நிறையப் படிந்து நீரை மறைத்துச் செல்லும் ஆற்றின் காட்சி அவர்களின் கண்ணைக் கவர்ந்தது. வையை என்னும் பொய்யாக் குலக்கொடி கண்ணகிக்கு வரும் துன்பத்தை முன்னமே அறிந்து வருந்தி நறுமலரே ஆடை யாகப் போர்த்துக் கண்ணீரை மறைத்து அடக்கியவள்

போல் தோன்றியது. இது புனல் ஓடும் ஆறு அன்று, பூம்புனல் ஓடும் ஆறு என்று சொல்லுமாறு அவ்வளவு மலர்கள் நீர்மேல் படிந்து மிதந்தன. அதை மூவரும் தொழுது போற்றினர். பலவகை ஓடங்கள் இயங்கும் பெரிய துறையில் செல்லாமல், ஒரு பகுதியில் இருந்த மரப் புணையில் ஏறி ஆற்றைக் கடந்து தென்கரையை அடைந் தனர். காவற்காடு சூழ்ந்த அகழியைச் சுற்றிச் சென்றனர். அகழியில் மலர்ந்த குவளையும் ஆம்பலும் தாமரையும் கண்ணகிக்கும் கோவலனுக்கும் வரும் துயரத்தை அறிந் தவை போல் தோன்றின. அந்த மலர்களில் வண்டுகள் ஒலித்த ஒலி அவற்றின் துயரக் குரலாய் விளங்கியது. துய ரத்தால் கண்ணீர்விடுவனபோல் அவை தேன் சொரிந்தன. துயரத்தால் நடுங்குவனபோல் காற்றடிக்க நடுங்கின. மதுரைமதில்மேல் விளங்கிய கொடிகளும், "இந்த நகர்க் குள் வராதீர்கள்" என்று கையால் தடுத்துக் காட்டுபவை போல் அசைந்து ஆடின. வயலும் ஏரியும் சூழ்ந்து தெங்கும் கமுகும் செழித்துள்ள ஊரை அடுத்த வெளிப்பகுதியில் மூவரும் போய்த் தங்கினர்.

துறவியார் அறிவுரை

காலையில் மதுரைக் கோயில்களிலும் பாண்டியன் அரண்மனையிலும் ஒலித்த முரசொலியைக் கேட்டதும் கோவலன் கவுந்தியடிகளை அணுகித் தொழுதான்; "அடிகளே! அறநெறியிலிருந்து தவறி நடப்பவரைப்போல் ஆனேன். துன்பம் அறியாத மனைவி நடுங்கித் துயருறும் படியாகச் செய்தேன்; முன்பின் அறியாத அருவழிகளில் நடந்து வருந்தினேன். சிறுமை உற்றேன். நகரத்திற்குள் சென்று அங்குள்ள வணிகர்க்கு என் நிலையை அறிவித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்து மீள்வேன். அதுவரையில் உங்கள் திருவடிகளே இவளுக்குத் துணை. இவ்வாறு இவளை

இங்கே விட்டுச்செல்வதில் ஏதேனும் தவறு உண்டோ?" என்றான்.

அப்போது அவனுடைய உள்ளத் துயரை அறிந்த கவுந்தியடிகள் தேறுதலாகச் சில அறிவுரைகளைக் கூறினார்: "நீ எவ்வளவோ துன்புற்று வந்தாய் என்பது தெரியும். ஊழ்வினை வலியது. ஊழ்வினை வந்து உருத்தபோது அறியாமை காரணமாகப் பெரிதும் மயங்கி வருந்துபவர் பலர். கற்றறிந்தவர்கள் அந்நிலையில் சோர்ந்து துயருறமாட்டார். துன்பம் எல்லாம் துறந்தோர்க்கு இல்லை. பெண்டிரும் உணவும் இன்பம் என்று கொண்டோர் அளவற்ற துன்பம் உறுவது இன்று மட்டும் அன்று; தொன்றுதொட்டுக் காணப்பட்டுவருகிறது. தந்தையின் ஆணை தாங்கித் துணைவியுடன் காட்டிற்குச் சென்ற இராமன் பட்ட கடுந் துயரம் நீ அறியாததோ? சூதாட்டத்தில் அரசை இழந்து துணைவியுடன் காட்டை அடைந்த நளன் காதல் அற்றவனா? துணைவி குறையுடையவளா? நள்ளிரவில் காட்டில் அவளைப் பிரிந்து நீங்குமாறு செய்தது அவனுடைய ஊழ்வினை அன்றோ? அவனுடைய பிழை என்று கூற முடியுமோ? நல்ல காலமாக, நீ அத்தகைய நிலைக்கு ஆளாகவில்லை. உன் மனைவியைப் பிரியாத பேறு பெற்றிருக்கிறாய். ஆகையால் வருந்த வேண்டா. மதுரையில் தங்குமிடம் தேடி அறிந்து வா" என்று கோவலனைத் தேற்றி அனுப்பினார்.

உடனே கோவலன் மதுரைநகர்க்குள் புகுந்து மக்களின் பலவகை வாழ்க்கையையும் செல்வச் சிறப்பையும் கண்டவாறே தெருவுதோறும் சென்று சுற்றினான். மாட மாளிகைகள் நிறைந்த பல தெருக்களையும் கைத்தொழிற் சிறப்பும் வாணிகப் பெருக்கமும் விளங்கும் கடைத் தெருக்களையும் கண்டு வந்தான். பாண்டியனுடைய தலைநகரத்தின் பெருமையையும் செங்கோலின் நேர்மையையும் குடை நிழலின் தண்மையையும் நினைந்து மகிழ்ந்து திரும்பினான்.

கவுந்தியடிகளிடம் மதுரைநகரின் குற்றம் அற்ற பெருமை யையும் பாண்டியனுடைய வெற்றிச் சிறப்பையும் எடுத் துரைத்து மகிழ்ந்தான்.

கனவும் கலக்கமும்

காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலனுடைய வாழ்க்கைச் சிறப்பைப் பல ஆண்டுகளாகக் கண்டு போற்றிய மாடலன் என்பவன் அப்போது அங்கு வந்து சேர்ந்தான். கோவலன் துணைவியோடு அங்குத் துன்புற்று வந்துள்ளதைக் கண்டு, "பல அறங்களைச் செய்து பல குடும்பங்களைக் காப்பாற் றிய நீ இவ்வாறு துன்புறுகிறாயே! யான் அறிந்த வரை யில் இப்பிறப்பில் நீ செய்தவை எல்லாம் நல்லறச் செயல் களே. அத்தகைய நீ இவ்வாறு காதலியோடு வந்து துன் புற்றது என்ன காரணத்தாலோ? ஒருகால், முற்பிறப்பில் செய்த தீவினையாலோ?" என்று உருகினான்:

இம்மைச் செய்தன யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது.

(சிலப். அடைக்கலக். 91-3)

அப்போது கோவலன், அன்றிரவு தான் கண்ட கனவை எடுத்துரைத்தான். "பாண்டியனுடைய நகரில் ஒரு குறுமகனால் துன்பத்திற்கு உள்ளானேன். கண்ணகி வருந்தும்படியாக நேர்ந்தது. ஆடை பறிக்கப்பட்டு எருமை மேல் ஊர்ந்திடலாயிற்று. துணைவியோடு துறவறம் பூண் டதாகவும், மணிமேகலையைப் புத்தர்பெருமான் முன்னிலைக்கு மாதவி அளித்ததாகவும் நள்ளிரவில் கனவு கண்டேன்" என்றான். உடனே கவுந்தியடிகளும் மாடலனும் அந்தக் கனவால் ஏதேனும் தீங்கு நேருமோ என்று அஞ்சி, "இந்த இடம் துறவிகளுக்கே உரியது. நீ நகருள் வாணிகரிடம்

தெரிவித்தால் போதும். உன் வாய்ச்சொல் கேட்டதும் வரவேற்பர். அங்கே சென்று இருப்பதே நல்லது. கதிரவன் மறைவதற்குமுன் இவ்விடத்தை விட்டுச் சென்றுவிடுக" என்றனர்.

அடைக்கலம்

அப்போது அங்குள்ள ஒரு தெய்வத்திற்குப் பால் படைத்துத் திரும்பும் ஆயர்மகள் மாதரி என்பவள் கவுந்தியடிகளைக் கண்டு அடிவணங்கி நின்றாள். அவளைக் கண்டதும் அந்தத் துறவியார்க்குக் கண்ணகியைக் காக்க வல்ல நற்பண்பு உடையவள் அவள் என்ற எண்ணம் வந்தது. பசுக்களைக் காத்துப் பால் கறந்து வாழும் ஆயர் வாழ்க்கை தீங்கற்ற வாழ்க்கை என்றும், மாதரி முதியவள் தீதற்றவள் நல்லவள் எளியவள் என்றும், கண்ணகியைச் சிலவேளை இருக்கச் செய்வதற்கு ஏற்ற இடம் என்றும் எண்ணினார். உடனே அவளைப் பார்த்து, "மாதரி! நான் சொல்வது ஒன்று கேள். இந்தக் கண்ணகி என்னும் மங்கை உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவள். இவளுடைய மாமனாரின் பெயரைக் கேட்டால், இந்த நகரத்து வாணிகர் பெரும் பொருள் பெற்றவர்போல் மகிழ்ந்து வரவேற்று விருந்தோம்புவர். அத்தகைய பெருஞ் செல்வரின் வீட்டிற்குச் செல்லும்வரைக்கும் இவளை உனக்கு அடைக்கலமாகத் தருகிறேன். இவளை நீராட்டி, கண்ணுக்கு மை தீட்டி, கூந்தல் வாரி மலர் அணிந்து, தூய ஆடை உடுத்தி, ஆயமும் காவலும் தாயும் எல்லாம் நீயே ஆகி இவளைக் காத்திடுவாயாக. என்னோடு வழி நடந்து வந்த இந்த இளங்கொடியைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? இவளுடைய அழகிய மெல்லடிகளை இதுவரையில் நிலமகள் அறிந்ததில்லை. இத்தகையவள் இந்தக் கடுவழி எல்லாம் நடந்துவந்தாள். எவ்வளவு துயருற்று வருந்தியிருப்பாள்! வெயிலும் எவ்வளவு கடுமையாக இருந்தது! ஆயினும்

தன் காதலனுக்காகத் துயருற்று நடுங்கி நாவும் உலர்ந்து வாடினளே அல்லாமல் தன் துயரத்தைப் பொருட்படுத்தவே இல்லை. இவ்வளவு உயர்ந்த பண்பு உடையவள் இவள். மகளிர்க்கு இன்றியமையாத கற்புக் கடமை பூண்ட இவளே தெய்வம். வேறு சிறந்த தெய்வத்தை யாம் கண்டதில்லை. பத்தினிப் பெண்கள் இருந்த நாட்டில் மழை பொய்க்காது, வளம் குன்றாது, அரசு கெடாது என்னும் நன்மொழி உனக்குத் தெரியாதோ? அன்றியும் தவத்தோர் தரும் அடைக்கலம் சிறந்த பயன் தருவதாகும். ஆதலின் இவளை உன்னுடன் அழைத்துச் செல். நீட்டித்து இராதே" என்று கூறி மகிழ்ந்தார்.

கதிரவன் மேற்கே மறையும் வேளை அது. கன்றைத் தேடித் திரும்பும் பசுக்களின் குரல் கேட்டது. ஆயரும் ஆய்ச்சியரும் சூழ்ந்துவர, கொடி ஆடும் மதில்வாயிலைக் கடந்து கண்ணகியுடனும் கோவலனுடனும் மாதரி தன் வீட்டை நோக்கிச் சென்றாள்: கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற பெருமகிழ்ச்சியோடு வீட்டை அடைந்தாள்.

அன்பு வாழ்க்கை

செம்மண் பூசி அழகிய பந்தலும் அமைத்துள்ள சிறிய வீட்டில் கண்ணகியையும் கோவலனையும் இருக்கச் செய்தாள். ஆய்ச்சியர் சிலரோடு கூடிக் கண்ணகிக்கு நீராட்டினாள். தன் மகள் ஐயை என்பவளை அறிமுகப்படுத்தி, "இவள் நீங்கள் இட்டவேலையைச் செய்வாள். உங்களுடன் இருப்பாள். நீங்கள் கவலை இல்லாமல் இங்கே இருக்கலாம். தவம் நிறைந்த அந்த அம்மையார் கவுந்தியடிகள் உங்கள் வழித்துயரை நீக்கித் தீங்கற்ற நல்ல இடத்தில் சேர்த்தினார். இனி உன் கணவராகிய இவர்க்குத் துன்பம் உண்டோ? இவர் நோன்பு உடையவர் ஆதலின் அதற்கு ஏற்பச் சமையல் செய்ய வேண்டும்" என்றாள்.

உடனே சமைப்பதற்குரிய கலங்கள் வந்தன. பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளம்பிஞ்சு, மாம்பழம், வாழைப் பழம், செந்நெல்லரிசி, பால், நெய் எல்லாம் கொடுக்கப் பெற்றாள். பலவகைக் காய்களையும் கண்ணகி அரிந்தாள்; அவளுடைய மெல்லிய விரல்கள் சிவந்தன; அழகிய முகம் வியர்த்தது. சமையலறையில் கடமைகளைத் தொடங்கியதும் கண்கள் சிவந்தன. வைக்கோலால் அடுப்புப் பற்றவைத்த ஐயையுடன் சேர்ந்து தன் சமையல்திறனைக் கொண்டு கணவனுக்கு உரியவற்றைச் சமைத்து முடித்தாள். பனையோலையால் அழகுறப் பின்னிய தடுக்கு ஒன்றைத் தவிசாக இட்டுக் கணவனை உட்காரச் செய்தாள். தன் மலர்க்கையால் கணவனுடைய பாதங்களைக் கழுவி, தரையில் தண்ணீர் தெளித்து மெழுகினாள். குலை ஈன்ற குமரிவாழையின் குருத்தை விரித்து உணவு படைத்தாள். "உணவு உண்ணுங்கள்" என்று விருப்புடன் வேண்டி உண்ணச் செய்தாள். முறைப்படி உணவு முடிந்தது. அன்பு மிக்க அந்தக் காட்சியை மாதரியும் ஐயையும் கண்டு,

ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி ; ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுனை ஆற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்என

(சிலப். கொலை. 46-51)

வியந்து பாராட்டினர்.

காதலின் கனிவு

உண்டு மகிழ்ந்த காதலனுக்குக் கண்ணகி வெற்றிலையும் பாக்கும் கொணர்ந்து தந்தாள். அவளுடைய அன்பையும் அரிய ஒழுக்கத்தையும் கண்ட கோவலன் அப்போது

மனம் கசிந்து உருகினன். கண்ணகியை வருமாறு அழைத்து, " கல் நிறைந்த இந்தக் கடுவழியில் நீ என்னுடன் வந்ததை அறிந்து என் பெற்றோர் மிக வருந்தியிருப்பார்கள். தம் மருமகளால் கொடிய காட்டு வழியில் நடந்து செல்ல எவ்வாறு முடிந்திருக்கும் என்று கலங்கியிருப்பார்கள். எனக்கோ நினைக்கவும் துன்பமாக இருக்கிறது. இது மாயமோ? வல்வினையோ? என் உள்ளம் கலங்குகிறது. எனக்கு ஒன்றும் தெரியவில்லை. பயனற்றவர்களோடு, ஒழுக்கமற்றவர்களோடு, வீண்பேச்சுக்கூட்டத்தில் புகுந்து சிரித்துக் காலம் போக்கினேன். கடமையை மறந்தேன். மெய்ப்பொருள் கண்டவரின் நல்லொழுக்கத்தைக் கைவிட்டேன். எனக்கும் நல்வழி உண்டோ? பெற்ற தாய்தந்தையரின் ஏவலும் தவறினேன். அறிவுடைய வாழ்க்கைத் துணைவியாய் வாய்ந்த உனக்கும் சிறுமை செய்தேன். குற்றத்தைச் சிறிதும் எண்ணிப் பார்க்காமல் மதுரை நகர்க்குப் புறப்படு என்றேன். நீயும் உடனே புறப்பட்டு வந்தாய். என்ன செய்தாய்?'' என்று வருந்தினன் :

கல்அதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடிஎன
வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி
எம்முது குரவர் என்உற் றனர்கொல்?
மாயங் கொல்லோ? வல்வினை கொல்லோ?
யான்உளம் கலங்கி யாவதும் அறியேன்;
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கும் நன்னெறி உண்டோ?
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்;

வழூவெனும் பாரேன் மாநகர் மருங்குஈண்டு
எழுகென எழுந்தாய்; என்செய் தனை?

(சிலப். கொலை. 57-70)

காதலனுடைய கனிவுரையைக் கேட்ட கண்ணகி, "அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்து எதிர்கொள்ளல் ஆகிய நன்மைகளை இழந்த நிலையில் நான் இருந்தேன். அவ்வாறு இருந்த என்னை உம் தாயும் தந்தையும் அன்பு நெஞ்சம் கொண்டு அருள்மொழி கலந்து பாராட்டி என் துயரத்தைப் போக்க முயன்றனர். அவர்கள் எதிரே தோன்றாதவாறு என் துன்பத்தையும் துயரத்தையும் என் உள்ளத்தே ஒளித்து அடக்கினேன். புன்முறுவல் கொண்டு நின்றேன். உள்ளத்தே ஒளித்த நோயும் துன்பமும் சொல்வதுபோல் என் முறுவல் பொய்ப்பட்டுத் தோன்றியது. அந்தப் பொய்முறுவலைக் கண்ட அவர்களின் நெஞ்சம் வருந்தியது. இவ்வாறு பெற்றோர் உள்ளம் வருந்துமாறு தகாத ஒழுக்கம் மேற்கொண்டிருந்தீர். யான் சிறிதும் மாறாத உள்ளத்துடன் வாழ்ந்திருந்தேன். ஆகையால், புறப்படு என்றதும் புறப்பட்டு உடன் வந்தேன்" என்றாள்.

இதைக் கேட்ட கோவலன் மேலும் கசிந்துருகினான். "குடும்பச் சுற்றத்தாரையும் குற்றேவலாளரையும் அடியவரையும் ஆயத்தாரையும் விட்டுப் பிரிந்து தனியே வந்தாய். நாணமும் மடமும் நல்லோர் ஏத்துதலும் கற்புமே பெருந்துணையாகக் கொண்டு என்னுடன் வந்தாய்; என் துயர் களைந்தாய். உன் கால் சிலம்புகளில் ஒன்றை எடுத்துக் கொண்டுபோய் விற்றுவருவேன். அதுவரையில் நீ வருந்தாமலிரு" என்று சொல்லி, அவளை அன்புடன் தழுவி, பக்கத்துணை இல்லாத அவளுடைய தனிமையைக் கண்டு உள்ளம் வெதும்பினான். அப்போது தன் கண்களில் கலங்கி எழுந்த கண்ணீரை அவள் காணாதவாறு மறைத்து, ஆயர் வீட்டைவிட்டு நீங்கி வெளியே சென்றான்.

சிலம்பு விலை கூறல்

உள்ளத்தின் கலக்கத்தால் நடக்கமாட்டாதவனும் நடந்து சென்றான். எதிரே காளை ஒன்று எதிர்த்துப் பாய வந்தது. அது தீய சகுனம் என்பதையும் அவன் அறியவில்லை. அது ஆயர்களுக்கே தெரிந்த சகுனம் ஆகையால், அதைப் பற்றி எண்ணவும் எண்ணாமல் ஒதுங்கி மன்றம் கடந்து நடந்து கடைத்தெருவில் சென்றான். அங்கே நுண்ணிய வேலைத்திறன் உடைய கொல்லர் நூறுபேர் பின்னே வரச் சட்டை அணிந்துசெல்லும் பொற்கொல்லன் ஒருவனை எதிரே கண்டான். "இவன் பாண்டியனின் அரண்மனைக் கொல்லனாக இருக்கக்கூடும்" என்று எண்ணி அவனை அணுகி, "பாண்டியன் தேவிக்குப் பொருத்தமான கால்சிலம்பு உள்ளது. நீ மதிப்பிடுவாயோ?" என்று கேட்டான். "எனக்கு மதிப்பிடத் தெரியாது என்றாலும் வேந்தருடைய முடி முதலான அணிகலன்கள் செய்யத் தெரியும்" என்று அந்தப் பொற்கொல்லன் கைதொழுது கூறினான். உடனே கோவலன் சிலம்பு வைத்திருந்த முடிச்சை அவிழ்த்துக் காட்டினான். மாணிக்கமும் வயிரமும் அழுத்தி உட்கரு அமைத்துச் செய்யப்பட்ட பொன் சிலம்பின் வேலைப்பாட்டை எல்லாம் அந்தக் கொல்லன் நன்கு நோக்கி அறிந்தான். "இந்தச் சிலம்பு கோப்பெருந்தேவிக்கு அல்லாமல் மற்றவர்க்குப் பயனில்லை" என்றான். "நான் முன்னே சென்று வேந்தனுக்குத் தெரிவித்து வருவேன். இது என் சிறு குடில். இதன் அருகே அவ்விடத்தில் அதுவரையில் இருப்பீராக" என்று சென்றான்.

கோவலன் அவனுடைய வீட்டின் அருகே ஓர் இடத்தில் தங்கியிருந்தான். அவனை விட்டுப் பிரிந்து சென்ற பொற்கொல்லன், "யான் திருடிய சிலம்பு பற்றி ஒன்றும் தெரிவதற்கு முன்பே, வெளிநாட்டிலிருந்து வந்துள்ள இந்தப் புதியவன்மேல் குற்றம் சுமத்தி வேந்தனிடம்

சொல்லி நான் தப்பித்துக்கொள்வேன்" என்று தன் உள்ளத்தை ஒளித்துச் சென்றான்.

கொடுஞ் செயல்

அவன் சென்றபோது அரசன்மனம் இருந்த நிலை வேறு. மகளிரின் ஆடலையும் பாடலையும் கேட்டும் கண்டும் பாண்டியன் மகிழ்ந்திருந்ததைக் கோப்பெருந்தேவி உணர்ந்து ஊடல் கொண்டாள். ஊடல் குறிப்பை உள்ளத்தே மறைத்து, தலைநோயால் வருந்துவதுபோல் நடித்து அந்தப்புரத்திற்குச் சென்றுவிட்டாள். ஆடல்பாடல் முடிந்தபின் பாண்டியன் அங்கிருந்து புறப்பட்டு ஏவல் பெண்களோடு கோப்பெருந்தேவி இருந்த இடத்தை நோக்கிச் சென்றுகொண் டிருந்தான். அந்நிலையில்தான் பொற்கொல்லன் அவனை எதிர்ப்பட்டான்; எதிர்ப்பட்டதும் விழுந்து வணங்கி, "கன்னகம் இல்லாமல் கவைக்கோல் இல்லாமல் மந்திர வலிமையைக் கொண்டு வாயில்காவலரை மயக்கித் தூங்கவைத்து அரண்மனைச் சிலம்பைத் திருடிச் சென்ற கள்வன் அகப்பட்டுக்கொண்டான். காவலர்க்குத் தெரியாமல் மெல்ல வந்து என் சிறுகுடிலுக்குள் இருக்கிறான்" என்று கூறினான்.

இதைக் கேட்ட பாண்டியன் சிறிதும் எண்ணிப்பார்க்காமல் காவலாளரைக் கூவி, "அரசியின் கால்சிலம்பு அந்தக் கள்வன்கையில் இருந்தால் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டுவருக" என்று ஏவினான். அரசன் ஆணையை அறிந்ததும் பொற்கொல்லன் தன் எண்ணம் நிறைவேறியதாக மகிழ்ந்தான். கோவலன் இருந்த இடத்திற்குக் காவலாளரை அழைத்துச் சென்றான். கோவலனை நோக்கி "இவர்கள் எல்லோரும் அரசனால் அனுப்பப்பட்டு இங்கு வந்தவர்கள். சிலம்பைக் காண வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி, சிலம்பின் பெருமையைக் காவலாளர்க்குக் காட்டினான். அவர்கள் கோவலனைக் கண்டு, "இவன் இருக்கும்

முறையைப் பார்த்தால் ஒரு குற்றமும் செய்யாதவனாகத் தோன்றுகிறான். கொலைக்கு உரியவன் அல்லன்" என்று கூறினர். அவர்கள் கூறியதை மறுத்துப் பொற்கொல்லன் சிரித்து, கள்வர் திறமை எல்லாம் எடுத்துரைத்து, அவர்களுக்குத் துணைசெய்யும் மந்திரம் மருந்து முதலிய வற்றின் பெருமை எல்லாம் விளக்கினான். அப்போது காவலாளன் ஒருவன் கொல்லன் சொன்னதற்குச் சான்றான நிகழ்ச்சிஒன்றைத் தானே கண்டிருப்பதாகக்கூறி, "கள்வர்களை எப்போதும் நம்பவேமுடியாது. தவறி விட்டுவிட்டால், பிறகு வேந்தன் நம்மை ஒறுப்பான். ஆகையால் நம் கடமை இன்னது என்று எண்ணிச் சொல்லுங்கள்" என்றான். அவன் இவ்வாறு சொல்லிக்கொண் டிருந்தபோதே, அறிவற்ற குடிகாரன் ஒருவன் கையிலிருந்த வாளைக் குற்றமற்ற கோவலன்மேல் வீசினான். வாள் உடம்பினுள் குறுக்கே சென்று வெட்டியது. கோவலன் மண்ணில் சாய்ந்தான். குருதி சொரிந்து பரந்தது. மண்மகள் துயருற்றாள். பாண்டியன் செங்கோல் வளைந்தது.

புலம்பி அரற்றல்

ஆயர்சேரியில் சில தீய அறிகுறிகள் காணப்பட்டன. என்ன தீங்கு வருமோ என்று அஞ்சிய ஆய்ச்சியர் கூடிக் கண்ணனை வழிபட்டுக் குரவைக் கூத்து ஆடினர். அப்போது மாதரி வையையாற்றில் நீராடச் சென்றிருந்தாள். குரவை முடியும் நிலையில் ஊர்ச்செய்தி ஒன்று கேட்டு விரைந்து திரும்பிவந்தாள். வந்தவள் வாய்திறந்து யாதும் கூற முடியாமல் திகைத்தாள். உலைக்களத்துத் துருத்திபோல் பெருமூச்சு விட்டுக் கலங்கி நின்றாள். விருந்தினனாய் வந்த கோவலன் அங்கே இல்லாததைக் கண்டு நெஞ்சம் அலமந்தாள். "ஏதோ வஞ்சம் நடந்திருக்கிறது. ஊரார் சொன்னது என்னவோ தெரியவில்லை, என் நெஞ்சம் மயங்குகிறது" என்று அலறினாள். "அரண்மனைச்

சிலம்பைத் திருடிச் சென்ற கள்வன் என்று கொன்று விட்டார்களாம் '' என்று ஊரார் சொன்ன செய்தியைச் சொன்னாள்.

இந்தக் கொடுஞ் சொல்லைக் கேட்டதும் கண்ணகி,

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன்கேள்வனை
எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்

(சிலப். துன்ப. 30-33)

மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறுஇழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலம்கொண்டு அழிவலோ

(ஷை 36, 37)

மறனொடு திரியும்கோல் மன்னவன் தவறுஇழைப்ப
அறம்எனும்மடவோய்யான் அவலம்கொண்டு அழிவலோ

(ஷை 40, 41)

செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறுஇழைப்ப
இம்மையும் இசைஒரீஇ இனைந்தேங்கி அழிவலோ

(ஷை 44, 45)

என்று அரற்றினாள்.

குரவைக்காக வந்து கூடியிருந்த ஆய்ச்சியர் எல்லோரையும் பார்த்து முறையிட்டாள். வானத்தை நோக்கிச் சூரியனை விளித்தாள்.

'' காய்கதிர்ச் செல்வனே ! கள்வனோ என் கணவன் ?'' என்று அலறினாள். அதற்கு மறுமொழி கூறுவதுபோல் '' உன் கணவன் கள்வன் அல்லன். கள்வன் என்று கொன்ற இந்த ஊர் தீப்பற்றி அழிந்துவிடும் '' என்று ஒரு குரல் கேட்டது.

கேட்டதும் கண்ணகி அந்த இடத்தில் நிற்கவில்லை. இருந்த ஒரு சிலம்பைக் கையில் ஏந்தியவாறு நடந்தாள். "நீதிமுறை இல்லாத அரசனுடைய ஊரில் வாழும் பத்தினிப்பெண்களே! யான் படாத துயரம் பட்டேன். இதுவரையில் யாரும் உறாத துன்பம் உற்றேன். என் கணவன் கள்வன் அல்லன். கால்சிலம்பைக் கவர்ந்து கொள்வதற்காக என் கணவனைக் கொன்றுவிட்டார்கள்; இத்தனை மகளிரின் கண்முன்னே என் காதல்கணவனைக் காண்பேனா? காதல்கணவனைக் கண்டு அவன்வாயால் நல்ல சொல் கேட்பேனா? அவ்வாறு கேட்கத் தவறிவிட்டால், வருந்தத் தக்கவை செய்துவிட்டாள் என்று என்னை எள்ளுங்கள்" என்று பலவாறு அல்லல்பட்டு ஆற்றாது அழுதாள்.

முறையில் அரசன்தன் ஊர்இருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈதொன்று;
பட்டேன் படாத துயரம்; படுகாலை
உற்றேன் உறாதது உறுவனே; ஈதொன்று;
கள்வனோ அல்லன் கணவன்;என் கால்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே; ஈதொன்று;
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே; ஈதொன்று;
காதற் கணவனைக் கண்டால் அவன்வாயில்
தீதறு நல்லுரை கேட்பனே; ஈதொன்று;
தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல்
நோதக்க செய்தாள் என்றுஎள்ளல்; இதுவொன்று
(சிலப். ஊர்சூழ். 3-14)

இவ்வாறு அல்லல்பட்டு அழுத கண்ணகியைக் கண்ட மதுரையார் வருந்திக் கலங்கினர். "இவளுக்கு நீங்காத துன்பத்தைச் செய்துவிட்டு, என்றும் கோணாத செங்கோல்

வளைந்துவிட்டதே! இது என்ன என்பது? பாண்டிய னுடைய வெற்றியும் சிதைந்துவிட்டதே! இது என்ன! மண்குளிரச் செய்யும் வேந்தனுடைய குடைநிழலும் வெம்மை விளைத்துவிட்டதே! இது என்ன! பொன்சிலம் பைக் கையில் ஏந்தி நம் பொருட்டாக இந்தப் புதிய தெய்வம் இங்கே வந்திருக்கிறதே! இது என்ன விந்தை! அழுது அரற்றுகிற இவள் தெய்வம் ஏறியவள்போல் தோன்றுகிறுளே! இது என்ன!" என்று பலரும் பலவாறு சொல்லி வருந்தி நொந்தனர்.

அவர்களுள் சிலர் கோவலன் வெட்டுண்டுவீழ்ந்த இடத் தைக் கண்ணகிக்குக் காட்டினர். குருதியிடையே கிடந்த கோவலனை அவள் கண்டாள்; அவன் அவளைக் காணுத நிலையுற்றுக் கிடந்தான். உலகத்தில் இருளைப் பரப்பிவிட் டுச் சூரியன் மேற்கே மறைந்தான். அந்த மாலையின் மயக் கத்தில் கண்ணகியின் அழுகைப் பூசலால் ஊர் முழுதும் ஒல்லென்ற ஒலி நிறைந்தது.

காலையில் கணவனைத் தழுவி அனுப்பியவள் மாலையில் குருதி சோர அவன் விழுந்துகிடக்கும் கடுந்துயரக் காட்சி யைக் கண்டாள்.

"திக்கற்றுத் தனித்து வருந்தும் என் துயரைக் கண்டும் யான் இடர்ப்படுவதை எண்ணுமல் இருக்கிறீரே! பொன் போன்ற உம் திருமேனி புழுதி படிந்துகிடக்கத் தகுமோ? மன்னனுல் நேர்ந்த இந்தக் கொடுந்துயர்க்குக் காரணம் அறியேன். இதன் காரணம் இன்னது என்று யாரும் எனக்குச் சொல்லாரோ? யாரும் இல்லாத நிலையில் மருண்ட இந்த மாலை நேரத்தில் தனியே இடர்ப்பட்டு வருந்துகிறேனே! மாலைகளுக்குள் மூழ்கி விளங்குதற்கு உரிய உன் மார்பு என் கண்முன்னே தரைப்புழுதியில் மூழ்கிக் கிடக்க நேர்ந்ததே! உலகத்தார் பழி தூற்றுமாறு பாண்டியன் தவறு இழைத்த காரணம் இன்னது என்று அறியேன். யாரேனும் எனக்கு அறிவிக்கமாட்டாரோ?

கண்கள் நீர்சொரியக் கலங்கிநிற்கும் தீவினை உடைய என் கண்முன்னர்க் குருதி சொரிய வெட்டுண்டு புழுதி பட்டுக் கிடக்கிறீரே! மக்கள் பழி தூற்றுமாறு மன்னவன் தவறு இழைத்திடக் காரணமான தீவினை இன்னதென அறியேன்; அறிவிப்பாரும் காணேன்" என்று கணவ னுடலைக் கண்டு ஏங்கினாள்:

என்உறு துயர்கண்டும் இடர்உறும் இவள்என்னீர்;
பொன்உறு நறுமேனி பொடிஆடிக் கிடப்பதோ?
மன்உறு துயர்செய்த மறவினை அறியாதேற்கு
என்உறு வினைகாணா இதுஎன உரையாரோ?
யாரும்இல் மருள்மாலை இடர்உறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ?
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறுஇழைப்ப
ஈர்வதோர் வினைகாணா இதுஎன உரையாரோ?
கண்பொழி புனல்சோரும் கடுவினை உடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடிஆடிக் கிடப்பதோ?
மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறுஇழைப்ப
உண்பதோர் வினைகாணா இதுஎன உரையாரோ?

(சிலப். ஊர்சூழ். 39–50)

"கொண்ட கணவர் உற்ற குறையைத் தாங்கிக் காப் பாற்றும் கற்புடைய மகளிரும் இந்த ஊரில் உள்ளனரோ? ஈன்ற குழந்தையை எடுத்து வளர்க்கும் அருளுடைய சான் றோரும் இந்த ஊரில் உள்ளனரோ? வாளால் கொன்று தவறு இழைத்த பாண்டியனுடைய மதுரையில் தெய்வமும் உள்ளதோ" என்று சொல்லிச் சொல்லி அழுதாள்:

பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?

சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
வைவாளின் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
(சிலப். ஊர்சூழ். 51-59)

இவ்வாறு சொல்லி அழுது கணவனுடைய மார்பைத் தழுவிக்கொள்ள, கோவலன் எழுந்து நின்றான்; "உன் மதிபோன்ற ஒளிமுகம் அழுது அழுது கன்றிவிட்டதே" என்று கண்ணகியின் கண்ணீரைக் கையால் மாற்றினான். அவள் அழுது ஏங்கி நிலத்தில் வீழ்ந்தாள். கணவனுடைய அடிகளைத் தன் கையால் பற்றினாள். கோவலனோ, "நீ இரு" என்று சொல்லிப் பிரிந்தான். அந்நிலையில் கண்ணகி, "இது என்ன மாயமோ? வேறு யாதோ? என்னை மருட்டிய ஒரு தெய்வமோ? எங்குப் போய்த் தேடுவேன்? கணவன்மீது சுமத்தியது வீண்பழி. இது பொய்யுரை. என் உள்ளம் கொதிக்கிறது. இந்தக் கடுஞ்சினம் தணிந்தால் அல்லாமல் கணவனை யான் சென்று கூடப் போவதில்லை. கொடிய வேந்தனைக் கண்டு காரணம் கேட்கப்போகிறேன்" என்றாள்.

மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர் தெய்வங்கொல்
போய்எங்கும் நாடுகேன்? பொருளுரையே இதுஅன்று;
காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்;
தீவேந்தன் தனைக்கண்டுஇத் திறம்கேட்பல் யான்என்றாள்.
(சிலப். ஊர்சூழ். 69-71)

இவ்வாறு சொல்லி அவ்விடத்தை விட்டு எழுந்தாள். எழுந்ததும் தான் முன்கண்ட தீய கனவை நினைந்து நின்றாள்.

கண்ணீர் சொரிந்தாள். கண்ணைத் துடைத்துக்கொண்டு பாண்டியனுடைய அரண்மனை வாயில்முன் சென்ருள்.

வழக்குரைத்தல்

அரண்மனைவாயிலில் காவலனை விளித்தாள். "ஏ வாயில் காவலனே! அறிவற்ற, உணர்வற்ற நெஞ்சத்தோடு நீதிமுறை தவறித் தீங்கு செய்த வேந்தனுடைய வாயில் காவலனே! சிலம்பைக் கையில் ஏந்திய ஒருத்தி, கணவனை இழந்தவள் ஒருத்தி, வாயிலில் நிற்பதாக அறிவிப்பாய்" என்ருள்.

வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறிஅறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணை அரிச் சிலம்புஒன் று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாள்என்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே.

(சிலப். வழக்குரை. 24-29)

வாயில்காவலன் சென்று அரியணையில் இருந்த வேந்தனிடம் தெரிவித்தான். கேட்ட அரசன் "அவள் இங்கே வரட்டும். இங்கே அழைத்துவா" என்ருன். வாயிலோன் காட்டியவாறு கண்ணகி சென்ருள்.

கண்ணகியைக் கண்டதும் வேந்தன், "நீர்பொழியும் கண்களோடு எம் முன்னிலையில் வந்த நீ யார்?" என்ருன். "தேர்ந்து நீதி செலுத்தாத மன்னவ! நீதிமுறைக்காக உடம்பையும் உயிர் போன்ற மகனையும் கொடுத்து அறம் காத்த மன்னர்கள் ஆண்ட காவிரிப்பூம்பட்டினம் என் ஊர். அந்த ஊரில் பழியற்ற சிறப்பும் புகழும் வாய்ந்த பெருங்குடியில் மாசாத்துவானுக்கு மகளுகி, வாழ விரும்பி ஊழ்வினையின் காரணமாக உன் நகர்க்குள்

புகுந்து, என் கால்சிலம்பை விற்க முயன்று உன்னிடம் கொலைக்கு ஆளான கோவலனுடைய மனைவி நான். என் பெயர் கண்ணகி'' என்று தன் நாட்டின் நீதிவழுவா ஆட்சி முறையையும், தன் குடும்பத்தின் குற்றமற்ற பெருமையை யும், தன் கணவன் ஒரு குற்றமும் செய்யாமல் கொல்லப் பட்ட கொடுமையையும் வேந்தன் உள்ளம் சுடுமாறு எடுத் துரைத்தாள் :

தேரா மன்னா ! செப்புவது உடையேன் ;
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே ; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா ! நின்நகர்ப் புகுந்துஈங்கு
என்கால் சிலம்பு பகர்தல்வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பதுஎன் பெயரே.

(சிலப். வழக்குரை. 50-63)

கேட்ட வேந்தன் கலங்கிய உள்ளத்தனாய், "பெண் அணங்கே! கள்வனைக் கொல்வது கடுங்கோல் ஆகாது. அரச நீதி அது'' என்றான். உடனே, கண்ணகி, "நன்மையை ஆராய்ந்து உணராத வேந்தே! என் கணவன் கள்வன் அல்லன் .எனக் காட்டுவேன். இதோ என் கால் சிலம்பில் உள்ளது மாணிக்கம்'' என்றாள். "அப்படியாயின்

அதுவே நல்ல வழி. எம் சிலம்பில் உள்ளது முத்து" என்று வேந்தன் கூறி அதைக் கொண்டுவரச் சொல்லி அவள்முன் வைத்தான். கண்ணகி உடனே தன் கால்சிலம்பை உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கம் தெறித்து வீழ்ந்தது.

சிலம்பினுள் மாணிக்கப் பரல் இருத்தலைக் கண்ட வேந்தன், குடைதாழ்ந்தவனாய், செங்கோல் தளர்ந்தவனாய், "பொற்கொல்லன் சொன்ன சொல்லைக் கேட்டு நீதி தவறிடச் செய்த யானோ அரசன்? கோவலன் கள்வன் அல்லன்; யானே கள்வன். தென்னாட்டு ஆட்சிமுறை என் காலம் தொடங்கிக் கெட்டுவிட்டதே. என் ஆயுள் அழிக" என்று மயங்கி வீழ்ந்தான் :

மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே.

(சிலப். வழக்குரை. 73-83)

காவி உகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடுஆயி னான்.

மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

(சிலப். வழக்குரை.)

மதுரையின் அழிவு

பாண்டிய வேந்தன், கண்ணகியின் கண்ணீரும் கைச் சிலம்பும் விரிந்த கருங்குழலும் கண்டு கூடு ஆனன்; உயிர் தோற்ருன். அரியணையை அடுத்திருந்த கோப்பெருந்தேவி நடுங்கிக் குலைந்தாள். "கணவனை இழந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லிக் காட்ட வழி இல்லையே" என்று மிகக் கலங்கிக் கண்ணகியின் அடிகளைத் தொழுது வீழ்ந்தாள்.

சீற்றம் தணியாத கண்ணகி, கோப்பெருந்தேவியை நோக்கி, "வேந்தன்தேவீ! யான் பாவி! ஒன்றும் அறியேன். ஆயினும் ஒன்று சொல்வேன். முற்பகலில் பிறனுக்குக் கேடு விளைத்தவன் பிற்பகலில் தான் கெடுவது திண்ணம். பத்தினிப் பெண்கள் பலர் பிறந்து வாழ்ந்த ஊர் என்னுடைய ஊர். உண்மையாகவே யானும் ஒரு பத்தினியாக இருந்தால், அரசோடு மதுரையையும் ஒழிப்பேன். இதை நீ காண்பாய்" என்று வஞ்சினம் கூறினாள்.

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்;
பட்டாங்கு யானும்ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்;என்
பட்டிமையும் காண்குறுவாய் நீ.

(சிலப். வஞ்சின. 35-8)

இவ்வாறு கூறி அவ்விடத்தைவிட்டு அப்பால் சென்று, மதுரைநகரத்து மாதர்களே! மைந்தர்களே! கடவுளரே! தவத்தோரே! கேளுங்கள். என் காதலனுக்குத் தீங்கு இழைத்த வேந்தனுடைய இந்த ஊரின்மேல் சீற்றம் கொண்டேன். யானே ஒரு குற்றமும் அறியேன்" என்று கொதித்தாள். அவள் உள்ளத்தின் கொதிப்பு ஊரைச் சுடும் நெருப்பு ஆயிற்று. ஊர் நெருப்புக்கு இரையாயிற்று.

"இவள் எந்த நாட்டாளோ? யாருடைய மகளோ? இந்த நாட்டில் இந்த ஊருக்கு வந்து கணவனை இழந்து

வேந்தனைச் சிலம்பால் வென்று ஊரையும் கொளுத்தினுள்"
என்று பலரும் பேசிக்கொண்டனர்.

> **எந்நாட் டாள்கொல் ? யார்மகள் கொல்லோ ?**
> **இந்நாட்டு இவ்வூர் இறைவனை இழந்து**
> **தேரா மன்னனைச் சிலம்பின் வென்றுஇவ்**
> **வூர்தீ ஊட்டிய ஒருமகள்.**
>
> (சிலப். அழற்படு. 143-6)

மதுரைமாநகரின் சிறப்பெல்லாம் போயின. அந்தி மாலையில் நடைபெறும் திருவிழா, மறை முழக்கம், செந்தீ வேள்வி, தெய்வ வழிபாடு, வீடுகளில் விளக்கேற்றல், மாலை வழிபாடு இவற்ருேடு வேளைதோறும் தவருமல் ஒலித்து வந்த முரசொலி எல்லாம் இல்லாமற் போயின. அத்தகைய பாழ்நிலை அடைந்த நகரத்தின் தெருக்களிலும் தெருச்சந்தி களிலும் கண்ணகி அலைந்தாள், கவலையுற்ருள், திரிந்தாள், மயங்கினுள்.

அப்போது மதுரைத் தெய்வம் அவளை அணுகி, அவளுடைய முன்பிறப்பில் நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்து, கோவலனுடைய கொடுவினையை விளக்கி, "நீ உன் கணவனைப் பதினுன்கு நாள் கழித்துத் தெய்வ யாக்கையுடன் காண்பாய்" என்று அறிவித்தபின், கண்ணகியின் சீற்றம் தணிந்தது.

முடிவு

"என் கணவனைக் கண்ட பிறகே அல்லாமல் அது வரையில் எங்கும் உட்கார்ந்திருக்க மாட்டேன், நிற்கவும் மாட்டேன்" என்று கண்ணகி மேற்குத் திசை நோக்கி நடந்தாள். நகரின் எல்லையில் இருந்த கொற்றவையின் கோயிலின் வாயிலில் தன் பொன்வளையல்களைத் தகர்த்து விட்டாள். அங்கே உயர்ந்து விளங்கிய நகர வாயிலை நோக்கியதும், அதுபோன்ற ஒரு வாயிலில் கணவனும்

தானுமாக நகருக்குள் நுழைந்த காட்சி நினைவுக்கு வரவே அதை நினைத்துக் கலங்கினாள். "கிழக்கு வாயிலில் நுழைந்தபோது கணவனோடு வந்தேன். மேற்கு வாயில் வழியாக நீங்கும்போது கணவனை இழந்தவளாய்ச் செல்கிறேனே" என்று துயருற்றாள். இரவும் பகலும் அறியாமல் மயங்கிவளாய்ச் சோர்ந்து நடந்தாள். வையை ஆற்றின் கரை ஓரமாகவே சென்றாள். மேடும் பள்ளமும் அறிந்து நடக்கவும் முடியவில்லை. ஒரே ஏக்கத்தோடு மேட்டிலும் பள்ளத்திலும் கால் வைத்துத் தடுமாறி நடந்து சென்றாள். திருச்செங்குன்று என்னும் குன்றத்தை அடைந்து அடிவைத்து ஏறிக் குன்றின்மேல் இருந்த ஒரு வேங்கைமரத்து நிழலில், "யான் ஒரு பாவி!" என்று ஏங்கியவாறு நின்றாள். பதினான்கு நாள் கழிந்த பிறகு, தேவர்கள் தன் பெயரை வாழ்த்திப் புகழ்ந்து மலர்மாரி பெய்து போற்ற, கோவலனோடு வானவூர்தி ஏறிச் சென்றாள் கண்ணகி.

தமிழகத்தின் மூன்று நாடுகளுள், சோழ நாட்டில் கண்ணகி பிறந்து வாழ்ந்து வருந்தினாள்; பாண்டியநாட்டில் பெருந்துயருற்றுப் புலம்பிப் போராடினாள் ; சேரநாட்டில் சோர்ந்து அமைதியுற்றுப் புகழுருப் பெற்றாள்.

நல்ல ஆட்சிமுறையில்தான் மக்களுக்கு நல்லொழுக்கம் நிலவும், மகளிர்க்குக் கற்பு விளங்கும் என்பதைச் சோழ வேந்தனால் விளங்கச் செய்தாள் ; நீதிமுறை தவறிச் செங்கோல் வளைந்தால் தமிழ்அரசர் உயிரை இழப்பர் என்பதைப் பாண்டிய வேந்தனால் விளங்கச் செய்தாள் ; வீரத்தால் வஞ்சினம் கூறி மேற்கொண்ட கடமையைச் செய்துமுடித்தால் அல்லாமல் தமிழ்மன்னரின் சினம் தணியாது என்பதைச் சேர வேந்தனால் விளங்கச் செய்தாள் :

அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச்சிற வாதுஎனப்

பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழுது ஏத்தும் பத்தினி ஆதலின்
ஆர்புனை சென்னி அரசற்கு அளித்துச்,
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலங் காவல் மன்னவற்கு அளித்து,
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவற்கு அளித்து.

(சிலப். நடுகல். 207-217)

பண்புநலன்

ஆய்ந்தறியும் முறை

இதுவரையில் சிலப்பதிகாரத்தில் சிலபகுதிகள் உணர்ந் தறியப்பட்டன. இனி அவற்றை ஆய்ந்தறிய வேண்டும்.

இலக்கியக் கல்வி பயன்பட வேண்டுமானால், இலக்கி யத்தை முதலில் உணர்ந்தறியவேண்டும்; பிறகு ஆய்ந்தறிய வேண்டும். அப்போதுதான் இலக்கியத்தை நன்கு கற்கவும் முடியும்; கற்றதனால் பயன் பெறவும் முடியும்.

உணர்ந்தறிவது என்பது இதயம் கொண்டு இலக்கி யத்தை உணர்வது; புலவர் உணர்ந்தவாறே கற்பவரும் உணர முயல்வது; நூல் எழுதிய காலத்துச் சூழ்நிலைக்குள் புகுந்துநின்று புலவர் காட்டியவாறு காண்பது; ஏன் எவ்வாறு என்ற கேள்விகள் அறியாமல் தன்னை மறந்து கற்பது; அறிவு குற்றேவல் செய்ய, உணர்வு முன்னின்று உணர்த்த, உணர்ந்து கற்கும் முறையாகும் இது.

ஆய்ந்தறிவது என்பது மூளைகொண்டு நுணுகி நுணுகி இலக்கியத்தைக் கற்பது; புலவர் உணர்த்தியவற்றை இன் றைய உண்மைகளைக்கொண்டு சீர்தூக்கிக் கற்பது; அவர் காலத்து வாழ்க்கையை இக்காலத்து வாழ்க்கையோடு ஒப் பிட்டு ஆராய்வது; எதற்கும் காரண காரியப் பொருத்தம் கண்டு கற்பது; அறிவு தலைமை தாங்க, உணர்வு உற்றுழி உதவ, ஆராய்ந்து கற்கும் முறையாகும் இது.

முதல்முறை கைவந்த பிறகே இரண்டாம் முறை பெரிதும் பயன்படும். ஓர் இலக்கியத்தை உணர்ந்தறியாமல் அதை ஆய்ந்தறியப் புகுவதால் பயனில்லை. அவ்வாறு ஆய்ந்தறிவது ஓர் ஊரைக் கண்டறியாதவர் அதன்

பெருமை சிறுமைகளைச் சீர்தூக்குவதைப் போன்ற வீண் முயற்சியே ஆகும்; குறையுடைய முயற்சியே ஆகும். அதனால், கண்ணகியின் பண்புநலன்களை ஆராய முற்படுவோர், இளங்கோவடிகள் காட்டுமாறு கண்ணகியைக் காண வேண்டும்; அதற்காகச் சிலப்பதிகாரத்தைச் சில முறையேனும் உணர்ந்தறிய வேண்டும்; பிறகே ஆராய்ச்சியில் தலைப்பட வேண்டும்.

உணர்ந்தறிவதோடு மட்டும் நிற்பதாலும் பெரும் பயன் இல்லை. கலை கலைக்காகவே என்ற கொள்கையர், இலக்கியத்தை ஆய்ந்தறியத் தொடங்காமல் உணர்ந்தறிவதே போதும் என்று இருப்பர். இலக்கியக் கல்வி அவர்களுக்கு ஒருவகை மயக்கப் (போதைப்) பொருளாய்ப் பொழுது போக்க உதவுமே அன்றி, வாழ்க்கைத் துணையாய்ப் பண்படுத்த உதவாது. ஆதலின் சிலப்பதிகாரத்தைச் சில முறையோ பலமுறையோ பயின்று கண்ணகியின் மாண்பை உணர்வதுமட்டும் போதாது; இக்கால வாழ்க்கையை ஒட்டி ஆராய்ந்து வாழ்வின் உண்மைகளைக் காண முற்பட வேண்டும்.

உளவியலையும் உயிரியலையும் (Psychology and Philosophy) எவ்வளவு நூல்களால் கற்றுத் தேர்ந்தாலும் தெளிவு பிறந்திடாது. வாழ்க்கையனுபவத்தில் அவற்றின் உண்மைகளைக் கண்டு உணர்ந்தபிறகே தெளிவு பிறக்கும். ஆயின், நூற்கல்விக்கும் வாழ்க்கையனுபவத்திற்கும் இடையே நின்று இணைத்துத் தெளிவு ஏற்படச் செய்வது இலக்கியக் கல்வியாகும். பூதநூலையும் வேதிநூலையும் (Physics and Chemistry) எவ்வளவு கற்றாலும் உண்மையறிவு பிறப்பதில்லை. ஆனால் தொழிற்சாலையில் அந்த உண்மைகளை அனுபவ வாயிலாகக் காணும்போதே தெளிவு பிறக்கும். தொழிற்சாலையில் அவற்றின் பயனைக் காண்பதற்கு முன், கற்ற நூல்களை ஆய்வதற்கு ஆய்வுக்களம் (Laboratory) இன்றியமையாதது. அதுபோலவே, உளவியல்

உயிரியல் உண்மைகளை ஆய்ந்துணர இலக்கியக் கல்வி பயன்படுவதாகும். எதிர்காலத்தில் இலக்கியம் ஒரு கலையாகப் போற்றப்படுமானால், அது இவ்வகைப் பயன் கருதியே போற்றப்படும். இன்றேல் இலக்கியம் பொழுது போக்குக்கு உரியதாக மட்டும் நின்றுவிடின், அது பயனற்ற கலையாகப் பழித்து ஒதுக்கவும்படும்.

ஆகவே, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் வாழ்வை வளமாக்கும் காவியமாக விளங்க வேண்டுமானால், உணர்ந்தறியும் முறையோடு ஆய்ந்தறியும் முறையும் பெருகவேண்டும். அவ்வாறு ஆய்ந்தறியும்போது காய்தல் உவத்தல் அகற்றி நிற்க வேண்டும்; காலப்போக்கால் நேர்ந்துள்ள குறைகளை ஒதுக்கிவைக்கத் துணியவேண்டும்; குணம் நாடுவதோடு அமையாமல் குற்றமும் நாடவேண்டும்; மிகையாக உள்ள குணத்தைமட்டும் போற்றிப் பயன்பெறவேண்டும்.

ஒதுக்கல் வேண்டும்

எடுத்துக்காட்டாக, சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் ஊழ்வினையின் பேராற்றலை அறிஞர்கள் அதற்குரிய அளவும் கடந்து வலியுறுத்திவந்தனர். ஏனைய உண்மைகளை விட அதற்கு ஒரு தனிச் சிறப்பும் தரப்பட்டுவந்தது. இளங்கோவடிகளும் தம் நூலில் பல இடங்களிலும் திரும்பத் திரும்ப ஊழ்வினையை விளக்கியே கதை நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்கிறார். கோவலன் மாதவியை விட்டுப் பிரிதல் முதல் மதுரை தீப்பற்றி எரிதல் வரையில் எல்லா நிகழ்ச்சிகளும் முன்னரே வரையறுத்த திட்டங்களின்படி நிகழ்ந்தனவாக விளக்கப்படுகின்றன. ஊழ்வினையின் அமைப்பின்படி அல்லாமல் ஒன்றுமே நிகழவில்லை, நிகழ முடியாது என்று உணர்த்துவது இளங்கோவடிகளுக்கு ஒரு நோக்கமாகவும் இருந்திருக்கிறது.

> **அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்**
> **உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**

ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்

(பதிகம், 55-60)

என்று பதிகமும் ஊழ்வினையின் வலிமையை நூலின் குறிக்கோள்களுள் ஒன்றாக எடுத்துரைக்கிறது.

ஆயினும், இன்று இலக்கிய ஆராய்ச்சி செய்பவர், ஊழ்வினையில் நம்பிக்கை கொண்டவராயினும், கொள்ளாதவராயினும், காவியத் தலைவன் தலைவி முதலானவரின் வாழ்வு தாழ்வுகளுக்கு அவரவர்களின் பண்புநலன்களும் சூழ்நிலைகளும் காரணம் என்று கொண்டுதான் ஆராய வேண்டும். இன்றேல், இலக்கிய ஆராய்ச்சிக்கே இடம் இல்லை. குறை எங்குக் காணினும் அதற்குக் காரணம் ஊழ்வினை என்று கூறிச் செல்வதாயின் ஆராய்ச்சியில் ஒருபடியும் முன்னேற முடியாது. ஆகவே, மக்கட் பண்பை ஆராய்ந்து வாழ்க்கை உண்மைகளைத் தெளிய விரும்புவோர், அதற்கு இலக்கியத்தின் துணையை நாடுவராயின், ஆய்ந்தறியும் வரையிலேனும் ஊழ்வினையை ஒருபக்கம் ஒதுக்கிவைத்தல் வேண்டும்.

இவ்வாறே இக்காலத்து ஆராய்ச்சிக்கு எட்டாத பகுதியே ஆயினும், ஒவ்வாத பகுதியே ஆயினும், அவற்றையும் ஒதுக்க வேண்டும். அவற்றை மறுப்பதா உடன்படுவதா என்பதைத் தனி ஆராய்ச்சி ஆக்கிக்கொண்டு, இலக்கிய ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில் ஒதுக்கிவைத்தல் நன்மை பயக்கும்.

இத்தகைய முறையில் ஆராய்ந்தால்தான் இளங்கோவடிகளின் உள்ளம் உணர்ந்த உண்மைகளைக் காணவும் முடியும்; கண்ணகியின் பண்புநலன்களைப் பற்றித் தெளிவு பெறவும் முடியும்.

காதலரா ?

கோவலன் கண்ணகியோடு வாழ்ந்த வாழ்வு சில ஆண்டுகள் வரையிலேயே ஆகும். பிரிந்து வாழ்ந்த காலம் பல ஆண்டுக ளாகும்.

வேறுபட்டு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமொடு ஒருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையின்
காண்தகு சிறப்பின் கண்ணகி தனக்கென்

(சிலப். மனையறம். 87-90)

என்று இளங்கோவடிகள் அவர்களின் இல்லறவாழ்க்கை சில ஆண்டுகள் நடைபெற்றதாகக் கூறியுள்ளார். மாதவியிடம் கோவலன் வாழ்ந்த வாழ்க்கையில் பல ஆண்டுகள் கழிந்தன என்பதை மணிமேகலை பிறந்து வளர்ந்து பருவம் எய்திய வரலாறு தெரிவிக்கிறது.

இவ்வாறு மனைவியோடு சில ஆண்டுகள் வாழ்ந்து, அவளைத் துறந்து மறந்து பல ஆண்டுகள் கழித்தான் என்றால், அவன் மனைவியிடம் அன்பு கொண்டிருந்தான் என்று கூறுவது ஐயத்திற்கு இடமாகும்.

மணமனை புக்கு மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தென்

(சிலப். அரங்கேற்று. 172-175)

என்ற அடிகளால், மாதவியை அடைந்த அன்று முதல்கொண்டே அவளை விட்டுப் பிரிய முடியாத விருப்பம் நிறைந்தவன் ஆனான் என்றும், மனைவியையும் வீட்டையும் மறந்துவிட்டான் என்றும் அறிகிறோம். அவ்வாறாயின்

அவன் கண்ணகியிடத்து அன்புகொண்டு வாழ்ந்திருந்தான் என்று கூறமுடியுமா? அந்தச் சில ஆண்டுகளில் அன்போடு வாழ்ந்திருப்பின், திடீரென ஒருநாள் வேறு உறவைப் பற்றியதும் அவளை எளிதில் மறக்கவும் துறக்கவும் முடிந்திருக்குமா? அத்தகையவன் திருமணமான தொடக்கத்திலும் அன்பு கொண்டிருந்தான் என்று கூறமுடியுமா? கண்ணகியையும் கோவலனையும் காதலர் என்று கூறவும் முடியுமா?

ஆயின், இளங்கோவடிகள் அவர்களை அறிமுகப்படுத்தல் முதல் இறுதிவரையிலும் அன்புடைய காதலர் என்றே கூறியுள்ளார்:

அவளுந்தான்...
காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ

அவனுந்தான்...காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன்என் பான்
[மன்னோ

(சிலப். மங்கல. 25-39)

என்று பொதுவாகக் காதலர் என்று கூறுவதுமட்டும் அன்றி, மகளிர் மங்கலவாழ்த்துக் கூறும்போதும், "காதலனைப் பிரியாமல் வாழ்க" என்று வாழ்த்துவதாகவே கூறியுள்ளார்:

காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக... (ஷை 61)

கோவலன் கண்ணகியோடு மகிழ்ந்து அவளைப் பாராட்டும்போதும், காதல் மிகுதியால்—தீராக் காதலால்—அவள் முகம் நோக்கிப் பாராட்டினான்:

தீராக் காதலின் திருமுகம் நோக்கிக்
கோவலன் கூறும்ஓர் குறியாக் கட்டுரை.

(சிலப். மனையறம். 36-37)

அப்போது அவன் பாராட்டிக் கூறும் சொற்களும் அவனுடைய கலையுணர்வைமட்டும் அல்லாமல் காதலுணர்வையும் காட்டுவனவாகவே உள்ளன :

மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்,
அன்னம் நன்னுதல் மென்னடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்,
அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின ஆகியும்,
மடநடை மாது ! நின் மலர்க்கையின் நீங்காது
உடனுறைவு மரீஇ ஒருவா ஆயின.

(ஷை 53-61)

"மயில் உன் சாயலுக்குத் தோற்று ஓடிக் காட்டை அடைந்தது. அன்னம் உன் நடையழகுக்குத் தோல்வியுற்று மருதநிலத்துத் தாமரையை அடைந்துவிட்டது. உன் மொழி குழலிசையும் யாழிசையும் அவற்றோடு அமிழ்தும் குழைத்தாற் போன்ற இனிமை உடையது. ஆகையால் கிளி உன் மொழிக்குத் தோற்று வருந்தியது. இவ்வாறு இவை ஒவ்வொன்றாக உன்னுடன் இருக்க நாணி நீங்கிச் சென்றுவிட்டன" என்று கலையுள்ளத்தோடு கண்ணகியின் அழகைப் பாராட்டினான். மேலும்,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ (ஷை 73-79)

என்று அவன் பாராட்டும் சொற்களில் வற்றாத அன்பு வாழும் உள்ளத்தைக் காண்கிறோம். உள்ளொன்று புற மொன்றாக என்றும் நடந்தறியாத, நடக்கவும் அறியாத கோவலன் வாயில்வரும் சொற்கள் உள்ளன்பையே காட்டு வன என்பதில் ஐயமில்லை. அதனால்தான் இளங்கோ வடிகள், "தீராக் காதலால்" கூறும் சொற்கள் என்றும், "உலவாக் கட்டுரை" என்றும் குறிப்பிடுகிறார். உள்ளன்பு இல்லையாயின், வாழ்ந்த சில ஆண்டுகளிலும் மகிழ்ச்சியான வாழ்வு இருந்திருக்க முடியாது. ஆனால், கோவலன் மகிழ்ந்து வாழ்ந்ததாகவே ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

> தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
> வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வுழிநாள்.
>
> (ஷை 82-3)

உள்ளன்பு மிக்க காதலர் வாழ்வே அவர்கள் வாழ்வு என்னும் கருத்தாலேயே அவர்களின் இல்வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது, "வடு நீங்கு சிறப்பு" உடையது என்கிறார் ஆசிரியர்.

அவர்கள் இருவரும் இல்லிருந்து வாழ்ந்ததை உவமை வாயிலாகக் குறிப்பிடும்போதும், உலகிற்கு ஒளி உதவி விளங்கும் கதிரவனும் திங்களும் போல் இருந்து வாழ்ந் தனர் என்கிறார் :

> முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
> கதிர்ஒருங்கு இருந்த காட்சி போல (ஷை 30-31)

இந்த உவமை அவர்கள் வாழ்க்கையின் பெருமையை விளக்குகிறது.

எது காதல் ?

காதல் என்னும் உயர்ந்த பண்பு இன்பக் காலத்தில் விளங்குவதைவிடத் துன்பக்காலத்தில் மிக்க ஒளி வீசி

விளங்கும். மேலே கண்டவற்ருல் இன்பக் காலத்தில் காதலர்களாக அவர்கள் வாழ்ந்த வாழ்வை அறிந்தோம். இனித் துன்பக் காலத்தில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை உணர்ந்து காதல் சிறப்பை அறியலாம்.

காதலர், ஒருவர் உணர்வை மற்றவர் பகிர்ந்துகொள்ள வல்லவர். அன்பு அருள் முதலான எல்லா நல்லுணர்வி லும் அந்தத் தன்மை உண்டு. எனினும், அங்கெல்லாம் ஒத்த இருவர் ஒரு நிலேயாய்ப் பகிர்ந்துகொள்வதைக் காணமுடியாது. குழந்தையின் உள்ளத்து உணர்வைத் தாய் ஏற்று உணர்வதுபோல், தாயின் உள்ளத்தைக் குழந்தை உணர்வதில்லே. அன்னப் பறவையின் துயரைப் புத்தர் ஏற்று உணர்ந்ததைப்போல், புத்தரின் உணர்வை அன்னம் உற்றதில்லே. காதலரின் வாழ்வில் மட்டுமே இருவர் ஒத்த நிலேயில் நின்று ஒருவர் உணர்வை மற்றவர் ஏற்றுக்கொள் ளும் சிறப்பு உள்ளது. அதனுலேயே உலகில் பெரும்பா லோர் கணவன் மனேவி என வாழும் வாழ்வைக் கைக்கிளே என்றும் பெருந்திணே என்றும் ஒதுக்கி, ஒத்த உணர்வு உடைய காதலர் வாழ்வைமட்டும் அன்பின் ஐந்திணே எனப் போற்றினர் தமிழ்ச் சான்ருேர்.

மனேவியின் மகிழ்ச்சியைக் கண்டு கணவன் இன் புறுதல்; கணவனுடைய மகிழ்ச்சியைக் கண்டு மனேவி இன்புறுதல்; மனேவியின் வருத்தத்தைக் கண்டு கணவன் துன்புறுதல்; கணவனுடைய வருத்தத்தைக் கண்டு மனேவி துன்புறுதல்; இவ்வளவே காதலரின் வாழ்வு.

துன்பத்தில் பங்கு

கோவலனும்கண்ணகியும் மதுரையை நோக்கிக் காட்டு வழியில் நடந்து சென்றபோது, கோவலன் கண்ணகியின் துன்பத்தை எண்ணி வருந்தினன்; மனேவியோடு காட்டு வழியில் வந்து அவளேத் துன்புறச் செய்தலே நினேந்து நினேந்து உலேக்களத் துருத்திபோல் பெருமூச்சு விட்டுக்

கலங்கினன்; உள்ளம் நைந்து வருந்தினன்; அதனல் உருவமும் மெலிந்து வேறுபடத் தோன்றினன்:

காதலி தன்னெடு கானகம் போந்ததற்கு
ஊதுலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி
உட்புலம்பு உறுதலின் உருவம் திரிய...

(சிலப். புறஞ்சேரி. 44-46)

மதுரைநகருள் புகுவதற்குமுன்பு கவுந்தியடிகளிடம் சென்று வணங்கி, "நெறி தவறிக் கெட்டவர்களைப்போல், யான் தவறு இழைத்தேன். மலர் போன்ற மேனியை உடைய மெல்லியளாகிய கண்ணகி நடுங்கித் துயருறும்படியாக இதற்குமுன் நடந்தறியாத வழியில் நடந்து வருந்தச் செய்தேன்!" என்ருன்:

கோவலன் சென்று கொள்கையின் இருந்த
காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி
"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை உழந்து
சிறுமை உற்றேன்..."

(சிலப். ஊர்காண். 15-20)

இவ்வாறு கோவலன் கண்ணகியின் வழிநடைத் துன்பத்தை நினைந்து வருந்தியதைப் போலவே, கண்ணகியும் கோவலன் உற்ற துன்பத்தை நினைந்தே வருந்தினள். கடு வெயிலில் கணவன் நடந்து வந்ததைக் கண்டு கலங்கித் துயருற்ருள்; நாப் புலரும்படியாக வாடினள். எனினும் தன் துயரத்தைப் பொருட்படுத்தவில்லை.

கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி

(சிலப். அடைக்கலக். 139-141)

இவ்வாறு கோவலன் கண்ணகிக்காக வருந்துவதும், கண்ணகி கோவலனுக்காக வருந்துவதும், தம் துயரத்தை எண்ணுமையும் துன்பக் காலத்தில் பேரொளி வீசிய காதலையே தெரிவிக்கின்றன.

ஆசிரியர் உள்ளம்

தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க

(சிலப். நாடுகாண். 229-30)

காதலி தன்னெடு கானகம் போந்ததற்கு
ஊதுலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி

(சிலப். புறஞ்சேரி. 44-45)

கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடி

(சிலப். அடைக்கலக். 139-140)

கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை
ஒருங்குஉடன் தழீஇ

(சிலப். கொலைக்களக். 94-5)

என்று பிற்பகுதியில் கோவலனையும் கண்ணகியையும் குறிக்கும் பல இடங்களில் இளங்கோவடிகள் அவர்களைக் காதலன் என்றும் காதலி என்றும் கூறிச் செல்கிறார். ஆகவே தொடக்கம் முதல் முடிவு வரையில் அவர்களின் வாழ்க்கை அன்பான வாழ்க்கை என்றும், அவர்கள் காதலர்கள் என்றும் விளக்குவதே அவருடைய நோக்கமாகக் காண்கிறோம்.

சிலம்பைக் கையில் ஏந்தி விற்றுவரும் பொருட்டுப் பிரியுமுன் இறுதியாக அவன் கண்ணகியிடம் கூறிய

சொற்களிலும், முதலில் உரைத்த பாராட்டுரையில் இருந்த அன்பு சிறப்புற்று விளங்குகிறது.

நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங்கு என்துயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீள்நில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி

(ஷை 86-91)

என்னும் சொற்களில் தொடக்கத்தில் கண்ட அன்பு மேலும் பண்பட்டு விளங்கக் காண்கிறோம். அவளுடைய அழகையும் மேன்மையையும் இனிமையையும் மட்டும் தொடக்கத்தில் பாராட்டிய கோவலன், இப்போது அவளிடம் உள்ள உயர்ந்த பண்புகளையும் உணர்ந்து போற்றினான். ஆகவே, முன்பே இருந்த காதலைப் பின்பும் காண்கிறோம். அதனோடு அவளுடைய சிறந்த பண்புகளை உணர்ந்து உருகும் நன்மனத்தையும் காண்கிறோம். கோவலனுடைய உள்ளத்தில் வற்றாத அன்பு வாழ்வதை விளக்குவதற்காகவே அமைத்தாற்போல், இளங்கோவடிகள் கோவலன் வாயில் தொடக்கத்தில் ஒரு பாராட்டுரையும், கொலையுண்பதற்குச் சிறிது முன்பு மற்றொரு பாராட்டுரையுமாக அமைத்திருக்கிறார். இந்த இருவகைப் பாராட்டுக்கு இடையே காணும் வாழ்க்கையே கோவலன்—கண்ணகி வாழ்க்கையாகச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

மதுரையில் மாதரியின் வீட்டில் தங்கியிருந்தபோது, கண்ணகி மெல்விரலும் செங்கண்ணும் சிவக்கச் சமையல் செய்து கணவனை உண்பித்த அந்த அன்புக்காட்சி மற்றொரு சான்றாக உள்ளது. அந்த அன்பை இளங்கோவடிகள் தாமே கூறாமல் மாதரியும் அவள்மகளும் கண்டு மகிழ்ந்து போற்றும் போற்றுதலாக்கிக் கூறுகிறார்.

ஆயர்கள் வழிபடும் தலைவனாக விளங்கிய கண்ணனையும் கண்ணன்காதலியையுமே உவமையாக்கிப் புகழுமாறு செய்கிறார் :

> ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
> பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
> நல்லமுது உண்ணும் நம்பி ; ஈங்குப்
> பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
> தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
> விழுமம் தீர்த்த விளக்குக் கொல்...
>
> (சிலப். கொலைக்களக். 46-50)

வேற்றூரில் இருந்த ஒருநாள் வாழ்க்கையைக் காட்டி; அதையும் முன்பழகாத இருவர் கண்டு போற்றச் செய்து; அவர்கள் வாயிலாகத் தெரிவிக்கிறார் ஆசிரியர். இந்த ஒருநாள் வாழ்க்கையைக் கொண்டே, அவர்கள் இருவரும் பிரியாமல் வாழ்ந்த சில ஆண்டுகளின் அன்பு வாழ்க்கையை உய்த்துணருமாறு அமைத்துள்ளார். "கண்கொளா நமக்குஇவர் காட்சி" என்று கண்டவர்கள் போற்றும் அளவிற்கு அவர்களின் உள்ளத்தே அன்பு இருந்ததைப் புலப்படுத்துகிறார்.

அன்றியும், காதல் என்னும் சொல்லைக் கண்ணகி கோவலன் உறவைப் பொறுத்த வரையில் மட்டுமே இளங்கோவடிகள் வழங்கினார். மாதவிக்கும் கோவலனுக்கும் இருந்த அன்பை அவர் காதல் என்னும் சொல்லால் குறிக்கத் தயங்குகிறார். மாதவியைக் காதலி என்று குறிக்கவும் இல்லை. மாதவியிடத்தில் மனம் பறிகொடுத்த கோவலனுடைய அன்பைப் பற்றிக் கூறும்போது, அதைக் காதல் என்றோ 'தீராக்காதல்' என்றோ கூறாமல், 'விடுதலறியா விருப்பு' என்று வேறு வகையாகவே கூறுகிறார். கண்ணகியிடத்துத் 'தீராக்காதல்' கொண்டதாகக்

கூறியவர், மாதவியிடம் உள்ளம் பறிகொடுத்த தன்மையை 'விருப்பு' என்ற சொல்லாலே முடிக்கிறார். ஆகவே, கண்ணகியும் கோவலனும் வாழ்ந்தது சில ஆண்டுகளே எனினும், அது அன்பான காதல்வாழ்க்கை என்றே உணர்த்துவதே ஆசிரியரின் நோக்கமாகும்.

பண்பு ஒவ்வாமை

கண்ணகியையும் கோவலனையும் அன்புடைய காதலராகத் தொடக்கம் முதல் முடிவு வரையில் காட்டும் இளங்கோவடிகள், அவர்கள் இருவரையும் ஒத்த அன்புடையவர்களாகவோ ஒத்த பண்பு உடையவர்களாகவோ கூறவில்லை. கண்ணகியின் அன்பு மாறாதது; மறப்புக்கு இடம் தராதது; கோவலனுடைய அன்பு அத்தகையது அன்று; அது ஒருநாள் மாதவியிடம் சென்று 'விடுதலறியா விருப்ப' மாகிவிட்டது; பிறகு மறக்கப்படும் நிலைமையும் வந்தது.

மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்றுஎழுந் தனன்யான்

(சிலப். கொலைக்களக். 82-3)

என்று கண்ணகி தன் மாறாத அன்பைப் பற்றிக் கணவனிடத்திலேயே எடுத்துரைக்கும் நிலைமையில் இருக்கக் காண்கிறோம்.

நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி

(சிலப். ஊர்காண். 17)

என்று கவுந்தியடிகளிடத்திலும்,

சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்

(சிலப். கொலைக்களக். 68)

என்று துணைவியிடத்திலும், தன் அன்பு மாறிய செயலை நினைந்து வருந்தும் நிலையிலேயே கோவலனைக் காண்கிறோம்.

அன்பில் ஒவ்வாமை போலவே, பண்பிலும் ஒவ்வாமை காண்கிறோம். திருமணத்தில் அறிமுகப்படுத்தும்போதே இளங்கோவடிகள் இந்தக் குறிப்போடு அறிமுகப்படுத்து கிறார்.

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ
(சிலப். மங்கல, 26-29)

என்று கண்ணகியைப் பற்றிக் கூறும்போது, அவளுடைய அழகைப் போற்றுவதோடு வடமீன் போன்ற கற்புத் திறத்தையும் தொழத்தக்க குணப்பெருமையையும் கூறு கிறார். ஆனால், கோவலனைப் பற்றிக் கூறும்போது, அவனுடைய புகழையும் அழகையும் பாராட்டிக் குறிப்பிடு கிறாரே அல்லாமல், பண்பைப் பற்றி ஒன்றும் குறிக்க வில்லை :

மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்என் றிசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன்என் பான்மன்னோ.
(சிலப். மங்கல. 36-39)

இவ்வாறு கோவலனுடைய பண்பைப்பற்றிக் கூறாமல் விட்டதோடு இளங்கோவடிகள் நிற்கவில்லை. காவிரிப்பூம் பட்டினத்துத் தெருக்களில் அசைந்து திரிந்த தென்றல் காற்றை வருணிக்கும் இடத்திலும், கோவலனை உவமை யாகக் கூறி அவனுடைய ஒழுக்கத்தைப் பழிக்க முற்படு கிறார். இன்னிசை முரலும் வண்டோடும் இனிய இள வேனிலோடும் சேர்ந்து தென்றல் அசைந்து வருகிறது

என்கிருர் ; அது, வேடிக்கை விளையாட்டில் காலம் கழித்து யாழ் இசைக்கும் பாணரோடும் நகரத்துக் காமுகரோடும் சேர்ந்து திரியும் கோவலனைப் போல் அசைந்து திரிவதாகக் கூறுகிருர். இவ்வாறு உவமை வாயிலாகவும் கோவலனைப் பழிக்கிருர் இளங்கோவடிகள். ஆகவே கண்ணகி உயர்ந்த பண்பு உடையவள் என்றும், கோவலனிடம் அவ்வளவு உயர்ந்த பண்பு இல்லை என்றும் அவர் தெளிவிக்கிருர்.

நன்றியுணர்வு

இனி, இத்தகைய கோலனைக் கடிந்து திருத்தாமலும் அவனுடன் போராடாமலும் கண்ணகி வாழ்ந்தது தவறன்ருே எனக் கேட்கலாம். கணவனுடைய குற்றத்தை இடித்துரைக்காமலும் எடுத்துக் காட்டாமலும் கண்ணகி வாழ்ந்த வாழ்வு கண்மூடி வாழ்வு என்றும், அடைக்கல மாய் அடிமையாய் அடங்கி வாழ்ந்த வாழ்வு என்றும் இக் காலப் போக்கினைக் கொண்டு சிலர் குறையும் கூறலாம். கல்லென்ருலும் கணவனே எனக் கண்மூடி வழிபட்டு வாழவேண்டும் என்னும் கொள்கை போற்றப்பட்ட பழங் காலத்திற்கே கண்ணகியின்வாழ்வு பெருமையுடையதாகத் தோன்றியிருக்கும் என்று காலத்தின்மேலும் குற்றம் சுமத்தலாம்.

இளங்கோவடிகள்கண்ட கண்ணகியிடத்தில் இத்தனை குறைக்கும் இடம் இல்லை என்பது சிலப்பதிகார ஆராய்ச்சி யால் விளங்கும். 'கல்லென்ருலும் கணவன்' என்னும் கண்மூடி வழக்கம் பழந்தமிழகத்தில் இருந்ததில்லை என்பது சங்க இலக்கிய ஆராய்ச்சியால் விளங்கும்.

யானை போன்றவர் நட்பு என்றும், நாய் போன்றவர் நட்பு என்றும் நட்பை இருவகையாக்கிக் கூறுகிறது நாலடியார். யானை போன்றவரின் நட்பு விரும்பத்தகாதது என்றும், நாய் போன்றவரின் நட்பே கொள்ளத்தக்கது

என்றும் தெரிவிக்கிறது. யானை அறிந்தறிந்தும் பழகிய பாகனையே கொல்லுமளவிற்கு நன்றியுணர்வு அற்றது; ஆகையால் நம்பத்தகாதது. யானை போன்றவரும் எவ்வளவு நெருங்கிப் பழகி நன்மை செய்திருந்தும், ஒரு குற்றம் நேர்ந்த போது அதையே பெரிதாகப் பாராட்டித் தீங்கு செய்யத் துணிவர். ஆயின், நாய் நன்றி மறவாதது; சிலநாள் அன்புடன் தீனியிட்டுக் காத்தவர் தன்மேல் வேலை எறிந்து புண்படுத்திய போதிலும், அந்த வேல் உடம்பில் தைத்துள்ள நிலையிலும் அவரைக் கண்டு வால் குழைக்கும் அளவிற்கு நன்றியுணர்வு மிகுந்தது. நாய் போன்ற நண்பரும் செய்த நன்றியை நினைந்து போற்றி, எதிர்பாராமல் நேர்ந்த குற்றத்தையோ குறையையோ பொருட்படுத்தாமல் பழைய அன்பையே காட்டுவர். ஆதலின் யானை போன்றவரின் நட்பை நீக்கி நாய் போன்றவரின் நட்டைக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது:

யானை அனையவர் நண்புஒரீஇ நாய்அனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(நாலடியார், 213)

செய்ந்நன்றியறிதலைப் பற்றித் திருவள்ளுவர் கூறுமிடத்தும் "ஒருவர் கொல்வது போன்ற தீங்கு செய்த போதும் அவர் செய்துள்ள நன்மை ஒன்றை நினைந்த அளவில் அந்தத் தீங்கு பற்றிய மனவருத்தம் கெடும்" என்கிறார்:

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். (குறள், 109)

பொதுவாகப் பழகியவரிடத்து இருக்கவேண்டிய இந்த நன்றியுணர்வு, சிறப்பாக நண்பரிடத்துக் கட்டாயம்

வேண்டும். "அன்பின் வழியில் வளர்ந்த உண்மைநட்பு உடையவர், அழிவுதரும் தீங்கு செய்யினும் பழைய அன்பு நீங்காமல் வாழ்வர்" என்று நட்பின் பழமைச் சிறப்பைப் பற்றிக் கூறுமிடத்தில் திருவள்ளுவர் இதைத் தெளிவாக்கு கிறார்:

> *அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்*
> *வழிவந்த கேண்மை யவர்.*
>
> (குறள், 807)

நட்பும் காதலும்

பழகிய நட்பில் காணப்படும் இத்தகைய சிறப்பே காதல்வாழ்விலும் உள்ளதாகும். நட்பிற்கும் காதலுக்கும் மிகப் பெரிய அளவில் ஒற்றுமை உண்டு. நட்பில் இல்லாத ஒரு பிணைப்பு, காதலில் உண்டு. அதுவே உடல்கூறு பற்றி இயற்கை அமைத்துள்ள பிணைப்பு. இந்த ஒன்றே காதலில் மிகையாக உள்ளது. இது தவிர, காதலுக்கும் நட்புக்கும் வேறுபாடு இல்லை என்றும் கூறலாம். இதனால்தான் கோப் பெருஞ்சோழன், பிசிராந்தையார்க்கும் தனக்கும் உள்ள நட்புரிமை பற்றிச் சாகுந் தறுவாயில் குறிப்பிட்டபோது,

> *சிறந்த காதல் கிழமையும் உடையன்* (புறம். 216)

என்று காதல்கிழமை என்றே குறிப்பிட்டுள்ளான்.

ஆதலின் நட்பிற்கு இன்றியமையாத நன்றியுணர்வு காதலுக்கும் இன்றியமையாத தாகும். நாய்போல் நன்றி யுணர்வு மிக்கவரே காதலராக வாழத் தக்கவர் ஆவர். தீங்கு செய்த காலத்தும் முன் செய்துள்ள நன்மையை நினைந்து அன்பு குன்றாமல் காத்துக்கொள்ள வல்லவரே காதலர் ஆவர். அழிவுதரும் தீமை செய்திடினும், அன்பைப்போற்றி வாழ்தலே பண்பட்ட காதல்வாழ்வின் நெறியாகும்.

ஆகவே, போராடாமலிருந்தாள், பொறுத்திருந்தாள், கடிந்து கூறாமலிருந்தாள் என்று கண்ணகியைக் குறை

கூறுவதற்கு முன்பு, காதலர் இவ்வாறு வாழ்தல் எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருந்தும் நெறி அன்ருே என ஆராய வேண்டும்; அவ்வாறு அவள் போராடாமல் பொறுத்திருக்கும் அளவிற்குக் கோவலன் தகுதியுடையவன் அல்லனே என்பதையும் ஆராய வேண்டும்.

காலப் போக்கு

யந்திர நாகரிகமும் பொருட்கவலையும் எல்லோரையும் (செல்வர் வறியவர் என்ற வேறுபாடு இல்லாமல்) ஆட்டி அலைக்கும் இக்காலத்தில் மனச்சான்றையும் தூய உணர்வையும் பண்படுத்த வாய்ப்பும் குறைந்துவிட்டது; ஓய்வும் குறைந்துவிட்டது. அதனுல் மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் முறையிலே அவர்கள் நெஞ்சமும் யந்திரம்போல் இயங்குகிறது. ஏதோ ஒரு காரணம் பற்றி ஒருவரோடு ஒருவர் பழகுவதும், அந்தக் காரணம் தீர்ந்தபின் ஒருவரை விட்டு ஒருவர் கவலையின்றிப் பிரிவதும் இயற்கையாகி விட்டன. உள்ளன்போடு வாழ்வில் கலந்து பழகி உணர்வால் ஒன்றுபடும் நட்பு அரிதாகிவிட்டது. நட்புவகையில் நேர்ந்த இந்த மாறுதலே காதல் வாழ்விலும்நேர்ந்துள்ளது. யந்திர நாகரிகமும் பொருட்கவலையும் கணவன் மனைவிக்கு இடையே மேற்போக்கான அன்பை வளர்க்கின்றன; காதல் என்னும் ஆழ்ந்த உணர்வு உள்ளத்தே வளர்வது அரிதாகி விட்டது.

இது காலப்போக்கால் நேர்ந்த தடுக்கமுடியாத மாறுதலாகும். நட்பு காதல் என்னும் நற்பயிர்கள் செழித்து வளரும் நன்செய், அன்புவளம் குன்றிய காரணத்தால் புன்செய்யாக மாறிவிட்டது. அதனுல் பயிர்கள் எங்கும் பசுமையாய்க் காணப்படும் நிலைமை மாறியதே தவிர, பயிர்கள் அடியோடு அழிந்துபடவில்லை. நன்செய்யின் வளம், பல வித்துக்கள் முளைத்து வாழ இடம் கொடுத்தது. புன் செய்யின் வறட்சியோ சில வித்துக்கள் மட்டுமே தலை

யெடுக்க இடம் தருகிறது. ஆயின், நன்செய் நிலத்தில் ஆழ வேர் கொள்ளவேண்டிய நிலைமை இல்லை ; புன்செய் நிலத்தில் ஆழ்ந்து வேரூன்றி வாழ நேர்ந்துள்ளது.

இக்காலத்திலும் உண்மைநண்பரும் காதலரும் இல்லாமல் போகவில்லை : அவர்கள் மிகச் சிலராக உள்ளனர்.

மற்றொரு வேறுபாடும் உள்ளது. அக்காலத்தின் சூழ்நிலை காதலர்க்குத் துணைபுரிந்தது. இக்காலத்து வாழ்க்கை நிலையோ அதற்குத் துணைசெய்யவில்லை. ஆதலின், அருகி வளரும் காதல்பயிரும் நட்புப்பயிரும் ஆலும் அரசும் போலத் தடையைக் கடந்து வாழும் உரம் பெறுகின்றன.

என்றும் உண்டு

ஆகவே, தும்மல் இருமல் குறட்டை குழறல் முதலிய சிறு சிறு காரணங்களை எல்லாம் நீதிமன்றத்தில் கூறி மணமுறிவு தேடும் குடும்பங்கள் மேற்குநாடுகளிலும் அமெரிக்காவிலும் இருத்தலை அறிந்து, அந்த நாடுகளில் காதலரே இல்லை என்று கூற முடியாது. மணமுறிவுக்குச் சமூகமும் சட்டமும் எளிதில் இடம்தராமையால் வம்பும் துன்பும் குழப்பமும் கோளாறுமாகவே பல குடும்பங்களில் அன்றாட வாழ்க்கை நடைபெறுவதைக் கண்டு, இந்த நாட்டிலும் காதலர் இல்லை என்று கூறிவிட முடியாது. இன்றும் உள்ளன்பு கொண்ட நண்பர்கள் எந்நாட்டிலும் உள்ளனர் அல்லரோ? அதுபோலவே உள்ளம் கலந்த காதலர்களும் இக்காலத்திலும் உலகெங்கும் உள்ளனர். ஆயின் அவர்கள் மிக அரியர். அவர்களுள் கண்ணகி போன்ற, அல்லது, கண்ணகிக்கு அடுத்தாற்போன்ற உண்மைக் காதல் உடைய மகளிர் இன்றும் உள்ளனர். அவர்கள் அறிவும் திறமும் மிக்கவராய், கண்முடி வாழ்க்கை அற்றவராய் விளங்குவதோடு, பழங்காலக் காதல்பண்பாடும் உடையவராய் வாழ்தலைக் காணலாம். கணவரிடம் ஒருமுறை இருமுறை அல்லது சிலமுறை குறைகண்டு அதன்

விளைவாக அவர்களை வெறுத்து அன்பை மறக்கும் வழக்கம் அவர்களிடம் காண முடியாதது. குற்றம் குறை கண்டபோது பழைய அன்புவாழ்க்கையை நினைந்துருகிப் பொறுத்திருக்கும் உயர்ந்த பண்பை அவர்களிடம் இன்றும் காணலாம். 'ஒருவன் ஒருத்தி' என்ற காதல்வாழ்வின் விதி அவர்களுக்கு இயல்பாகியுள்ளது.

நாடாது நட்டலின் கேடுஇல்லை ; நட்டபின்
வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு.

(குறள், 791)

ஆராயாமல் நட்புக் கொள்வதை விடக் கேடானது வேறொன்று இல்லை; நட்புக்கொண்ட பிறகு, உண்மை நட்பு உடையவர்க்கு நட்பிலிருந்து விடுதலை இல்லை என்று திருவள்ளுவர் நட்புக்குக் கூறிய இலக்கணமே அத்தகைய காதலர்க்கும் இலக்கணமாக இருக்கிறது. அவர்கள் ஆராயாமல் காதல் கொள்வதே இல்லை ; காதல் கொண்டு வாழ்க்கை தொடங்கியபின் அதிலிருந்து மாறிவிடுவதும் இல்லை. இவ்வாறு ஒருவன் ஒருத்தியாய்க் காதல்வாழ்வு வாழ்வோர் இன்றும் எல்லா நாடுகளிலும் உள்ளனர்.

"நட்டபின் வீடு இல்லை"; காதலியாய் வாழ்ந்த பிறகு வேறுநிலை இல்லை ; காதலியாய்ச் சாவதே கடமை என்பதே கண்ணகியின் வாழ்க்கை. தொடக்கத்திலிருந்து அடிமையாய் அடங்கிக்கிடந்த கண்மூடி வாழ்க்கை அன்று ; சில ஆண்டுகள் சிறந்த வகையில் வாழ்ந்தபின், கணவனிடம் குறை கண்டபோது மனநிறையால் பொறுமை மேற்கொண்ட வாழ்க்கை : பொறுத்தலே நெறியும் கடமையுமாகும் என்று இயல்பாக உள்ளம் உணரும் அளவிற்கு அன்பு வளர்ந்த வாழ்க்கை.

உரிமை வாழ்வே

கண்ணகி அஞ்சி அடங்கி வாழ்ந்தவள் என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் ஒரு சான்றும் இல்லை ; அதற்கு மாறாக

அஞ்சாமையும் வீரமும் குடிகொண்டவள் அவள் என்பதற்கு அவள்வாழ்க்கையின் பிற்பகுதி சான்ருக இருக்கிறது. மன்னவன் ஒருவன் தவறு இழைத்ததாகக் கனக் கண்டபோது, மன்னவனை எதிர்ப்பட்டுக் குறைகூறுவதாகக் கனவு காணும் அளவிற்கு அவளுடைய உள்ளத்தில் அஞ்சாமை இயல்பாக இருந்திருக்கிறது. இல்லையேல் அவ்வாறு கனவு காண இயலாது. பூனையைக் கண்டு அஞ்சுகிறவன் புலிவேட்டை ஆடுவதாகக் கனவு காணமுடியாது.

கண்ணகியை அச்சுறுத்தியோ அடக்கியோ நடத்தியவர் ஒருவரும் இல்லை. கோவலன் அவளை வாழ்க்கைத் துணைவியாக மதித்து நடத்தும் முறையையே எங்கும் காண்கிறோம். அவன் தன் தவறு நினைந்து வருந்தி அவளிடம் முறையிடும்போது உரிமை வாழ்வே விளங்குகிறது. "உனக்கு நான் செய்த துன்பத்தை நினைந்து என் பெற்றோர் எவ்வளவு மனம் வருந்துவரோ" என அவன் கண்ணகியிடம் உருகி உரைத்த பகுதியிலும் அந்த உரிமை வாழ்வே விளங்குகிறது. கண்ணகியை மாமனும் மாமியும் அன்புடன் போற்றிய நிலையும் இதனுல் தெளிவாகிறது. துயரம் உள்ளடங்கிய கண்ணகியின் முறுவலைக் கண்டு கோவலனுடைய பெற்றோர் வருந்தியதை அவளே எடுத்துரைத்தாள்; "என் வாயல்முறுவற்கு அவர் உள்ளகம் வருந்த நடந்தீர்" என்று அவள் உரிமையோடு கூறினள். "மாமனும் மாமியும் என் நிலைக்காக வருந்தி உள்ளத்தில் அன்பு கனிந்தவர்களாய் அருள்மொழி கூறி என்னைத் தேற்ற முயன்ருர்கள்" என்று கோவலனிடம் அவள் தெரிவித்த சொற்களிலும் சொல்முறையிலும் உரிமைமணம் கமழ்கிறது.

எழுக என எழுதல்

மாதவியை வெறுத்துத் திரும்பிய அன்று மாலை கோவலன் கண்ணகியின் வாடிய மேனிவருத்தம் கண்டு

தவறு உணர்ந்து வருந்திக் கூறியபின், மதுரைக்குப் புறப்படு என எண்ணிப் பார்க்காமல் கூறியதும், அவ்வாறே கண்ணகி புறப்பட்டதும் உரிமை அற்ற அடிமைவாழ்வைக் காட்டுகின்றன எனக் கூறுவாரும் உளர். உரிமைவாழ்வாக இருந்திருப்பின், சீதையைப் பிரிந்து காட்டிற்குச் செல்லு முன் இராமன் கூறியதுபோல் கூறித் தடுத்திருக்கவேண்டும் என்றும், அவன் தடுத்தும் கேளாமல் உடன்செல்லத் துணிந்துநின்ற சீதைபோல் கண்ணகியும் தானே நினைந்து சென்றிருக்கவேண்டும் என்றும் கூறுவர்.

கம்பரின் காவியத் தலைவனான இராமன் இளங்கோவடிகளின் கோவலனைவிட மிக மிக உயர்ந்தவன் என்பது தெளிவு. ஆயினும், கோவலனும் கண்ணகியும் வாழ்ந்த வாழ்வை அடிமைவாழ்வு என்று கூற இடமில்லை. அயோத்தியைவிட்டு இராமன் பிரிந்துசென்ற நிலைமைக்கும் காவிரிப்பூம்பட்டினத்தைவிட்டுக் கோவலன் பிரிந்துசென்ற நிலைமைக்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. இராமன் தந்தையின் ஆணையைநிறைவேற்றும் பெருமிதத்தோடு பிரிந்து சென்றான்; கோவலனோ, குடும்பப் புகழ் கெடுமாறு தான் வாழ்ந்த தகாதவாழ்க்கையையும் முன்னோர் தேடிய பெருஞ் செல்வத்தை இழந்து வறுமையுற்றதையும் நினைந்து நகரில் வாழ நாணிப் பிரிந்து சென்றான்.

சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்...

(சிலப். கனாத். 69-71)

இராமன் பதினான்கு ஆண்டுகளும் காட்டிலேயே வாழ்ந்து கழிக்கவேண்டும் என்று சென்றான். தவக்கோலமாகிய மரவுரியும் பூண்டு சென்றான்; கோவலனோ, சிலநாட்களில் காட்டுவழியைக் கடந்துசென்று மதுரைநகரத்தில் தங்கியிருந்து வாணிகம் செய்து பொருளீட்டும் நோக்கத்

தோடு சென்றான். காட்டில் பதினான்கு ஆண்டுகளும் கழிக்கும்போது சீதை உடன் இருப்பது பெரியஇடையூறு என்று இராமன் உணர்ந்தான்; என்னோடு நீ வந்தால் எனக்கு எல்லையற்ற இடர் தருவாய்'' என்று சீதைக்கு உண்மையை எடுத்துரைத்தான்.

...விளைவு உன்னுவாய்
அல்லை போத அமைந்தனை ஆதலின்
எல்லை அற்ற இடர்தரு வாய்என்றான்

(சம்ப. அயோத். நகர். 231)

கோவலன் அதற்குமாறாக உணர்ந்ததால்தான் கண்ணகியை உடன்வருமாறு அழைத்தான்; இதற்குமுன்பே தனித்திருந்து துயருற்று வாடிய கண்ணகியை இன்னும் விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் தனித்திருக்கச் செய்வது அறம் அன்று என்று உணர்ந்தே உடன்வருமாறு அழைத்தான். அயோத்திநகரத்தைவிட்டுப் பல ஆறுகளும் மலைகளும் கடந்து அங்கங்கே காடுகளில் இலைக்குடிசையில் தங்கிப் பதினான்கு ஆண்டுகள் துணைவியோடு வாழ்வது வேறு; தமிழ்நாட்டில் ஒரு பெரிய நகரத்தைவிட்டு மற்றொரு பெரிய நகரத்தை நாடிக் காவிரிக்கரை வழியாகச் சென்று வையைக்கரையை அடைவது பலர்க்கும் எளியதாகவே இருந்தது; குடும்பத்தார் பலரும் அவ்வாறு சென்றுவந்து பழகியகாரணத்தால் துணைவியோடு செல்வதில் அஞ்சத்தக்கது ஒன்றும் இல்லை என்றே கோவலன் உணர்ந்தான்; சிலநாட்களில் அவ்வழியே சென்று மதுரைநகரை அடைந்துவிட்டால், காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தது போலவே அங்கும் கவலையின்றி வளமாக வாழமுடியும் என்று அறிந்தே உடன்வருமாறு கண்ணகியை அழைத்தான். இன்பக்காலத்தில் வாழ்க்கைத் துணையாய் இருந்ததைப்போல் - அதனினும் மிகுதியாகத் - துன்பக்காலத்தில்

கணவனுடன் துணையாக இருப்பது கடமை என்றே சீதை உடன்செல்லத் துணிந்தாள். தனக்குத் தவறு செய்த காலத்திலும் துன்பம் விளைத்த காலத்திலும் அவனுடைய மகிழ்ச்சியே தன்னுடைய வாழ்வு என்ற மனநிலையோடு பல ஆண்டுகளைக் கழித்தவளாதலின், "புறப்படு" என்ற சொல்லைக் கேட்டதும் உவந்த உள்ளத்தோடு கண்ணகி இசைந்து சென்றாள்.

ஆகவே, கோவலன்—கண்ணகி வாழ்க்கை உரிமை மணம் கமழும் வாழ்க்கையாகவே விளங்குகிறது. அடிமை வாழ்விற்கு உரிய அறிகுறி ஒன்றும் அவர்களின் வாழ்க்கையில் இல்லை. நான் கூறியவாறே கண்ணகி தயங்காமல் புறப்பட்டு வந்ததை மாதரியின் வீட்டில் நினைந்து உருகினான் கோவலன். "புறப்படு என்று நான் சொன்னதும் நீயும் தயங்காமல் புறப்பட்டு வந்துவிட்டாயே! என்ன செய்தாய்!"

வழுஎனும் பாரேன் மாநகர் மருங்குஈண்டு
எழுகஎன எழுந்தாய்! என்செய் தனை!

(சிலப். கொலைக். 69-70)

என்று உருகிக் கூறும் சொற்களிலும் உரிமை வாழ்வே விளங்குகிறது.

கோவலன் குறை

இனி, கோவலன் பொறுக்கத் தகாத பெருங்குறை உடையவனா என்று ஆராய்தல் வேண்டும். கண்ணகியை நோக்கி ஒப்பிடும்போது, அத்தகைய உயர்ந்த பண்பும் மனநிறையும் அவனிடம் இல்லை என்பது உண்மையே; ஆயினும், தீயவன் என்றோ, கொடியவன் என்றோ, இழிந்தவன் என்றோ கூறத்தக்க குறை ஒன்றும் ஒரு சிறிதும் அவனிடம் இல்லை. அதனால்தான் சில ஆண்டுகள் அன்பு நிறைந்த காதல்வாழ்வு வாழ முடிந்தது; குற்றம் உணர்ந்து

தும் மனம் நொந்து கசிந்துருக முடிந்தது ; பிறகு கண்ணகியோடு உடனிருந்த சில நாட்களும் கவுந்தியடிகள் முதல் மாதரி வரையில் அனைவரும் போற்றும் அன்பு வாழ்க்கையாக விளங்கியது.

கோவலனிடம் இருந்த குறை ஒன்றே ; அது 'கற்பு என்னும் திண்மை' இல்லாத குறையே ஆகும். அதற்குக் காரணம் இரண்டு : ஒன்று, அவனுடைய சூழ்நிலை ; மற்றொன்று, அவனுடைய கலையுணர்ச்சி.

சூழ்நிலைக் காரணம்

முதலாவதாக, அவனுடைய சூழ்நிலையை ஆராய்வோம். அக்காலச் சமூகம் எவ்வாறு அமைந்திருந்தது ? குலமகளிர் (குடும்பப் பெண்கள்) என்றும், பொதுமகளிர் (விலைமாதர்) என்றும் பெண்ணுலகம் அப்போது இருவகையாகப் பகுக்கப்பட்டிருந்தது. 'கற்பு' என்னும் நல்லொழுக்கம் மக்களினத்துள் குலமகளிர்க்கு மட்டுமே வற்புறுத்தப்பட்டு வந்தது ; பொதுமகளிர்க்குக் கற்பு வேண்டாததாக இருந்தது. ஆடவர்க்குக் கற்பு வற்புறுத்தப்படவில்லை. குலமகளிர் தத்தம் கணவரை இடித்துரைத்துத் திருத்தும் முயற்சி இருந்ததே அல்லாமல், பொதுவாகச் சமூகத்தில் ஆடவர்க்குக் கற்பு வற்புறுத்தப்படவில்லை. ஆகவே குலப்பெண் ஒருத்தி ஒருவனோடு வாழ வேண்டும் என்ற அமைப்பு இருந்ததே தவிர, ஒருவன் ஒருத்தியோடு வாழ வேண்டும் என்ற வரையறை இல்லை. அதனால் சமூகத்தில் பல தீமைகளுக்கு இடம் இருந்தது. அவற்றிற்கு இரையானவர்களில் கோவலன் ஒருவன். (இன்று 'ஒருவன் ஒருத்தி' என்ற கொள்கை மதிப்புப் பெற்றுவிட்டது. அதனால் சமூகம் திருந்திவிட்டது என்று கொள்ளலாகாது. சமூகம் திருந்த வழி ஏற்பட்டது என்றே கொள்ளலாகும். நல்ல கொள்கை ஒன்று சமூகத்தில் மதிக்கப்படுவதே ஒரு படி முன்னேற்றமாகும். அதுவே இன்றைய நிலை. தமிழ்

நாட்டில் முதல்முதலாக இதை வலியுறுத்திய சான்றோர் திருவள்ளுவரே ஆவர்.)

பொதுவாகச் சமூகநிலை கோவலனுடைய குறைக்குக் காரணமாக இருந்ததுபோலவே, அவனுடைய செல்வ நிலையும் அதற்குத் துணைக்காரணமாக இருந்தது. பொது மகளிர்குலத்தில் பிறந்த பெண்களை அடையச் செல்வர்க்கே வாய்ப்பு உண்டு. கோவலனோ பெருஞ்செல்வன். இந்தியா விலேயே பெரிய துறைமுகப்பட்டினமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலனுடைய தந்தை மிகப் பெருஞ் செல்வனாக விளங்கியவன்; அரச குடும்பத்தோடு ஒருங்கு வைத்து மதிக்கப்பட்டு வந்த செல்வ வளம் உடையவன்; இருநிதிக் கிழவன் என்று போற்றப்பட்டவன்:

> பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
> ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
> வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்து வான்என்பான்
> இருநிதிக் கிழவன்...
>
> (சிலப். மங்கல. 31-34)

இத்தகைய பெருஞ்செல்வனுக்கு ஒருமகனாய் வளர்ந்து தனிக் குடும்பமும் வைக்கப்பெற்று, "வேறுபடு திருவின் வீறுபெறக் காண" உரிமை அளிக்கப்பெற்றவன் கோவலன். அதனால் தெருவில் விலையாகக் கூறிய ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னையும் உடனே அளித்து மாதவியை அடையும் நிலைமை அவனுக்கு இருந்தது. (இக்காலத்திலும் செல்வக் குடும்பத்து இளைஞர் பலர் நல்லொழுக்கத்தில் பற்றும் குறிக்கோளும் உடையவராக இருந்தும், அவரிடம் உள்ள செல்வத்தைக் கண்டு அவர்களை ஏழைக்குடும்பத்துப் பெண்கள் நாடுதலும், செல்வம் காரணமாக அந்த இளைஞர்கள் அவர்களை அடைந்து ஒழுக்கம் கெடுதலும் காணலாம். இயற்கையாகவே மனஉறுதி உடைய ஒரு சிலர் தவிர, மற்றச் செல்வ இளைஞரும் ஏழைப்பெண்களும்

ஒழுக்கம் கெடுவது இன்றைய சமூகத்திலும் தடுக்கமுடியாத தீமையாகவே உள்ளது.)

கலையுணர்ச்சி

இரண்டாவதாக, கோவலனுடைய கலையுணர்ச்சியை ஆராய்வோம். ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்துக் கோவலன் மாதவியைப் பெற முயன்றதன் அடிப்படைக் காரணம், ஒரு விலைமாதின் தொடர்பைப்பெறுவது அன்று. அவ்வளவு எளிதில் ஒழுக்கம் கெடுபவன் கற்பரசி ஒருத்தியுடன் காதல்துணைவனாகச் சில ஆண்டுகள் வாழ்ந்திருக்கமுடியாது. அவ்வளவு எளிதில் ஒழுக்கம் கெடுபவனாக இருந்தால், அவன் பிரிந்தபின் பல ஆண்டுகள் பொறுத்திருக்குமாறு கண்ணகியின் உள்ளத்திலும் அவ்வளவு அன்பு இருந்திருக்க முடியாது. எளிதில் ஒழுக்கம் கெடுபவன், மாதவி ஒருத்தியோடு தன் புறத்தொழுக்கத்தை அளவுபடுத்திக்கொண் டிருக்கவும் முடியாது. பலரிடம் வண்டெனத் திரியும் ஒருவனாக அவன் இருந்திருப்பின், ஒரு நாள் எதிர்பாராமல் திரும்பிவந்தபோது, கண்ணகி எளிதில் அன்பு செலுத்தியிருக்க முடியாது; பலரிடம் பல முறை வழுக்கிவீழ்ந்தவனைக் கற்புடைய ஒருத்தி எளிதில் நம்பி, அவன் திரும்பிவந்த அன்றே புன்முறுவல் காட்டி மலர்ந்த முகத்தோடு, "சிலம்புகள் உள்ளன, கொள்ளும்" என்று கூறியிருக்கவும் முடியாது. ஆதலின், கோவலன் எளிதில் பிறமகளிரின் வலையில் வீழ்பவன் அல்லன் என்பது உறுதி; அவன் மாதவியை நாடியதும் சிற்றின்பம் மட்டும் கருதியது அன்று என்பது அதனினும் உறுதி. அவன் மாதவியின் அரங்கேற்றுச் சிறப்பைக் கண்டவன்; அவளுடைய ஆடல் பாடலில் உள்ளத்தைப் பறிகொடுத்தவன். அவளுடைய கலைச்சிறப்பு அவனுடைய உள்ளத்தை விட்டு மாறாத நிலையில், வந்த அழைப்பை அவனால் மறுக்க முடியவில்லை; அதனால் மன உறுதி அற்று நெகிழ்ந்தவனாய் ஆயிரத்தெட்டுக்

கழஞ்சு பொன்னை அளித்து மாதவியின் ஆடலாலும் பாடலாலும் மயங்கிய உள்ளத்துடன் அவளுடைய அழகிலும் இன்பத்திலும் திளைத்திடலானான்.

கலை, வாழ்க்கைக்கு உதவும் ஒரு கருவி; மிக உயர்ந்த கருவி. ஆயின் பயன்படுத்துவோர் தவறும்போது அது மிகப் பொல்லாத கருவியும் ஆகும்; அது உள்ளப் பண்பாடு இல்லாதவரின் கைப்பட்ட போது, கூரிய வாளினும் பொல்லாதது ஆவதும் உண்டு; கொல்லும் நஞ்சினும் கொடியது ஆவதும் உண்டு. அது ஒரு கருவி என்பதை என்றும் மறவாமல், அதற்கு ஒருநாளும் தலைமை நல்காமல் அதைப் பயன்படுத்துவோரே வாழ்வோர்; மற்றவர் ஒரு நாள் உய்யினும் மற்றொருநாள் வீழ்பவரே ஆவர். அதனால் தான், கலைச்சிறப்பால் உயர்ந்தோங்கிய தமிழகத்தை இரு சாரார் இருவகையால் தடுத்தாட்கொள்ள முனைந்தனர். சமணரும் பௌத்தருமாகிய ஒருசாரார், கலை புலனடக்கத்திற்கு இடையூறானது என்ற கொள்கையினராய் அதைப் போற்றாமல் விடுத்தனர். பின்னர், சைவரும் வைணவருமாகிய மற்றொரு சாரார், கலை உள்ளத்துணர்வைப் பண்படுத்தவல்லது என உணர்ந்து, உயர்ந்த குறிக்கோளுடன்வாழும் சமயவாழ்விற்கு அதைப் பயன்படுத்திக் கொண்டனர்.

மாதவி கலையால் வாழவேண்டியவள்; ஏழாண்டுகள் கலையே பயின்று தேர்ந்து அரசறிய வாழக் கற்றவள். கண்ணகியோ கற்பால் வாழ வேண்டியவள்; கற்புக் காரணமாக நாணத்தையும் உயிரையும் துறக்கத் துணிந்தவள். ஒருபக்கம், யாழ் இனிது குழல் இனிது என்னும் கலைவாழ்க்கை; மற்றொருபக்கம், கணவனே உயிர் கடமையே உயிர் என்னும் கற்பு வாழ்க்கை. இடையே சிக்குண்ட கோவலன், கலையினும் வாழ்க்கையே பெரிது என்னும் தெளிவும்துணிவும் பெற்றிருந்தால், கண்ணகியை மறந்து மாதவியை நாடியிருக்கமாட்டான். கலை ஈர்த்த

போது கலையும், வாழ்க்கை ஈர்த்தபோது வாழ்க்கையுமாக மனம்போனபோக்கில் கவலை இல்லாமல் வாழ்ந்து வளர்ந்தவன் ஆகையால், கலையின் வலையில் சிக்குண்டபோது, 'விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்.' ஒரு நெருக்கடி ஏற்பட்டு, கலைவிருந்து நல்கிய நங்கையை வெறுத்திடும் நிலை நேரும் வரையில் விடுதலை இன்றிக் கிடந்தான். யாழினும் குழலினும் வாழ்க்கைத் தூய்மையே இனியது என்று உணர்வதற்கு அத்தகைய நெருக்கடி அவனுக்குத் தேவையாக இருந்தது. திருவள்ளுவர் போன்ற பெருமக்கள், "யாழ் இனிது குழல் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று உணர்த்தும் உண்மையைக் கோவலன் உணரப் பலஆண்டுகள் ஆயின. ஆடல்பாடலில் வல்ல கலையரசியின் அன்பைவிட, அன்பிலும் அமைதியிலும் தேர்ந்த கற்பரசியின் உறவு உயர்ந்தது என்று உணர்ந்தபின் அவன் புடமிட்ட பொன்போல் மாசற்று விளங்கினன்.

மறத்தல்; துறத்தல் அன்று

இவ்வாறு சூழ்நிலைக்கும் கலையுணர்ச்சிக்கும் அடிமையாகி நெறி தவறிய கோவலனை என்ன காரணம் பற்றித் தீயவன் என்றும் கொடியவன் என்றும் பழிக்க முடியும்? அவனுடன் சிலஆண்டுகள் அன்பாக வாழ்ந்து அவனுடைய தூய உள்ளத்தையும் அன்பு நெஞ்சத்தையும் கண்ட கண்ணகி பொறுத்திருந்து வரவேற்றதில் குற்றம் என்ன?

கண்ணகியிடம் கோவலனுக்கு இருந்த அன்பு மறக்கப்பட்டதே அன்றி மாறிவிட்டது அன்று. தேவந்தி என்னும் தோழி கண்ணகியைக் காமவேள் கோயிலுக்கு வந்து தொழுமாறு கூறியபொழுது, "நீ உன் கணவனால் வெறுக்கப்படவில்லையே! அதனால் மீண்டும் அவனைப் பெறுவது எளிது" என்று கூறினள். கண்ணகியோடு நெருங்கிப் பழகிய தோழி கூறிய சொல் ஆகையால், இது

உண்மையான சான்ருகும். ஆகவே, கோவலன் கண்ணகி யிடம் செலுத்திவந்த அன்பை மறந்தானே அல்லாமல், துறந்தான் அல்லன். இவ்வாறு ஒன்றைப் பற்றி ஒன்றை மறந்து வாழ்வது கலைஞர் இயல்பு. கலைமனம் அத்தகையது. அறிவு பலதிறமும் காணச் செய்வது; உணர்வு ஒருதிறமே கண்டு மற்றவற்றை மறக்கச்செய்வது. கலை வளர்த்திடும் உணர்வு கலைஞர் வாழ்க்கையை இவ்வாறு மாற்றிவருவதை உலகெங்கும் காணலாம். ஆகையால் கோவலன் போன்ற கலைஞர் அன்பைத் துறந்தார் என்று குறைகூறுவது பொருந்தாது; மற்ருேர் இடத்தில் அன்பைப் பெற்றதும், முன்னைய அன்பை மறந்தார் என்று கூறுவதே பொருந்தும். கோவலன் பெற்ற புதிய உறவும் அன்பு மிக்க உறவே; பண்புநலத்தால் கண்ணகிக்கு நிகரானவள் மாதவி; அதனேடு கண்ணகியிடம் காணப்படாத ஆடல்பாடல் சிறப்பையும் அழகுமிகுதியையும் மாதவியிடம் கண்டதால், கோவலன் அவளுடைய அன்பால் எளிதில் கவரப்பட்டான். ஆடல்பாடல் அழகு இம்மூன்றிலும் ஒருகுறையும் இல்லாத வாறு மூன்றையும் கலையாக ஏழாண்டு கற்ற மாதவிக்கு இயற்கையாகவே தூய அன்பும் இருந்ததால், கோவல னுடைய கலைமனம் எளிதில் அவளிடம் நின்றது; கண்ணகியின் அன்பை மறந்தது. கண்ணகி என்ற பெயரை மறக்கவில்லை; வடிவை மறக்கவில்லை; அவளுடன் வாழும் வாழ்வையே மறந்திருந்தான்; மாதவி கலையுணர் வோடு செலுத்திய அன்பை மறுத்து வெளிவர முடியாத காரணத்தாலேயே அவ்வாறு மறந்து இருந்தான்.

கோவலன் ஈர நெஞ்சினன்

வெறுப்பதற்கு ஒரு காரணமும் இல்லாத, வெறுக்கவும் படாத, கண்ணகியின் அன்பைத் துறக்க முடியாதவன் கோவலன்; அத்தகைய ஈர நெஞ்சம் அவனுக்கு இயல் பாகவே அமைந்திருந்தது என்பதை மாடலன் அவனைப்

பற்றிக் கூறும் புகழுரையால் அறியலாம். மாதவி பெற்ற மகளுக்கு மணிமேகலை என்றுபெயரிட்ட அன்று கோவலன் பொன்னை வாரி வழங்கித் தானம் செய்தான். தானம் பெற வந்தவருள் முதிய மறையோன் ஒருவன் தண்டே காலாக ஊன்றிக் கூனி வளைந்த உடம்போடு மெல்ல வந்தான். அப்போது மதயானை ஒன்று பாகர்க்கு அடங்காமல் வந்து சினத்தோடு அந்த முதியவனைப் பற்றியது. தானம் வழங்கிக்கொண் டிருந்த கோவலன் உடனே விரைந்து சென்று அவனை யானையின் கையிலிருந்து விடுவித்துத் தானே அதன் கையில் புகுந்து அதன் கொம்பைப் பற்றிக்கொண்டு மெல்ல மத்தகத்தின்மேல் ஏறி அமர்ந்து அதை அடக்கினான். அவ்வளவு கருணை நிறைந்த நெஞ்சினன் கோவலன். வளர்த்த கீரிப்பிள்ளையை அறியாமல் கொன்ற காரணத்திற்காகத் தன்மனைவியை வெறுத்துத்துறந்தான் அந்தணன் ஒருவன். அவ்வாறு துறக்கப்பட்டுத் திக்கற்று விடப்பட்டவளைக் கோவலன் அழைத்து அவளுடைய துன்பத்தைக் கேட்டறிந்து, "அம்மா! நீ கவலைப்படாதே. உன் துயரம் நீங்குமாறு செய்வேன்" என்று சொல்லி அவளுக்குப் பெரும்பொருள் கொடுத்து, கீரியைக் கொன்ற பாவம் தீரும் வகையில் தானம் செய்யுமாறு கூறினான். தானம் செய்து பாவத்தைப் போக்கிய பிறகு, காட்டிற்குச் சென்ற கணவனைத் திரும்பி வரச்செய்து கூடிவாழவும் செய்தான். மேலும், அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய பொருளுதவியும் நிரம்பச் செய்து அவர்களை நல்வழிப்படுத்திக் காப்பாற்றினான். மற்றொரு முறை, ஒருவன் பொய்ச்சான்று கூறி அது காரணமாகப் பூதத்தின் கொலைத் தண்டனைக்கு ஆளானபோது, அவனுடைய தாயின் துயரத்தைக் கண்டு கோவலன் மனம் இரங்கினான். அவனுயிர்க்கு ஈடாகத் தன்னுயிரைக் கொண்டு அவனை விடுதலை செய்ய வேண்டும் என்று மன்றாடினான். கோவலனுடைய வேண்டுகோள் மறுக்கப்பட்டது. தண்டனை நிறைவேறியது. 'அப்போதும்

அவனுடைய தாயின் துயரத்தைக் கண்டு வருந்தி அவளோடு சென்று அவளுடைய சுற்றத்தாருக்கும் சார்ந்தவர்களுக்கும் பொருளுதவி புரிந்தான்; பல ஆண்டுகள் காப்பாற்றினன். இத்தகைய அறச்செயல்களை எல்லாம் மாடலன் நேரில் கண்டு, கோவலனுடைய ஈரநெஞ்சத்தை நன்கு உணர்ந்த காரணத்தால், "இப்பிறப்பில் நல்வினை தவிர வேறென்றையும் நீ செய்யக் கண்டதில்லையே" என்று மனம் உருகிப் போற்றினன்.

பிறர் துன்பம் உற்றபோதெல்லாம் இவ்வாறு விரைந்து சென்று உதவிய இரக்கம் உடையவன், தன் உயிரையும் பொருளையும் பொருட்படுத்தாமல் உதவமுனைந்த நன் மனம் உடையவன், கண்ணகியின் துயரத்தை அறிந்தும் நினைந்தும் கல்மனத்தோடு இருந்தான் என்றோ, வெறுத்திருந்தான் என்றோ கொள்வது பொருந்தாது.

உணர்ந்ததும் வருந்தல்

மாதவியுடன் கோவலன் வாழ்ந்த காலத்தில் கண்ணகி தன் துயரைப் பிறர் அறியாவண்ணம் தனக்குள் மறைத்து வந்தாள். தன் மாமனும் மாமியும் எவ்வளவோ பாராட்டிக் கேட்டபோதும் துயரைத் தன்னுள் மறைக்கவே முயன்று வந்தாள். அணிகலன் முதலியன எடுத்துச் செல்வதற்காகக் கணவன் இடையிடையே வீட்டிற்கு வந்து சென்ற சில நாட்களிலும் கண்ணகி தன் துயரை அவனும் அறியாதவாறு தனக்குள் மறைத்திருக்கக்கூடும். அதனல்தான் கோவலன் அவள் வாடிவருந்தியதை நெடுங்காலம் உணராமலே இருந்துவிட்டான். இறுதியில் கண்ணகியாலும் மறைக்க முடியாத எல்லை வந்தது. மெலிந்து வாடினள். மாதவியிடம் வெறுப்புத் தோன்றி வீட்டிற்குத் திரும்பி வந்த அன்றுதான் கோவலன் பள்ளியறைக்குள்சென்று கண்ணகியின் வாடியமேனியையும் வருத்தத்தையும் கண்டறிந்தான்; தன் தவறு நினைந்து இரங்கினன். அன்றும், கண்ணகியின்

உள்ளத் துயரைக் கோவலனுக்குத் தெரிவித்தது அவளுடைய வாடிய மேனியே அல்லாமல், முகக்குறிப்போ, வாய்ச்சொல்லோ அன்று. மேனி வாடும் அளவிற்குத் துயரம் தாங்கமுடியாத நிலை வந்தபோதும், கண்ணகியின் முகத்தில் மலர்ச்சி இருந்தது; வாயில் முறுவல் இருந்தது. கணவனுடைய கண்ணெதிரில் "நலங்கேழ் முறுவல் நகை முகம் காட்டி" நின்றாள். அதனோடு அமையாமல், "சிலம்பு உள்ளன. கொள்ளும்" என்று மனமாரக் கூறினாள். ஆகவே, அன்றும் அவளுடைய மேனி வாடாமல் இருந்திருப்பின், கண்ணகி தன் பிரிவால் வருந்தவில்லை என்றே கோவலன் கருதியிருப்பான் போலும்!

கண்ணகியின் துயரத்தை உணர்ந்திருப்பின் மறவாமல் நினைந்திருப்பின், கோவலன் அதற்காகக் கசிந்துருகித் திருந்தியிருப்பான் என்பதை அவனுடைய இரக்கம் மிகுந்த நெஞ்சு கொண்டு தெளியலாம். முதிய மறையோனைக் காத்ததும், அந்தணன் மனைவிக்கு நல்லுதவி ஆற்றியதும், மகனை இழந்த தாயைப் பல ஆண்டுகள் புரந்ததும் ஆகிய இரக்கம் மிகுந்த செயல்களால் அறிவதுபோலவே, கண்ணகியிடம் அவன் திரும்பியபின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாலும் அதை அறியலாம். காட்டு வழியில் கண்ணகியோடு நடந்து செல்வதை நினைந்து நினைந்து உலைக்களத் துருத்திபோல் பெருமூச்சு விட்டுக் கலங்கினான் என்றும், அதனாலேயே உள்ளம் வருந்தி வருந்தி உடல் மெலிந்து உருவம் மாறினான் என்றும், கோசிகனால் அவனை அடையாளம் கண்டறிய முடியாமல் போயிற்று என்றும் இளங்கோவடிகள் கூறுகிறார்:

> காதலி தன்னொடு கானகம் போந்ததற்கு
> ஊதுலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி
> உட்புலம் புறுதலின் உருவம் திரியக்
> கட்புல மயக்கத்துக் கௌசிகன் தெரியான்.

(சிலப். புறஞ்சேரி. 44-47)

கவுந்தியடிகளிடம் தன் தவறு நினைந்து வருந்திக்கூறிய போதும், மலர்போன்ற மேனியளாகிய கண்ணகி துயருறும் படியாகக் காட்டுவழியில் நடத்திவந்ததைக் கோவலன் எடுத்துரைத்து வருந்தினன் :

நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை உழந்து
சிறுமை யுற்றேன்.

(சிலப். ஊர்காண். 17-20)

"கல்நிறைந்த வழிகளைக் கடக்கக் கண்ணகியால் முடியாதே என்று இந்தக் கொடிய பாலைவழியில் வந்ததை நினைந்து என் பெற்றோர் வருந்துவார்களே" என்று கண்ணகிக்காக அவர்கள் வருந்தக்கூடும் என நினைந்து தன்னை நொந்துகொண்டான் :

கல்லதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடிஎன
வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி
எம்முது குரவர் என்உற் றனர்கொல் ?

(சிலப். கொலைக். 57-60)

பல ஆண்டுகள் கண்ணகியைப் பிரிந்து மாதவியின் வீட்டில் வாழ்ந்த கோவலன் அப்போதெல்லாம் அவளுடைய தனிமைக்காக வருந்தவில்லை. காரணம், அவள் என்றும்போல் வீட்டில் கடமைகளைச் செய்துகொண்டு கவலை இல்லாமல் வாழ்வாள் என்ற எண்ணமும், அவளுக்குத் துணையாக ஆயத்தாரும் சுற்றத்தாரும் ஏவலாளரும் பிறரும் இருத்தலோடு தன் பெற்றோரும் அண்மையில் உள்ளனர் என்ற எண்ணமுமே ஆகும். ஆனால் வெளியூராகிய மதுரையில் உற்றார் உறவினர் இல்லாத புதிய

இடத்தில், இதற்குமுன் அறியாத மாதரியின் வீட்டில் கண்ணகியைத் தனியே விட்டுச் செல்ல நேர்ந்தபோது அதற்காகக் கலங்கினன் :

> குடிமுதல் சுற்றமும் குற்றிளை யோரும்
> அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி...
> என்னெடு போந்தீங்கு என்துயர் களைந்த
> பொன்னே!...
> சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்
> மாறி வருவன் மயங்கா தொழிகென......
> உழையோர் இல்லா
> ஒருதனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி
> வருபனி கரந்த கண்ணன் ஆகி
>
> (சிலப். கொலைக். 84-97)

கண்ணகிக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் வீட்டில் துணையாக இருந்த சுற்றத்தாரையும் ஆயத்தாரையும் ஏவலாளரையும் பிறரையும் நினைந்து, மதுரையில் இப்போது பக்கத்தே ஒருவரும் துணையில்லாத திக்கற்ற தனிமையை எண்ணி உள்ளம் வெதும்பினன். சிலம்பு விற்றுவரும் வரையில் எவ்வாறு தனியாக இருப்பாள் என்று வருந்திக் கண்ணீர் கலங்கினன்.

இவ்வளவு இளகிய நெஞ்சம் உடைய கோவலன் முன்பு பல ஆண்டுகள் பிரிந்திருக்கமுடிந்த காரணம் என்ன ? கண்ணகியின் துயரத்தைக் கண்டு அறியாத நிலையும், மாதவியின் பேரன்புக்கு உரியவனுக இருந்த காரணத்தால் அந்தத் துயரத்தை எண்ணி அறியவும் முடியாத நிலையும் காரணமாகும். கண்ணகியின் துயரத்தை வாடியமேனியால் கண்டு தெளிந்தபின், மாதவியின் பேரன்பைத் துறந்து வெறுக்கும் நிலைமை வந்தபின், இப்போது சிலம்பை விற்று வரும் வரையில் பிரிவதற்கும் வருந்தினன். முன்பு பல

ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்தவன் இப்போது சில நாழிகை நேரம் பிரிவதற்கும் ஆற்ருமல் கண்கலங்கினுன்.

ஆகவே, கோவலன் கண்ணகியை வெறுத்தவனும் அல்லன்; அவளிடம் அன்பு துறந்தவனும் அல்லன்; ஒருவாறு மறந்தவனே ஆவான்; கண்ணகியின் (துயர்வெளிப்படுத்தாத) பொறுமையும் மாதவியின் பேரன்பும் அவனை அவ்வாறு பிரிந்திருக்குமாறு செய்தன என்று அறியலாம்.

கடிந்து திருத்தாமை

கண்ணகி தன் துயரத்தைப் புலப்படுத்தாவிட்டாலும் கணவன் செய்த தவற்றையேனும் அவ்வப்போது எடுத்துக் கூறிக் கடிந்திருக்கலாம்; அது உரிமை பற்றிச் செய்யும் செயலே ஆகும்; அவ்வாறு இடித்துரைத்திருப்பின் அவன் சில திங்களுக்குள்ளாகவே தவறு உணர்ந்து திருந்தியிருக்கக்கூடும்; "நகுதற் பொருட்டு அன்று, மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு" என்று திருவள்ளுவர் நண்பர்க்குக் கூறிய கடமை காதலர்க்கும் உரியதே ஆகும்; அதனுல் அவ்வாறு இடித்துரைக்காமல் வாளா இருந்தது கண்ணகியின் குறையே என்று எடுத்துக்கூற இடம் உள்ளது. இந்தக் குறை எளிதில் தட்டிக் கழிக்கக் கூடியதும் அன்று.

பெரும்பாலோரின் வாழ்க்கையைக்கொண்டு ஆராய்ந்து காணும்போது இது குறையாகத் தோன்றுகிறது. ஆனுல், குணம் என்னும் குன்றேறி நின்ற ஒரு சிலருடைய வாழ்க்கைப் பெற்றியை ஆராய்ந்து காணும்போது, இதுவும் குறை அன்று என்றே தோன்றுகிறது. அரசாங்கம் பெருங்குற்றம் சுமத்தி உயிர்த் தண்டனை விதித்த காலத்தில் சாக்ரடீஸ் போராடவில்லை; ஏசுநாதர் தம் தவறின்மையை எடுத்துரைக்கவில்லை; காந்தியடிகள் எதிர் வழக்காடவில்லை. இவை வரலாறு அறிந்த உண்மைகள்; வரலாற்றின் சிறு பார்வைக்கு எட்டாத வாழ்க்கைகள்

எத்தனையோ இத்தகைய நிலையில் இருந்திருக்கும்; இருந்து வரும்; அண்ணன் - தம்பி, தந்தை - மகன், மாமி - மருகி, கணவன்-மனைவி எனக் குடும்ப வாழ்க்கையில் போராட்டம் ஏற்பட்டபோது தத்தம் போக்குக் குற்றம் அற்றது என எடுத்துரைக்காமல் பிறர் இழைத்த துன்பத்திற்கு ஆளாகி நொந்தவரும் மடிந்தவரும் உலகில் இடையறாமல் இருந்து வருகின்றனர் என்றே கொள்ள வேண்டும். கடலின் ஆழத்தில் எத்தனையோ முழுமணிகள் கண்டெடுப்பார் இல்லாமல் கிடக்கின்றன; ஒரு சில மணிகளே மணிமுடி களில் ஏறி ஒளிபரப்ப முடிகிறது. அத்தகைய ஒளிமணி களே சாக்ரடீஸ், ஏசு, காந்தி என்னும் பெயர் தாங்கும் வாழ்வுகள். இத்தகைய வாழ்க்கைகள், பெரும்பாலோரு டைய வாழ்க்கையைக் கொண்டு அளந்தறிய முடியாதவை. எதிர்வழக்காடித் தம் நேர்மையை நிலைநாட்டிப் பிறர் குற்றத்தை எடுத்துரைக்காதது தவறு என்று இவர்களைக் குறைகூறுவது எளிது; ஆயின் இவர்களின் உள்ளப் பண்பாட்டை உணர்ந்து ஆராய்ந்தறிவது அரிது, மிக மிக அரிது.

நண்பர் கடமை

நண்பரை இடித்துரைத்தல் கடமை என்று திருவள்ளு வர் கூறியது உண்மைதான் :

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

(குறள், 784)

இந்த உண்மை காதலர் வாழ்விற்கும் பொருந்தும் என்பதும் உண்மைதான். இதற்கு ஏற்பவே கண்ணகியும் நடந்தாள் என்பதைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.

சிலப்பதிகாரச் சான்றைக் காணுமுன்பு திருவள்ளுவரின் கருத்தைத் தெளிதல் வேண்டும். இடித்துரைத்தல் நண்பர் கடமை என்று திருக்குறள் கூறுகிறது. எத்தகைய தவறு நேர்ந்தபோது, எவர்க்குச் செய்த தவறு பற்றி இடித்துரைக்க வேண்டும் என்பதை ஆராய்தல் வேண்டும். நண்பர் ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கு செய்தபோது, தீங்கு உற்றவர் இடித்துரைக்க வேண்டும் என்று திருக்குறள் கூறவில்லை. அதைக் கூறுவதாக இருப்பின், நகுதற் பொருட்டன்று என்று விலக்கவேண்டுவ தில்லை. தீங்கு உற்றவர் அதை மறந்து சிரித்து மகிழ்வது என்பது எளியது அன்று; விலக்கத்தக்க அவ்வளவு எளியது அன்று; உயர்ந்த பண்புகளுடன் பொறுமை மிக்கவர்க்கே அது கைகூடுவது அன்றியும், தீங்குசெய்யப்பட்ட நண்பர் உடனே அதைக் கடிந்துரைக்கவேண்டும் எனின், நண்பர்க்கும் மற்றவர்க்கும் வேறுபாடு இல்லாமற் போகிறது. தீங்கை எதிர்த்து இடித்துரைத்தல் எல்லோர்க்கும் இயல்பு ஆகையால், அதை நண்பரின் சிறப்பியல்பாக வற்புறுத்த வேண்டியதில்லை.

இங்கு 'மிகுதி' என்று திருவள்ளுவர் கூறியது நண்பர் ஒருவர் மற்றொரு நண்பர்க்குச் செய்த தவறு பற்றியது அன்று. பிறரிடம் வரம்பு கடந்து செய்த தவறு பற்றியதே ஆகும். அறநெறியை மறந்து தகாத செயலை நண்பன் மேற்கொண்டபோது, அப்போது அதை இடித்துரைக்க வேண்டும் என்பதே திருவள்ளுவர் கருத்து. "பிறரிடம் அவன் செய்யும் தவறு பற்றி எனக்கு என்ன கவலை? அதனால் எனக்கு ஒரு தீங்கும் நேரவில்லை. ஆகையால் நான் வழக்கம்போல் சிரித்து விளையாடிக் காலம் கழிப்பேன். நான் ஏன் மேற்சென்று இடித்துரைத்து நண்பனுடைய வெறுப்புக்கு ஆளாக வேண்டும்" என்று ஒருவன் கடமையை மறந்து ஒதுங்கி நிற்பானானல், அவன் உண்மை நண்பன் அல்லன் என்று எடுத்துரைப்பதே திருவள்ளுவரின் நோக்கமாகும்.

உண்மை அன்பு

கண்ணகியின் வாழ்வும் இந்த நெறியில் நின்றே நடைபெற்றது. கோவலன் தனக்குச் செய்த தீங்கை அவள் தீங்காகவே கொள்ளவில்லை. அதைக் குறித்துத் தன் தோழியாகிய தேவந்தியிடமும் ஒன்றும் கூறவில்லை. ஆனால், கோவலனுடைய பெற்றோர் உள்ளம் நொந்து வருந்தியதை மட்டும் அவள் மறக்கவில்லை. "பெற்றோர் உள்ளம் வருந்துமாறு நடந்தீரே" என்று கடிந்துரைக்க வேண்டும் என அதற்கு உரிய வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள். அன்று மாலை எதிர்பாரா வகையில் திரும்பிவந்தபோது கடிந்துரைத்திருக்கலாம். ஆனால் அன்று அவனுடைய முகத்தில் துயரம் குடிகொண் டிருந்ததையும் 'இலம்பாடு நாணுத் தரும்' என்ற நாணிய நிலையையும் கண்ட கண்ணகி வெந்த புண்ணில் வேல் எறிதல் ஆகாது என்று எண்ணி வாளா இருந்தாள். மதுரைக்குச் சென்று மாதரி வீட்டில் கோவலன் துயர் தீர்ந்து இனிது இருக்கும் வாய்ப்பு நேர்ந்தபோதுதான் இடித்துரைத்தாள்.

உண்டுஇனிது இருந்த உயர்பே ராளற்கு

(சிலப். கொலை. 54)

ஈங்கு என் துயர் களைந்த
பொன்னே கொடியே......

(ஷை 88-89)

என்னும் அடிகளால், கோவலன் அப்போது இனிது இருந்தமையும் துயர் நீங்கி இருந்தமையும் விளங்கும். அந்த வாய்ப்பையே கண்ணகி பயன்படுத்திக்கொண்டாள். "பெற்றோர் உள்ளகம் வருந்துமாறு தகாத ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தீர்":

அவர் உள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்

(ஷை 80-81)

என்று இடித்துரைக்கக் கருதியிருந்தவாறே எடுத்துரைத்தாள். தான் என்றும் மாறுத உள்ளத்தோடு ஒருநிலையாய் வாழ்ந்த தன்மையையும் அப்போது எடுத்துரைத்தாள்: "யாவதும் மாற்ரு உள்ள வாழ்க்கையேன்" என்று தன்னைப் பற்றிக் கூறி, அவனுடைய உறுதியற்ற-ஒருநிலை யற்ற - வாழ்வைக் குறிப்பாகப் புலப்படுத்தினுள். இந்த இடித்துரை பல சொற்களால் கடுமை நிரம்பியதாய் இல்லாமற் போகலாம். பண்பாடு மிக்க கண்ணகி தீயசொற்களை வழுக்கியும் வாயால் சொல்ல இயலாதவள். கோவலனும் கானல்வரிப் பாட்டால் மனம் திரியக் கூடிய அவ்வளவு நுண்ணிய உணர்வு உடையவன். ஆகையால், கடுஞ்சொற்கள் ஆயிரம் கூறித் திருத்த வேண்டாத பண்பாடு உள்ள குடும்பம் அது; ஒரு சொல்லால் மெல்ல எடுத்துரைத்தாலும் புண்பட்டு உணரவல்ல மென்மை உள்ள குடும்பம் அது. மெல்லிய நகம் கொண்டு கிள்ளி எறியவேண்டிய ஒன்றனுக்காகக் கோடரி கொண்டு செல்வது அறியாமையினும் அறியாமையாகும். இன்னுச் சொல் பற்பல கூறியும் இடித்துரையாகக் கொள்ளாத மனமும் உலகில் உண்டு; இனிய சொல்லாகவே ஒன்றே கூறினும் அதை இடித்துரையாகக் கொள்ளும் மனமும் உலகில் உண்டு. கோவலன் மனம் அத்தகையது; கண்ணகியின் வாயோ கனியிருப்பக் காய்கவராத சொற்பண்பாடு வாய்ந்தது. ஆதலின்,

> **அவர் உள்ளகம் வருந்தப்**
> **போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்**

என்ற அவ்வுரையே கண்ணகியின் இடித்துரையாகும். நகுதலுக்கு இடமாக உள்ள வாய்ப்பை மேற்சென்று இடித்துரைத்தலுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே திருவள்ளுவர் நண்பருக்குக் கூறும் அறிவுரை. மாதரி வீட்டில் துயர் நீங்கி இனிது இருந்த கோவலன்,

"கண்ணகி! வருக இங்கே" என்று அழைத்து அன்போடு இருந்தபோது, அந்த வாய்ப்பை மகிழ்ந்திருக்கப் பயன் படுத்திக்கொள்ளவில்லை கண்ணகி. கடிந்துரைப்பதற்கே, பயன்படுத்திக்கொண்டாள். நகுதற்கு வந்த வாய்ப்பை இடித்துரைத்துத் திருத்துவதற்குப் பயன்படுத்திக்கொண்ட உண்மையன்பை இங்குக் காண்கிறோம்.

இவ்வாறு கடிந்துகூறியகண்ணகி, தனக்குக் கோவலன் துன்பம் செய்ததாக அவன்மேல் குற்றம் கூறும் முறையில் ஒரு சொல்லும் சொல்லாததை உணரவேண்டும். அவன் பிறர்க்கு - பெற்றோர்க்குச் - செய்த துன்பத்தைமட்டுமே எடுத்துரைத்துக் கடிந்தாள்; அந்தக் கருத்தாலேயே "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்றாள்.

மகிழ்தல் கடமை

தனக்குக் காதலன் செய்யும் துன்பத்தைப் பற்றிக் கடிந்துரைத்தல் கடமை அன்றோ? நட்பைக் குறித்து விளக்கும் திருவள்ளுவர் இதுபற்றி என்ன கூறுகிறார்? நண்பன் தனக்குத் தீங்கு செய்யும்போது ஒருவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? திருக்குறள் இதுபற்றி விளக்கும் கருத்து என்ன?

நண்பர் வருந்தத்தக்க துன்பம் செய்தால், அதற்குக் காரணம் அறியாமைமட்டும் அன்று; மிக்க உரிமை பற்றிச் செய்தார் என்று உணரவேண்டும். அன்பின் வழியில் வளர்ந்த நட்பு உடையவர், அழிவுதரும் துன்பங்களை நண்பர் செய்தபோதிலும் அன்பு நீங்கார். நண்பர் தமக்குச் செய்யும் தவறு பற்றிக் கேட்காமல் விடும் உரிமைவல்லவர்க்கு, அந்நண்பர் தவறு செய்தால் அது நல்ல நாளாகும்:

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.

அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

(குறள். 805, 807, 808.)

இவைகள் திருக்குறள் இத்துறையில் உணர்த்தும் கருத்துக்கள். நண்பர் தனக்குத் தீங்கு செய்தபோது மிக்க உரிமை என்று உணர்தலும், அன்பு நீங்காதிருத்தலும், நல்ல நாள் என்று மகிழ்தலும் கடமைகள் எனின், காதல்வாழ்வில் கண்ணகி பொறுத்திருந்ததும், துயர் புலப்படுத்தா திருந்ததும், 'நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிய'தும் தவறு ஆகுமோ? உற்ற துன்பத்தைப் பொறுத்து முகமலர்ச்சியோடு விளங்கும் பண்பு, நட்பிற்கு இன்றியமையாதது போலவே காதலுக்கும் இன்றியமையாதது ஆகும். 'உற்ற நோய் நோன்றல்' என்று திருவள்ளுவர் தவத்தின் உருவாகக் கூறிய இந்தப் பண்பையே கண்ணகியின் கற்புத் தவத்திலும் காண்கிறோம். அதனால்தான், பல ஆண்டுகள் துறந்து பிரிந்திருந்த கணவன் மீண்டுவந்தபோது கண்ணகியால் 'நகைமுகம்' காட்ட முடிந்தது. 'நலம்கேழ் முறுவல் நகைமுகம்' காட்டவல்ல மனநிலை கற்புத் தவத்தால் பிறந்ததே ஆகும்.

வழக்குரைத்தது தகுமோ?

சான்றோர்களாகிய ஏசுநாதரும் காந்தியடிகளும் தற்காப்புத் தேடி எதிர்வழக்காடாதபோது, கண்ணகி பாண்டியனிடம் சென்று வழக்குரைத்தது பொருந்துமா என்றும், பொருந்துமாயின் அத்தகைய சான்றோருடன் கண்ணகியை ஒப்பிடுதல் தகுமா என்றும் கேட்கலாம்.

ஏசுநாதரும் காந்தியடிகளும் தாமே குற்றம் சாட்டப்பட்டனர்; தாமே ஒறுத்தலுக்கு ஆளாகி நின்றனர்;

தம் தம் உயிர்க்கும் வாழ்க்கைக்குமே தண்டனை எதிர் பார்த்து நின்றனர்; அந்நிலையில் தம் கொள்கையைக் கூறித் தவறின்மையை நிலைநாட்ட மறுத்தனர். ஆயின், கண்ணகியின் நிலை வேறு. கண்ணகி குற்றம் சாட்டப் படவில்லை; ஒறுத்தலுக்கு ஆளாகவில்லை. கோவலனே அந்த நிலை உற்றவன். உயிர்க்கு ஊறு வந்துற்றது கண்ண கிக்கு அன்று; அவளுடைய கணவனுக்கு. ஆதலின் கண்ணகி பாண்டியனிடம் வழக்காடியது தன் பொருட்டு அன்று; கள்வன் என்று பழிசுமத்திக் கொல்லப்பட்ட தன் கணவன் பொருட்டு. கண்ணகி தன்னைக் காத்துக்கொள் ளும் பொருட்டு வழக்காடவில்லை; தன்னைக் கொண்ட கணவனைக் காக்கும் பொருட்டு வழக்காடும் வாய்ப்பும் அவளுக்கு இல்லை; தகைசான்ற சொல் - தன் கணவன் புகழ் - காக்கப்படுவதற்காக வழக்காடும் வாய்ப்பு ஒன்றே அவளுக்கு இருந்தது. அந்த வாய்ப்பை வீணேவிடாமல் பாண்டியனிடம் சென்று வழக்குரைத்தாள்; வெற்றியும் பெற்றாள்; தகைசான்ற சொல் காத்தாள்; கோவலன் கள்வன் அல்லன் என்று ஊர் அறியச் செய்தாள்; குற்றம் சுமத்திக் கொன்ற பாண்டிய வேந்தன், "யானோ அரசன், யானே கள்வன்" என்று வாய்விட்டு அலறும்படியாகச் செய்தாள்.

இவ்வாறு பிறர்பொருட்டு உண்மையை எடுத் துரைத்துப் போராடும் வாய்ப்பு, ஏசுநாதர்க்கு இல்லை; காந்தியடிகளுக்கு இருந்தது. அவர் கண்ணகிபோல் நடந்துகொண்டார். கண்ணகிபோல் தாம் உற்ற துன்பத் திற்காக வருந்தவில்லை; அதற்காக எவரிடமும் போராட வில்லை. அதைப் பொறுத்தல் கடமை எனத் தாங்கி னார்; 'உற்ற நோய் நோன்றல்' தவத்திற்கு நன்மை என உணர்ந்தார். ஆயின், இந்திய நாடு அடக்கியாளப் படுவதை எதிர்த்துப் போராடினார்; நாட்டு மக்களுக்கு உற்ற துன்பத்தை எதிர்த்துப் போராடினார்; நாடும்

மக்களும் பழிக்கப்பட்டபோது, பழியுரைகளைப் பொய் என்று உலகறிய எடுத்துச் சொல்லி முழங்கினர். தாம் ஒறுக்கப்படும்போது அமைதியுடன் ஏற்றுக்கொண்டு, தம் நாடு ஒறுக்கப்படும்போது ஆற்றலுடன் எதிர்த்து, நாட்டிற்காக வழக்காடும் வீரராக விளங்கினர். கண்ணகியின் வீர வழக்குரையிலும் இத்தகைய உணர்வையே காண்கிறோம்.

சொல் காக்கும் கடமை

தற்காத்தல், தற்கொண்டாற் பேணல், தகைசான்ற சொற்காத்தல் என்று வாழ்க்கைத் துணைவிக்கு மூன்று கடமைகளைக் கூறுகிறார் திருவள்ளுவர். இவற்றுள் தற்கொண்டானை இயன்றவரையில் போற்றினாள் கண்ணகி; அவனை இழக்க நேர்ந்தபோது வாடி வருந்திப் புலம்பினாள். ஆயின், உடனே உயிர் துறக்கவில்லை; தன்னை இழக்கவில்லை. கோப்பெருந்தேவி போல் உடனே உயிர் துறந்து கணவனுடன் மறையாத காரணத்தை இங்கு ஆராய வேண்டும்.

கணவன் பாண்டிய வேந்தன் இறந்தபோது கோப்பெருந்தேவியின் கடமை ஒன்றும் குறையாக நிற்கவில்லை. கணவனுடைய உயிரைக் காப்பது அவள் பொறுப்பில் இல்லை. கணவனுடைய புகழைக் காப்பது இயலாததாகி விட்டது. கணவனே தன் குற்றத்தை உணர்ந்து "யானோ அரசன், யானே கள்வன், தென்புலங் காவல் என்முதல் பிழைத்தது" என மயங்கி வீழ்ந்தான். ஆகவே உயிர்தாங்கி நின்று தான் செய்யத் தக்க கடமை ஒன்றும் இல்லாமையால், கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கிக் கண்ணகியின் இணையடி தொழுது வீழ்ந்தாள்.

கண்ணகிக்கோ ஒரு பெருங் கடமை எதிரே நின்றது. கள்வன் என்று ஊரறியப் பழிக்கப்பட்ட கணவனுடைய புகழைக் காக்கும் கடமையை விட்டு உயிர் துறப்பது அறம்

அன்று என உணர்ந்தாள். கோவலன் கள்வன் அல்லன் வேந்தனே தவறுடையான் என்பதை ஊரறியக் காட்டும் வரையில் அவள் சீற்றத்துடன் முனைந்து நின்ருள். ஊரறியச் செய்தபின், அவளுடைய சீற்றமும் தணிந்தது; உள்ளத்தின் உரமும் ஒடுங்கியது. உடல்மட்டும் நடந்து சென்று திருச்செங்குன்றின் வேங்கைமர நீழலை அடைந்து பதினன்காம் நாள் வரையில் நின்றது. ஆதலின், தகைசான்ற சொல்லைக் காப்பதற்காகத் தன்னுயிரைக் காத்து நின்ற கண்ணகியின் செயலே, வாழ்க்கைத் துணைவிக்கு உரிய செயலாகும்; திருவள்ளுவர் உணர்த்திய நெறியும் இதுவே ஆகும். ஆகவே, கோப்பெருந்தேவிக்குக் கண்ணகியைவிடத் தனிச்சிறப்பு இதனுல் இல்லை என்பது தெளிவு.

கற்பு என்னும் திண்மை

"பெண்ணின் பெருந்தக்க யாஉள?" என்று பெண்ணின் பெருமை பேசுகிருர் திருவள்ளுவர். அதற்கு இன்றியமையாத பண்பாக அவர் கூறுவது, கற்பு என்னும் திண்மையாகும். குறிக்கோள் தவருத இந்தத் திண்மையைக் கண்ணகியின் வாழ்வு முழுதும் காண்கிருேம். சிறப்பாக, தனித்துத் துன்புற்று வாடிய நிலையிலும் காண்கிருேம்.

கணவனைப் பிரிந்து தனித்திருந்து வருந்தும் கண்ணகியின் குறை அவளுடன் நெருங்கிப் பழகிய தோழி தேவந்திக்கே தெரியாமல் இருந்துவந்தது. தேவந்தி தானகவே எவ்வாருே தெரிந்துகொண்டு வருந்திய உள்ளத்தோடு அதைத் தீர்க்க முயன்ருள். அவளுக்காகத் தானே அறுகும் சிறுபூளையும் நெல்லும் தூவி வழிபாடு செய்து கண்ணகி கணவனைப் பெற்று மகிழ வேண்டும் என்று விரும்பினுள்:

> கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர்க்
> கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறைஉண்டுஎன்று
> எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி

அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக கணவனோடு என்றாள்.

(சிலப். கனாத். 40-44)

அத்தகைய அன்புடைய தோழி, கண்ணகியின் குறையைத் தீர்ப்பதற்காக ஒரு வழி கூறினாள். காவிரி கடலில் கலக்குமிடத்தில் இருந்த சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் துறைகளில் மூழ்கிக் காமன்கோயிலில் சென்று வழிபாடு செய்தால் கணவனைப் பெறக்கூடும் என்று சொல்லித் தானும் உடன்வந்து வழிபாடு செய்வதாகத் தெரிவித்து, ஒரு நாள் வருமாறு கண்ணகியை அழைத்தாள். அந்த நிலையில் பொதுவாகப் பெரும்பாலோர் மனம் மாறிக் கொள்கையையும் விட்டு இணங்குவதே இயற்கை. உள்ளம் சோர்ந்து உடம்பு வாடிய நிலையில் பெரும்பாலோர் கொள்கையைப் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால் அந்த நிலையிலும் கண்ணகியிடம் திண்மையே காண்கிறோம். தேவந்தி கூறியதைக் கேட்ட கண்ணகி கலங்கவில்லை; மறுமொழி கூறாமலிருக்க வில்லை; பல சொல் கூறித் தடுமாற வில்லை; இரண்டே சொல் கூறி அன்புமிக்க தோழியின் ஆர்வத்தைப் போக்கிவிட்டாள்; 'பீடு அன்று' (தகாது) என்றாள்.

கற்புடைய மகளிர் தெய்வம் தொழுதல் பண்டைக் காலத்துத் தமிழ்மரபு அன்று. கணவன் தொழுதால், அவனுடன் இருந்து தொழுதல் உண்டு: தனியே இருந்து தெய்வம் தொழும் வழக்கம் இல்லை.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

(குறள். 55)

என்று திருவள்ளுவர் கூறுவதும் இந்த மரபை ஒட்டியதே ஆகும். கணவனை விட்டு வேறு எவரையும் எந்தத் தெய்வத்தையும் வழிபடாத வாழ்வே கற்புடைய வாழ்வு என்பது அக்காலத்தோரின் கொள்கை. அது கல்லாமல்

பாகம்பட்ட கொள்கையாக - பண்பாடாக - அக்காலத்துக் குடும்பப் பெண்களுக்கு இருந்துவந்தது. ஒரு சிலர் அந்தக் கொள்கையை மெல்லக் கைவிட, தெய்வம் தொழும் வழக்கமும் அதனால் பயன் பெறும் நம்பிக்கையும் மெல்ல நுழைந்தன. அதனாலேயே தேவந்தி சாத்தன் கோயிலை வழிபட்டு வந்தாள்; காமன்கோயிலையும் வழிபட விரும்பினாள்; கண்ணகியும் தன்னைப் போல் துயருறு வதை அறிந்து அவளையும் வருமாறு அழைத்தாள். ஆனால் நெகிழ்வும் பிறழ்வும் அறியாத கொள்கைத் திண்மை உடைய கண்ணகியோ, "நமக்குத் தகாது" என்று, நிலையில் திரியாது அடங்கிய சான்றோர்போல் அமைதி யாய்க் கூறி மறுத்துவிட்டாள். எக்காரணத்தாலும் தன் மனத்தை மாற்றிக்கொள்ளாமல் என்றும் ஒரு நிலையாய், துருவன் வானத்தின் வடமீனாய் என்றும் மாறாமல் விளங் குவதுபோல், வாழ்ந்தவள் கண்ணகி.

> ......யாவதும்
> மாற்றா உள்ள வாழ்க்கையேன்
>
> (சிலப். கொலைக். 81-82)

என்று தன் ஒருநிலையான வாழ்க்கையைப் பற்றிக் கண் ணகியே கோவலனுக்குக் கூறியிருக்கிறாள்.

தன்னலம் இழந்த தூய்மை

இத்தகைய திண்மை இருந்த காரணத்தால்தான், கண்ணகி இறுதிவரையில் கணவன் தனக்குத் தீங்கு செய்ததாக ஒருவரிடமும் கூறவில்லை; கூறாதது மட்டும் அன்று; உள்ளத்தில் கொள்ளவே இல்லை. உள்ளத்தில் கொண்டிருந்தால், அது பல நாள் அடங்கியிருப்பினும் ஒரு நாள் வாய்ச்சொல்லால் எவ்வாறேனும் வெளிப்பட்டிருக் கும். உள்ளத்தாலும் கணவன் தீங்கு இழைத்ததாகக்

கருதாமல் வாழ்தல் அவளுக்கு எளிதாக இருந்தமையால், கணவனுடைய குற்றத்தைக் கடிந்துரைக்க நேர்ந்தபோதும் தன் பண்பாடு தவருமல் கூற முடிந்தது; கோவலன் பெற்ருேர் மனம் நோகப் போற்ரு ஒழுக்கம் புரிந்ததை மட்டுமே கூறினுள். தனக்குத் துன்பம் இழைத்ததைக் கூறவில்லை. தான் துன்புற்றதாகவும், அந்தத் துன்பம் தன் முறுவலில் புலப்பட்டதாகவும் கூறினுள். ஆனுல், துன்பத்திற்குக் காரணம், கோவலனுடைய புறத்தொழுக்கம் என்று உணராமல், பிரிவாற்ருமையால் வருந்தும் தன் நெஞ்சின் மென்மையே என்று உணர்ந்தாள். அந்தத் துன்பத்தையும் பிறர்க்குப் புலப்படாதவாறு தன் உள்ளத்தே ஒளித்துவைத் திருந்தாள். அது முற்றிலும் தன்வயமாக நிற்காமல், புன்முறுவலில் வெளிப்பட்டது என்ருள். தான் இழந்துவிட்டதாகக் கருதும்போது, கோவலனுல் பெறும் இன்பத்தை இழந்துவிட்டதாகக் கருதவில்லை. அவ்வாறு எண்ணுவது தன்னலம் என்ற ஆராய்ச்சி செய்து அந்தக் கருத்தை ஒதுக்க வில்லை. இயற்கையாகவே, பண்பட்ட நெஞ்சில் தன்னலம் தோன்ருமையால், தன் இன்பத்தை இழந்துவிட்ட எண்ணம் வரவில்லை. இல்லறக் கடமைகளைச் செய்யும் வாய்ப்பை இழந்துவிட்டதாகவே எண்ணினுள்.

> **அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
> **துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்துஎதிர் கோடலும் இழந்த என்னை**
>
> (சிலப். கொலைப். 71-73)

என்று தன்னலமற்ற முறையில் எண்ணினுள்; பிறர்க்கு உதவியாகச் செய்யும் இல்லறக் கடமைகளை இழந்துவிட்டதாகவே கருதி வருந்தினுள். இவ்வாறு பேச்சிலும் எண்ணத்திலும் தன்னுலம் தலைகாட்டாதவாறு வாழ முடிந்ததற்கு அவளுடைய கொள்கைத் திண்மையே காரணமாகும்.

“இற்பிறப்பு என்பது ஒன்றும் இரும்பொறை என்பது ஒன்றும் கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்” என்று கம்பர் கூறும் திண்மை வாய்ந்த சீதையின் வருத்தத்திலும் இத்தகைய தன்னலமற்ற தூய்மை நிலவுவதைக் காணலாம்:

அருந்து மெல்லடகு ஆர்இட அருந்தும்என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்உறு மோஎன்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்குஎன்று
மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித் திடவும்ஆண்டு எழாதாள்

(கம்ப. சுந்தர. காட்சிப். 15)

என்று சீதை உற்ற துயரிலும் இத்தகைய தூய்மை காணலாம்.

இவ்வாறு தன்னலம் அறவே இல்லாமல் வாழ்ந்த காரணத்தால்தான், கோவலன் தொலைத்த பொருளைப் பற்றி அவள் எள்ளளவும் கவலைப்படவில்லை. கோவலன் தன் வாயாலேயே,

குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்எனக்கு......

(சிலப். கனாத். 70-71)

என்று செல்வம் எல்லாம் தொலைந்து தான் வறுமையுற்று நாணுவதைக் கூறும்போதும், கண்ணகி அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக, கணவனுடைய கவலையைப் போக்கக் கருதி, “சிலம்புகள் உள்ளன, கொள்ளும்” என்றாள்; அவ்வாறு வாய்ச் சொல்லால் கூறியதுமட்டும் அல்லாமல், மனம் மகிழ்ந்து நின்றாள்; புன்முறுவலுடன் மலர்ந்த முகமாய் நின்றாள்:

நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்புஉள கொண்ம்எ்ன......

(சிலப். கனுத். 72-73)

கண்ணகியின் மாருத மனப்பான்மைக்குக் காரணமான திண்மையையே இதுவும் தெளிவிக்கிறது.

மென்மை

இத்தகைய கற்புத் திண்மை குடிகொண் டிருந்த உடலும் மென்மைமிக்கது; மனமும் மிக மென்மையானது. 'நறுமலர்மேனி' என்று கோவலன் குறிப்பிட்டுள்ளான். 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' என்று கவுந்தியடிகள் மாதரியிடம் கூறினர். அத்தகைய மெல்லியள் கண்ணகி.

கண்ணகியின் மனமும் மென்மை மிக்கது; நுண்ணிய உணர்வு உடையது; நாணம் என்னும் அரும்பண்பு உடையது; பிறர் உள்ளக் குறிப்பை விரைந்து உணர்வது; பிறர் வருந்துவதற்கு முன்பே உணர்ந்து வருந்துவது.

காவிரிப்பூம்பட்டினத்தை விட்டு நடந்து வழியில் ஒரு சோலையில் தங்கியிருந்தபோது, கோவலனையும் கண்ணகியையும் கண்ட காமுகர் இருவர், "காமனும் தேவியும் போன்ற இவர்கள் யாரோ? கேட்டு அறிவோம்" என்று கவுந்தியடிகளை நெருங்கிக் கேட்டனர். "இவர்கள் என் மக்கள்" என்று அடிகள் சொன்ன சொல்லைக் கேட்டதும், "உடன்பிறந்தவர்கள் கணவன்மனைவிபோல் வாழ்வதும் உண்டோ?" என்று அந்தக் காமுகர் கேட்டனர். அப்போது கண்ணகி உற்ற உணர்வு அவளுடைய உள்ளத்தின் மென்மைப் பண்பைக் காட்டவல்லது. காமுகர் சொன்ன சொல்லைக் கேட்டதும், கண்ணகி செவி புதைத்துக்கொண்டு கணவன்முன் நடுங்கினுள்:

உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ கற்றறிந் தீர்எனத்

தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க.

(சிலப். நாடு. 227-230)

வழியில் ஓர் ஐயை கோயிலில் தங்கியிருந்த போது அங்கே வேடர்கள் சூழ வந்து தெய்வம் ஏறிய ஒருத்தி கண்ணகியைப் பார்த்து,

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி...... (சில. வேட்டுவ. 47-50)

என்று உரைத்தபோது கண்ணகி மிகவும் நாணினாள். "என்னவோ மயங்கிச் சொல்கிறாள்" என்று கோவலனுடைய முதுகின் பக்கமாக ஒடுங்கிப் புன்முறுவலோடு நின்றாள்.

பெருந்தன்மை

இவ்வாறு இயல்பால் மென்மையும் கொள்கையால் திண்மையும் உடையவர்களே உலகில் செயற்கு அரிய செயல்களைச் செய்கிறார்கள்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு

(குறள். 261)

என்று திருவள்ளுவர் விளக்கியவாறு தவம் செய்யும் சிறப்பு இவர்களுக்கே உரியதாக உள்ளது. கொள்கைத் திண்மையால் இவர்கள் தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலில் - உற்ற நோய் நோன்றலில் - வல்லவர்களாக விளங்குகிறார்கள். மென்மைப் பண்பால் இவர்கள் பிற

உயிர்க்குத் துன்பம் செய்யாமல் வாழ்வதிலும் வல்லவர்களாக இருக்கிறுர்கள். ஆகவே, திருவள்ளுவர் கூறிய தவத்தின் இரு பகுதியும் இவர்களின் இருவகைத் தன்மையாலும் எளிதில் அமைகின்றன.

கண்ணகியும், இயல்பால் மென்மையும் கொள்கையால் திண்மையும் கொண்டு வாழ்க்கையைத் தவமாக மாற்றியவள் எனலாம். தான் உற்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதில் அவள் எவ்வளவு வல்லவள் என்பதை மேலே கண்டோம். காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலனைப் பிரிந்து தனித்து வாழ்ந்த வாழ்விலும், மதுரைக்கு வந்தபோது வழித்துன்பத்தைத் தாங்கிய ஆற்றலிலும் கண்டோம். பிறர்க்குத் துன்பம் செய்யாமல் வாழவல்லவள் என்பதையும் கண்ணகியின் வாழ்க்கையில் காணலாம். கண்ணகி, தன் துன்பத்திற்காக வேறு யாரையும் பழிக்காமல் ஆற்றலுடன் பல ஆண்டுகள் பொறுத்திருந்ததே இதற்கு நல்ல சான்ருகும். அவளுடைய வாழ்க்கையின் துன்பத்திற்குக் காரணமாக இருந்து கோவலனைத் தன்னிடம் சேர்த்துக் கொண்டவள் மாதவி. அத்தகைய மாதவியையும் கண்ணகி ஒருநாளும் ஒரு சொல்லாலும் பழிக்காமல் இருந்தது பெரிய சான்ருகும்.

மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள்

(சிலப். வேனில். 53)

என்று கோவலனே மாதவியைப் பழித்தான்.

சலம்புணர் கொள்கைச் சலதி (சிலப். கனாத். 69)

என்று மாதவியைப் பற்றிக் கண்ணகியிடமும் பழித்துக் கூறினான். அதைக் கேட்டபோதும் கண்ணகி மாதவியைக் குறித்து ஒரு சொல்லும் கூறவில்லை. சேரன் எடுத்த கண்ணகியின் கோயிலுக்குச் சென்று வழிபடும்போது

அவளுடைய செவிலித்தாய் இந்தப் பெருந்தன்மையை நினைந்து உருகினாள் :

மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதல் கணவன்கைப் பற்றிக்
குடம்புகாக் கூவல் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்.

(சிலப். வாழ்த்துக். 3)

சீற்றம்

இவ்வாறு தன் துன்பத்திற்குக் காரணமாக இருந்து கோவலனைப் பிரித்த மாதவியையும் பழிக்காமல் வாழ்ந்த கண்ணகி, மதுரைநகரில் கோவலன் கொலையைப் பற்றி அறிந்தபின்பு மாறினாள். முதலில் அழுது புலம்பிய கண்ணகி, கணவனைக் கள்வன் என்று பழிகூறிக் கொன்ற கொடுமையை நினைந்ததும் சீற்றம் கொண்டாள் :

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை
எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்.

(சிலப். துன்ப. 30-33)

இதுவே அவள் துயரத்தால் அழுது ஏங்கிய நிலை.

மக்கள் எல்லோரும் கோவலனைக் கள்வன் என்று பழிப்பதை எண்ணியதும் மன்னவன் செய்த தவறு அவளுடைய நெஞ்சில் கொதிப்பு எழச் செய்தது.

மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறுஇழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலம்கொண்டு அழிவலோ ?

மறனெடு திரியும்கோல் மன்னவன் தவறுஇழைப்ப
அறனெனும் மடவோய்யான் அவலம்கொண்டு அழிவலோ ?

செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறுஇழைப்ப
இம்மையும் இசைஒரீஇ இனைந்தேங்கி அழிவலோ ?

என்று படிப்படியாக அவளுடைய அழுகை சீற்றமாக மாறத் தொடங்கியது. மன்னவன் தவறு செய்ததைக் கண்டும், கைம்மை(விதவை)மகளிரைப் போல் பொறுமையோடு அழுது அழிவது தகுமா என்று எண்ணிக் கொதித்தாள். "புகழ் நிறைந்த குடும்பத்துப் பெண்ணாக இருந்தும் அந்தப் புகழைப் பறிகொடுத்துவிட்டு, பழியைச் சூடிக் கொண்டு அழிவேனோ" என்று அவள் எண்ணிய எண்ணமே அவளுடைய பொறுமையை அடியோடு மாற்றி விட்டது. 'தகைசான்ற சொல்'லைக் காக்கும் கடமைப் பொறுப்பு அவளுடைய தவத்தைக் கலைத்தது; பிற உயிர்க்குத் துன்பம் செய்யாத தவப்பகுதியைக் கைவிடச் செய்தது. 'கதிரவனே! என் கணவன் கள்வனா? எல்லாம் பார்த்துக்கொண்டு செல்லும் நீயே சொல்' என்று முறையிட்டபோது, அவளுடைய செவியில் விழுந்த ஒரு குரல் அந்த மாறுதலுக்குத் தூண்டுகோல் ஆயிற்று. "இந்த ஊர் நெருப்புக்கு இரையாகும்" என்றது ஒரு குரல். ஊரெல்லாம் சுற்றி அரற்றிய பிறகும், கணவனுடம்பைக் கண்டு அழுது புலம்பிய பிறகும், பாண்டியனிடம் சென்று வழக்குரைத்து வென்ற பிறகும், அந்தக் குரல் அவளுடைய நினைவை விட்டு நீங்காமல் நின்றது. அதனால், கோப் பெருந்தேவியைப் பார்த்து வஞ்சினம் கூறியபோது, அந்தக் குரலை மறவாமல், "யான் பத்தினியே ஆனால் அரசரோடு மதுரையையும் அழிப்பேன்" என்றாள் :

பட்டாங்கு யானும்ஓர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்

(சில. வஞ்சின. 36-37)

இவ்வாறு சீற்றம் கொண்ட நிலையில்தான், பிற உயிர்க்குத் துன்பம் செய்யாத நோன்பைக் கைவிட்டவள் ஆனாள்; மதுரையையும் அழிக்க வஞ்சினம் பூண்டாள். இளங்கோவடிகளும், தம் மூன்று நோக்கங்களில் ஒன்றாகிய பத்தினிப்பெண்டிரின் பெருமையை விளக்கும் வகையில் கதையைக் கூறுகிறார்; கற்புடைய மகளிரின் ஏவலை மழை கேட்கும் என்பதோடு தீயும் கேட்கும் எனக் காட்டுகிறார்.

கண்ணீரின் ஆற்றல்

அரசையும் மதுரையையும் அழித்தது கண்ணகியின் கண்ணீரா சீற்றமா என்பது ஆராயத்தக்கது. சீற்றத்தை விடக் கண்ணீருக்கு ஆற்றல் மிகுதி என்பதே தமிழ்ச் சான்றோர் கண்ட உண்மை.

> அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
> செல்வத்தைத் தேய்க்கும் படை
>
> (குறள். 555)

என்பது திருவள்ளுவர் கருத்து. அரசனுடைய யானை தேர் குதிரை காலாள் என்னும் நால்வகைப் படையையும் வில் வாள் வேல் முதலாய கருவிகளோடு ஒரு பக்கம் நிறுத்தி, அல்லல்பட்டவர் ஆற்றாமல் அழும் கண்ணீரை அதன் எதிர்ப்பக்கம் நிறுத்திக் காட்டுகிறார் திருவள்ளுவர். அரசனுடைய படை போர் செய்து அழிக்க வேண்டும்; ஆனால் கண்ணீர்ப்படையோ போர் செய்யாமலே எளிதில் தேய்த்து அழித்துவிட வல்லது என்கிறார். கண்ணீர்ப் படையை வெல்ல வல்ல ஆற்றல் உலகில் எதற்குமே இல்லை என்பது திருவள்ளுவர் கண்ட உண்மை. இந்த உண்மையை அவர் அரசியல்முறையைக் கூறுமிடத்தில் வற்புறுத்து கிறார். கொடுங்கோலாட்சிக்கு அழிவு விளைக்க வல்லது கண்ணீர்ப்படையே என்பதை ஆளும் தலைவர் மறக்கக் கூடாது என்று தெரிவிக்கும் முறையில் எடுத்துரைக்

கிறார். உலகில் பல வல்லரசுகளும் பெருமன்னர்களும் அழிந்த காரணம் அல்லல்பட்டவர்களின் கண்ணீரே என்பதை வரலாறும் அன்றுமுதல் இன்றுவரையில் திரும்பத் திரும்ப எடுத்துரைத்து வருகிறது. இளங்கோவடிகளுக்கும் இந்த உண்மை தெரியும். தெரிந்துதான்,

அல்லல் உற்றுஆற்றாது அழுவாள்

(சிலப். ஊர்சூழ். 15)

என்று திருவள்ளுவரின் சொற்களையே திரும்பஎடுத்துரைக்கிறார். ஆயினும் பத்தினிப் பெண்களின் ஏவலை மழை கேட்பதுபோல் தீயும் கேட்கும் என்பதை விளக்கச் சீற்றத்தால் மதுரை எரிந்தது என்கிறார். மதுரையின் அழிவு ஒருபுறம் இருக்க, அரசன் அழிந்ததுமட்டும் கண்ணகியின் சீற்றத்தால் அன்று; கண்ணகியின் கண்ணீராலேயே அரசன் அழிந்தான் என்று இளங்கோவடிகள் தெளிவிக்கிறார். "நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்! நீ யார்" என்றே முதலில் கேட்டான் அரசன். அவன் கண்ணகியின் சீற்றத்தைக் கண்டு அஞ்சவில்லை; கண்ணீர்க்கோலத்தைக் கண்டே அஞ்சினான்; கூடு ஆயினான்; உயிர் தோற்றான்.

காவி உகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டுஅஞ்சிக்
கூடலான் கூடுஆயி னான்.

(சிலப். வழக்குரை)

மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக் காரிகைதன் சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர். (ஷை)

என்று இளங்கோவடிகள் கூறும் சான்று உள்ளது. கண்ணகிக்குக் கோயில் எடுத்து வாழ்த்திய வாழ்த்தொலியிலும் இந்தக் கண்ணீரின் ஆற்றலே கேட்கிறது :

தொல்லை வினையால் துயர்உழந்தாள் கண்ணின்நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ

என்னும் வாழ்த்தும் சான்ருக உள்ளது.

தணிதல்

மதுரைக்கு வரும்வழியில் ஒரு சோலையில் தங்கியிருந்த போது, எள்ளி நகையாடிய காமுகர் இருவரையும் முதுநரியாகி ஊளையிடுமாறு கவுந்தியடிகள் சாபம் இட்டபோது, அவர்கள் இருவரும் உற்ற துன்பத்தைக் கண்டு கோவலன் வருந்திஞன் ; கண்ணகியும் நடுங்கி வருந்திஞள். "நெறியிலிருந்து வழுவிய இவர்கள் தீய சொல் கூறியபோதிலும் அறியாமையால் செய்த பிழை என்று அறிந்து மன்னிக்க வேண்டும்; தவத்தால் சிறந்த நீங்கள் இவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து உய்திக்காலம் உரைக்கவேண்டும்" என்று கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளை வேண்டினர். தவறு செய்த காமுகரிடத்திலும் இவ்வளவு இரக்கம் உற்ற கண்ணகி, ஒரு தவறும் செய்யாத மதுரை நகரத்தார்க்கு நெருப்பால் பெருந்துன்பம் செய்யத் துணிந்தது பொருந்தாததாகவே தோன்றுகிறது. இரக்கமே இல்லாதவள்போல் அவள் கொண்ட சீற்றம் கொடியதாகவே உள்ளது. நல்லோரையும் வலிமை இல்லோரையும் விட்டு மற்றவரிடமே செல்லுமாறு தீயைப் பணித்ததாக இளங்கோவடிகள் கூறுவது இந்த முரண்பாட்டை அமைப்பதற்கே ஆகும்.

ஆயினும், சீற்றம் தணிந்தபின், மீண்டும் பழைய கண்ணகியைக் காண்கிறேம். தன் துன்பம் பொறுத்துப் பிறர்க்குத் துன்பம் செய்யாத தவ வாழ்வையே மீண்டும்

காண்கிறோம் ; "என் கணவரைக் காண்பதற்குமுன் ஓர் இடத்தில் இருக்கவும் மாட்டேன் ; நிற்கவும் மாட்டேன்" என்று கொற்றவை கோயிலின் வாயிலில் தன் கைவளையலை உடைத்து எறிந்தாள் ; "இந்த மதுரை நகரத்திற்குள் யான் புகுந்தது கிழக்கு வாயிலின் வழியாக ; அப்போது என் கணவர் என்னோடு இருந்தார். இப்போது நகரத்தின் மேற்குவாயில் வழியாக வெளியேறுகிறேன் ; கணவரை இழந்து தனியே செல்கிறேன்" என்று உள்ளம் நொந்து கூறினாள். இரவும் பகலும் அறியாமல் மயங்கிச் சோர்ந்து வையை ஆற்றின் கரையில் நடந்தாள். மேடு என்றும் பள்ளம் என்றும் அறியாமல் ஏறியும் இறங்கியும் நேராகச் சென்றாள். திருச்செங்குன்றத்தில் அடிவைத்து ஏறினாள். ஒரு வேங்கைமரத்தின் நிழலில் நின்றாள். "யான் ஒரு பாவி" என்று ஏங்கியவாறே பதினான்காம்நாள் வரையில் இருந்தாள் :

கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்எனக்
கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்துக்
கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்குவன
இரவும் பகலும் மயங்கினள் கையற்று
உரவுநீர் வையை ஒருகரைக் கொண்டாங்கு
அவல என்னாள் அவலித்து இழிதலின்
மிசைய என்னாள் மிசைவைத்து ஏறலின்......
நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ்ஓர்
தீத்தொழி லாட்டியேன் யான்என்று ஏங்கி
எழுநாள் இரட்டி எல்லை சென்றபின்

(சிலப். கட்டுரை. 179-193)

கண்ணகியின் வாழ்க்கை முடிவாகிய இப்பகுதியில் இடைநடுவே வந்த சீற்றம் காணும்; பழைய தவ வாழ்வே காணப்படுகிறது. "கணவனோடு புகுந்தேன்; கணவனை இழந்து வறியேனாய்ச் செல்கிறேன்" என்று கூறுவதிலும் "தீத்தொழி லாட்டியேன் யான்" என்று ஏங்குவதிலும் பழைய மென்மைப் பண்பே வாழ்கிறது. "கணவனைக் காணும் வரையிலும் இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்" என்று மேடு பள்ளம் அறியாமல் அடிவைத்துச் சென்ற துணிவிலும், பதினான்காம்நாள் வரையில் ஒரு வேங்கைமர நிழலில் ஒரே ஏக்கத்துடன் நின்ற நிலையிலும் பழைய கொள்கைத்திண்மையே விளங்குகிறது.

தவ வாழ்வு

இயல்பால் மென்மையும் கொள்கையால் திண்மையும் கொண்டு துன்பம் பொறுத்துக் கண்ணகி வாழ்ந்த தவ வாழ்வு பெரியது; மிகப் பெரியது. கணவனுக்காகவே வாழ்ந்த வாழ்வில் அவள் மேற்கொண்ட இல்லறத் தவம் கணவன் திருந்துமாறு செய்தது. கண்ணகியின் தவம் பலித்தது; கோவலன் திருந்தினான். ஆனால் ஒரு வாள் இடையூறு செய்தது. கொலையாளியை வெட்டும் வாள் கோவலனை வெட்டியது. அந்த இரும்புக் கருவிக்கு, கொலையாளியின் உடலுக்கும் கோவலனுடைய உடலுக்கும் உள்ள வேறுபாடு தெரியவில்லை. பல ஆண்டுகளாய்க் கண்ணகி செய்த தவத்தையும் அந்த வாள் அறியவில்லை; தவப் பயனாய்த் திருந்திய கோவலனுடைய பண்பாட்டையும் அந்த வாள் அறியவில்லை. பட்டை மூடிய மரத்திற்கும் பண்பாடு மிக்க மனத்திற்கும் வேறுபாடு அறியாத சிறு கருவி, கயவன் உடலுக்கும் காந்தி உடலுக்கும் வேறுபாடு அறியாத சிறு கருவி, பலநாள் தவப்பயனை ஒரு நொடியில் பாழாக்குவது உலகத்தின் இயற்கை!

ஆயின், எது அழித்தாலும், என்ன அழிந்தாலும், வீர வாழ்வு அறியாப்புகழ் பெறுகிறது. கண்ணகியின் வீரம் தவ வாழ்வின் பயனாக வளர்ந்த வீரம்! ஆதலின் அது துன்பம் விளைத்துக் கொல்லத் துணிந்த கயவரின் வீரம் அன்று; துன்பம் பொறுத்துச் சாகத் துணிந்த சான்றோரின் வீரம்!

கற்பின் பெருமை

சாக்ரடீஸ், ஏசுநாதர், காந்தியடிகள் முதலான சான்றோரின் வீரம், ஒரு வீட்டின் மூலையில் வாழ்ந்த கண்ணகிக்கு எவ்வாறு அமைந்தது என்று வியப்புறலாம். அதுவே கற்பின் பெருமை. ''கற்பின் திண்மை இருந்தால், பெண்ணைவிடப் பெருமை உடையவை எவை உள்ளன?'' என்று திருவள்ளுவர் உலகத்தை வினவிய வினாவுக்கு விடை சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வாழ்வில் உள்ளது.

உயர்ந்த ஒருவரை மதித்து நம்பிக்கை கொண்டு அவரை வழிபட்டால் அவர் பெற்ற உயர்வை எளிதில் பெறமுடியும். அவரிடம் குறை சில இருப்பினும், வழிபடுவோர் அந்தக் குறையும் நீங்கி உயர்வு பெற முடியும். இதுவே சமயத்துறையில் குருவழிபாடு எனப்படுவது. குருவழிபாடு என்பது குருவின் உடம்பையோ படத்தையோ வழிபடுவது அன்று; குருவின் கொள்கையை வழிபடுவதே உண்மையான குருவழிபாடு ஆகும். உடம்பையும் படத்தையும் வழிபடுவோர் இழுக்கலுறுவர்; இடர்ப்படுவர். கொள்கையை வழிபடுவோர் பயன் பெறுவர்; உயர்வு பெறுவர். சமயத்துறையில் குருவழிபாடாக உள்ள இதுவே அரசியல் துறையிலும் மற்றத்துறையிலும் வீரவழிபாடாக உள்ளது. வீரவழிபாட்டில் கொள்கையைமட்டும் வழிபடும் உண்மை இருப்பின் உயர்வு பெறுவது உறுதி.

குருவழிபாடாக, வீரவழிபாடாக மற்றத் துறைகளில் விளங்கும் இதுவே, குடும்பத் துறையில் கற்பு என்னும் பெயர்பெற்று விளங்குகிறது. உண்மையும் தூய்மையும்

கொண்டு கணவனை வழிபடும் மனைவியின் நெறியே கற்பு நெறி. அதனால் உயர்வு பெற முடியும் என்பதற்குக் கண்ணகி போன்ற கற்புடைமகளிர் எல்லா நாடுகளிலும் சான்ருக விளங்குகின்றனர்.

வணங்கிப் போற்றப்படும் தலைவர் பல ஆண்டுகளாகப் பாடுபட்டு அறிந்து உயர்வு அடைந்திருக்கலாம்; ஆயின், தலைவன் காட்டிய நெறியில் வழிபட்டு உணர்ந்து நிற்பவர் அந்த உயர்வை எளிதில் அடையமுடியும். பாடுபட்டு வழி காட்டும் தலைவர் குறை உடையவராகவும் இருக்கலாம். ஆயின், அவரை வழிபட்டு உறுதியாய் ஒழுகுபவர் அந்தக் குறையும் அற்றவராய் உயரமுடியும். மற்றத் துறைகளில் காணும் இந்த உண்மையே கற்புத் துறையிலும் காணப்படுகிறது; கண்ணகியின் தவ வாழ்விலும் காணப்படுகிறது.

வழிகாட்டுவோர் அறிவின் துணைகொண்டு பாடுபட்டு உயர்ந்தவர். வழிபடுவோர் உணர்வின் துணைகொண்டு எளிதில் உயர்பவர். அறிவு, படிப்படியாக ஏறிச்செல்வது; கால் தடுமாறி வழுக்கி விழவும் இடம் உள்ளது. உணர்வு, நேரே பறந்து சென்று அடைவது; குறிக்கோள்கள் தவருத வரையில் பயனும் தவருதது. குறிக்கோள் தவருமல் இருப்பதற்காகவே, கொள்கைத் திண்மை வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. அந்தத் திண்மைக்கே குடும்ப வாழ்வில் கற்பு என்ற பெயர் வழங்குகிறது.

அறிவுநெறி நேர்வழி; ஆனல் நெடுவழி; களைப்புக்கும் சலிப்புக்கும் இடம் தருவது. அன்புநெறி குறுக்கு வழி; சுருக்குவழியும் ஆகும்; ஆனல் குறிக்கோள் தவருமல் திசை தடுமாருமல் செல்வோர்க்கே வெற்றி நல்குவது. கற்புடைய மகளிரின் வாழ்க்கைவெற்றி, அன்புநெறி நல்கும் வெற்றியாகும்.

பலரும் போற்றல்

சிலப்பதிகாரம்,பெண்ணின் பெருமையைக் கூறுகிறது: கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெற்ற பெண்ணின்

பெருமையைக் கூறுகிறது. ஒரு பக்கம் கண்ணகி; மற்றொரு பக்கம் அவளுடைய பெருமையைப் போற்றி வணங்குவோர்; இவர்களையே சிலப்பதிகாரம் காட்டுகிறது.

ஒரு தனி வாழ்க்கையைப் போற்றிய அம்மையாராகிய கவுந்தியடிகள்; கண்டதும் இணையடி தொழுது வீழ்ந்த பாண்டியன் கோப்பெருந்தேவி; கேட்டதும் 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என்ற சேரன் கோப்பெருந்தேவி; கலையரசியாய் விளங்கியிருந்து கலையையும் துறந்த மாதவி; தமிழ்ப்புலவர் சாத்தனார்; சேரவேந்தன் செங்குட்டுவன்; அரசு துறந்து குணவாயில் கோட்டத்தில் குணக்குன்றாய் விளங்கிய இளங்கோவடிகள்—இவர்கள் அனைவரும் கண்ணகியைப் போற்றக் காண்கிறோம்.

வழிப்பயணத்தில் சிறிது தொலைவு உடன்நடந்து பழகிய அளவிலேயே கவுந்தியடிகளாகிய துறவியார் கண்ணகியிடம் பற்றுக்கொண்டு,

என்பூங் கோதை (சிலப். நாடு. 231)

என்றார். சிலநாட்கள் வழிப்பயணத்திலே பழகிய பிறகு அந்தத் தாய்மனம் மேலும் வளர்ந்துவிட்டது. கண்ணகியை யாரிடம் சேர்ப்பது, தீங்கற்ற இடமாக இருக்கவேண்டுமே என்ற கவலை வந்துவிட்டது.

கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பாடு இல்லை
தீதுஇலள் முதுமகள் செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்றுஎன எண்ணினள் ஆகி

(சிலப். அடைக்கலக். 121-124)

மாதரியின் குடும்பத் தொழிலின் நன்மை பற்றியும் அவளுடைய பண்பு பற்றியும் அனுபவம் பற்றியும் நேர்மை எளிமை முதலியன பற்றியும் தீரத் தெளிந்த பிறகே

கண்ணகியை அவளிடம் அடைக்கலமாக ஒப்புவிக்க மனங் கொண்டார். பெற்ற தாய்போல் கண்ணகியை அழகு படுத்த வேண்டும் என்றும், கவலையின்றிக் காக்க வேண்டும் என்றும் அந்தத் துறவியாரின் நெஞ்சம் எண்ணி உருகியது.

மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தல் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு

(ஷ 131-136)

என்று நீராட்டல், மைதீட்டல், மலர்அணிதல், தூயஆடை உடுத்தல், துணையாக இருத்தல் ஆகிய எல்லாவற்றையும் தாயின் பரிவோடு எடுத்துரைத்து அடைக்கலம் தந்தார். உடனே தம் அறிவுநிலையில் நின்று, "மகளிர்க்கு இன்றி யமையாத உயர்ந்த பண்பாகிய கற்புப் பூண்டவள் இவள். கற்பிற் சிறந்த இவளே தெய்வம். இந்தத் தெய்வத்தைத் தவிர வேறு சிறப்புடைய தெய்வத்தை யாம் கண்டதில்லை" என்று கண்ணகியின் பெருமையை வாயாரப் போற்றி யுரைத்தார் :

இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.

(ஷ 142-144)

இவ்வாறு கூறியவர் ஓர் அம்மையார்; துறவறம் பூண்டவர்; அன்று காலையில்தான் பெண்டிரும் உண்டியும் துன்பம் தருவன என்று ஓதியவர். இவ்வாறு அவர் கூறியதாக நூல் எழுதியவர் மற்றொரு துறவியார்;

அரசையும் போற்ருது துறந்த இளங்கோவடிகள். கண்ணகி இவ்வாறு துறவிகளும் போற்றும் பெருமை பெற்று விளங்கக் காண்கிரேம்.

வழிபாடு

இளங்கோவடிகள் தொடக்கத்தி லிருந்து இறுதிவரையிலும் வழிபாட்டு நெஞ்சத்தோடு நூல் எழுதியுள்ளார். கோவலனும் மாதவியும் இன்புற்ற வாழ்வைப் பல அடிகளால் வருணிக்கிறவர், கோவலனும் கண்ணகியும் இன்புற்ற வாழ்வைச் சில சொற்களால் தூய வரம்புடன் அமைத்துக் கூறுகிருர். மாதவியின் வாழ்வை வருணிப்பதிலும், பிற்காலத்துப் புலவர் போல் வரம்புகடந்து நாகரிகமும் இழந்து காமுகர் கூற்றுப் போல் கூறவில்லை; அவ்வாறு கீழ்நிலையில் நின்று வருணிக்க இளங்கோவடிகளின் தூய நெஞ்சம் இடம்தரவில்லை. அந்நிலையை நோக்க இளங்கோவடிகள் வருணித்துள்ள மாதவியின் வாழ்வு மிக மிக நாகரிகம் வாய்ந்தது எனலாம். கண்ணகியின் இன்ப வாழ்வைக் கூறுமிடத்தில் இளங்கோவடிகளின் வழிபாட்டு நெஞ்சம் மூன்றே சொற்களின் அளவில் நிற்கிறது; 'தாரும் மாலையும் மயங்கின' என்று கூறி நிற்கிறது.

காட்டுவழியில் கண்ணகி அஞ்சாதவாறு கோவலன் தேற்றிச் செல்வதைக் கூறுமிடத்திலும் இளங்கோவடிகள் இவ்வாறே விளங்குகிருர். "புலி திரியும்; கோட்டான் கூவும்; கரடி முழங்கும்; இவற்றைக் கேட்டு அஞ்சி வருந்தாதே" என்று சொல்லிக் கண்ணகியின் கையை எடுத்துக் கோவலன் தன் தோளில் வைத்துக்கொண்டு சென்ருன் என்கிருர்:

> ஆரிடை உழந்த மாதரை நோக்கிக்
> கொடுவரி மறுகும் குடிஞை கூப்பிடும்

இடிதரும் உளியமும் இனையாது ஏகுளனத்
தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி.

(சிலப். புறஞ்சேரி. 30-33)

கலை : அறம்

மாதவியின் வாழ்வில் அமைந்திருந்த கலைச்சிறப்புக்களை யும் ஆடம்பரச் சிறப்புக்களையும் இளங்கோவடிகள் மிக விரிவாக எடுத்துரைக்கிறார். மாதவியின் முதல்கடிதமோ பல மலர்களின் இயற்கை மணங்களோடு இன்ப வாழ்வின் இணையிலாச் சிறப்பும் கலந்ததாய்க் கலைமணம் கமழ்கிறது.

எண்ணெண் கலையும் இசைந்துடன் போகப்
பண்ணும் திறனும் புறங்கூறும் நாவின்
தளைவாய் அவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை எழுதி

(சிலப். வேனிற். 64-67)

என்று மாதவி கடிதம் எழுதிய முறையைக் கூறுவதிலும் கலைச்சிறப்பும் காமச்சிறப்பும் மிளிர்கின்றன. இந்திரவிழாவின் ஆடலும் கோலமும் முடிந்தபின் மாதவி தன்னை அலங்கரித்துக்கொள்வதைக் கூறும் பகுதியும் இவ்வாறே ஆடம்பரச் செருக்கும் செல்வச் சீர்மையும் கலந்து விளங்குகிறது :

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத் திருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீர் உரைத்தநெய் வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையின் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி

அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇப்
பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை
அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து
குறங்கு செறிதிரள் குறங்கினில் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறம்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக்கு அணிந்து
மத்தக மணியொடு வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை
பரியகம் வால்வளை பவழப் பல்வளை
அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தள் மெல்விரல் காப்ப அணிந்து
சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை
அங்கழுத்து அகவயின் ஆரமோடு அணிந்து
கயிற்கடை ஒழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையின் சிறுபுறம் மறைத்துஆங்கு
இந்திர நீலத்து இடையிடை திரண்ட
சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
அங்காது அகவயின் அழகுற அணிந்து
தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
மையீர் ஓதிக்கு மாண்புற அணிந்து

(சிலப். கடலாடு. 76-108)

அழகு என்பதையும் ஒரு கலையாகப் பயின்றவள் மாதவி என்பதை இளங்கோவடிகள் இங்கே காட்டுகிறார். தமிழ்நாட்டு நறுமணப் பொருள்கள்முதல் பல்வேறு வகையான அணிகலன்கள் வரையில் எல்லாம் மாதவியின் மேனியில் விளங்கின எனக் கூறுகிறார். இந்தப் பகுதியைக் கற்கும்போது, இளங்கோவடிகளின் அரண்மனை வாழ்க்கையின் அனுபவமே நினைவுக்கு வருகிறது. பல்வகை ஆடல், பல்வேறு இசைவகை, இசைக்கருவிகளின் வகை முதலிய கலைத்துறையில் வல்லவராய் அவற்றை எல்லாம் விளக்கிய இளங்கோவடிகள் அலங்கார வகைகளையும் விளக்குவதற்குத் துணை செய்தது எது? தமிழ்நாட்டுப் பெருவேந்தனாக விளங்கி இமயத்தின் வரம்பைக் கண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய இளைய மகனாய்ச் செல்வச் சிறப்புடன் அரண்மனையில் வாழ்ந்து, ஆடம்பர வாழ்க்கையின் எல்லையை அறிந்திருந்த அனுபவமே இளங்கோவடிகள் இவ்வாறு எழுதத் துணைசெய்தது. கற்போர்க்குத் தெவிட்டுமாறு கலைமணமும் ஆடம்பரச் சிறப்பும்விளங்க மாதவியை வருணிக்கும் புலவர் பெருமான் கண்ணகியை வருணிக்கும்போது தொடக்கத்திலிருந்தே தூய்மையும் எளிமையும் விளங்க எடுத்துரைக்கிறார்.

மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ

(சிலப். மங்கல. 28-29)

என்று எளிய முறையிலேயே திருமணத்தில் கண்ணகியை அறிமுகம் செய்கிறார். மனைவாழ்க்கையில் கோவலன் வாயால் புகழுரை கேட்கிறோம். அந்தப் புகழுரையிலும் தூய்மையும் எளிமையும் உணர்கிறோம். மயிலும் அன்னமும் கிளியும் கண்ணகிக்குத் தோற்ற தோல்வி

கூறப்படுகிறது. கலையில் செருக்குண்டு மயங்கும் இயல்புடைய கோவலனும், வேறு அணிகலன்கள் ஏன், மலர்மாலைகள் ஏன், வாசனைக்குழம்புகள் ஏன் என்று இயற்கையழகைப் பாராட்டும் முறையே கூறப்படுகிறது. 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே' என்றும், 'மலையிடைப் பிறவா மணியே, அலையிடைப் பிறவா அமிழ்தே, யாழிடைப் பிறவா இசையே' என்றும் பாராட்டும் பாராட்டிலும் ஒப்புயர்வற்ற தூய்மைச் சிறப்பே எடுத்துரைக்கப்படுகிறது.

தவக்கோலம்

வாழ்க்கையின் தொடக்கத்தில் ஒருயிராய் ஒன்றுபட்டு வாழ்ந்தபோது ஆடம்பரமும் செல்வச் செருக்கும் இல்லாத வகையில் இளங்கோவடிகள் கண்ணகியை வருணித்த காரணம், அவருடைய நெஞ்சில் குடிகொண்ட வழிபாட்டு உணர்வே ஆகும். அதனால்தான், கண்ணகியின் பிறந்த குடும்பமும் புகுந்த குடும்பமும் மிகப் பெருஞ் செல்வம் வாய்த்த குடும்பங்களாக இருந்தும், அவளை வருணிக்கும் போது, தம் அரண்மனைச் செல்வ வாழ்வின் அனுபவத்தையும் பயன்படுத்தாமல் விட்டுத் துறந்தார். ஆயின், அலங்காரம் துறந்த கண்ணகியின் தவக்கோலத்தை வருணிப்பதில் அவருடைய ஆர்வம் விளங்குகிறது:

அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியின் பிறிதுஅணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்

பவள வாள்நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி...

(சிலப். அந்தி. 47-57)

இவ்வாறு அணிகலன்களைத் துறந்து அலங்காரங்களையும் இழந்து கண்ணகி விளங்கிய தவக்கோலத்தை எடுத்துரைப்பதில் இளங்கோவடிகள் ஆர்வம் கொள்கிருர். எளிமையும் தூய்மையும் விளங்க இவ்வாறு கண்ணகியைப் பற்றிக் கூறும்போது, சேரர் அரண்மனையின் செல்வ வாழ்வை விட்டு வெறுத்துக் குணவாயில்கோட்டத்துத் தவ நெறியை விரும்பி வாழும் அவருடைய அருள்நெஞ்சமே விளங்குகிறது. அந்தத் துறவுநெஞ்சமே வழிபாட்டு உணர்வோடு கண்ணகியின் தவக்கோலத்தை எடுத்துரைப்பதில் ஆர்வம் கொள்கிறது. தாம் எழுதிய நூலுக்குப் பெயர் வைக்கும்போதும், கண்ணகியின் காலில் விளங்கிய சிலம்பைக் கண்டு வழிபடும் உணர்வு விளங்க, சிலப்பதிகாரம் என்று பெயர் அமைத்தார்.

கலைக்கோயில்

கற்பின் ஞாயிறு கண்ணகி, தமிழகத்தின் கீழ்த் திசையில் தோன்றிக் கற்பொளி பரப்பி விளங்கியது; சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம் திருமண வாழ்த்தொலியைக் கேட்டது. தமிழகத்தின் நடுவே அந்த ஞாயிறு கடுமையாய்க் காய்ந்தது; பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை, சீற்றம் மிக்க வீரவுரையைக் கேட்டது. தமிழகத்தின் மேற்குத் திசையில் அந்த ஞாயிறு சாய்ந்து மறைந்தது; சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சிமாநகரம் வழிபாட்டின் வாழ்த்தொலியைக் கேட்டது.

கண்ணகியின் புகழைச் செங்குட்டுவ மன்னன் கல்லிலே நாட்டிக் கோயில் எழுப்பினான்; இளங்கோவடிகள் கலையிலே அமைத்துக் காவியம் இயற்றினார்; தமிழ் மக்கள் அரசன் எழுப்பிய கற்கோயிலை மறந்தாலும் அடிகள் இயற்றிய காவியக் கோயிலை மறவாமல் போற்றி வருகின்றனர்.

"நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரம்என் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு."